# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 02
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
பெப்ரவரி - 2007
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St. Mannar, Sri Lanka.
Telephone No : 023-2232377, Fax No - 023 - 2232377, E-mail - christhunesan@pre.slt.lk / pc_nesan@yahoo.com


# தவக்காலச் சிறப்பிதழ்

## தவக்காலம் அருளின் காலம்



தவக்காலம் விடுக்கும் அழைப்பு

**மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்**





சுகமான சுமைகள் - தவக்காலச் சிந்தனை (பக் 02)


இயேசு பேசும் பாடுகளின் பாதை (பக்-09)

அன்பியம் ஓர் வாழ்க்கை முறை
மன்னார் ஆயர் (பக் - 04)

மன்னார் மாதோட்ட மண்ணில் கூத்துக் கலை மரபுகள் (பக் 14)

செப ஆண்டு சிறப்புக் கட்டுரைகள் (பக் 10)




பஸ்ரியன் அடிகள்
நெஞ்சைவிட்டு நீங்காத நினைவுகள் (பக் 11)




## உனக்காக நான் மரித்தேனே! எனக்காக நீ என்ன செய்தாய்?

# மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## தவக்காலச் சிந்தனை

## சுகமான சுமைகள்!

### முரண்பாட்டில் உடன்பாடா?

வாழ்க்கை என்பது துன்பம் நிறைந்த இன்பம். சோகம் நிறைந்த சுகம். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இதுதான் உண்மை.

"சுமைகள் என்றாலே சோகம்தானே ..... அது எப்படி சுமைகள் சுகமாக இருக்க முடியும்? துன்பத்தில் எப்படி இன்பம் இருக்க முடியும்? சோகத்தில் எப்படி சுகம் காண முடியும்?" என்று நீங்கள் கேட்பது எனக்கும் கேட்கின்றது. இந்த முரண்பாட்டின் மத்தியில் உடன்பாடு காண்பது சற்றுக் கஸ்ரமாக இருந்தாலும் அதைக் கண்டுபிடிப்பதும் உள்ளூர ஏற்றுக்கொள்வதும் நமது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையான தத்துவமாக உள்ளது. இது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகவும் உள்ளது.

### இன்றைய சிந்தனைப்போக்கு

இயேசுவின் பாடுகளைச் சிந்திக்கும் தவக்காலத்தில் நாம் அடியெடுத்து வைக்கின்றோம். இவ்வேளையில் கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய அம்சங்களில் ஒன்றான சிலுவையின் பாதையைக் குறித்து, துன்பத்தின் பாதையைக் குறித்துச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

சிலுவைகளை, பாடுகளை, கஸ்ர துன்பங்களை நிராகரித்துவிட்டு, எப்போதும் மகிழ்வையும் நிறைவையும் மட்டுமே எதிர்பார்க்கின்ற சிந்தனைப் போக்கே இன்று வளர்ந்து வருகின்றது. எப்போதும் வெற்றி, உயர்வு, பணம், பெயர், புகழ் என்ற நிலையிலேயே இன்றைய மனிதன் சிந்திக்கின்றான். இன்றைய கணனி யுகத்து மனிதனின் சிந்தனைப்போக்கை பின்புலமாக வைத்துக்கொண்டு இன்றைய கிறிஸ்தவ வாழ்வில் சிலுவையின் பொருள் என்ன? துன்பங்களின் அர்த்தம் என்ன? என்பதைப் பற்றி சிந்திக்க அழைக்கின்றேன்.

### சிலுவை! - ஏற்பதா? நிராகரிப்பதா?

நம் ஆண்டவர் இயேசு நம் வாழ்வின் சிலுவைகளை நிராகரிக்கும்படி சொல்லவில்லை. அவற்றை ஏற்றுக் - கொள்ளும்படிதான் சொல்லுகிறார். "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (மத். 16 :24)

இயேசுவையும் சிலுவையையும் பிரித்துப் பார்க்க முடியாது. "சிலுவை இல்லாமல் இயேசு மட்டும் வேண்டும்" என பகுத்தறிவாளர்கள் சொல்வர். "இயேசு இல்லாத சிலுவை மட்டும் வேண்டும்" என்று பழமைவாதிகள் சொல்வர். "சிலுவை இல்லாத இயேசு என் மீட்பராக இருக்க முடியாது" என்று உண்மையான கிறிஸ்தவர்கள் சொல்வர்.

"நானோ நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன்." (கலாத் 6:14) என்கிறார் புனித பவுல். ஏனென்றால் வெற்றியின் மகத்துவம் அந்தச் சிலுவையில் அடங்கியிருக்கிறது என்பதை அவர் அறிந்து வைத்திருந்தார்.

### சிலுவை! நம் வாழ்வின் மையம்

சிலுவையில் இறந்த இயேசு உயிர்த்தெழுந்ததனால் சிலுவை வெற்றியின் சின்னமானது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது வேலையைத் தொடங்குமுன், செபம் செய்யும்முன், காலையில் துயில் எழுந்தபின், பிறரை ஆசீர்வதிக்க, சாப்பிடமுன் ... **தந்தை மகன் தூய ஆவி** என்ற மூவொரு கடவுளை வாழ்த்தச் சிலுவை அடையாளம் வரைகின்றான்.

ஏனென்றால் அந்தச் சிலுவையில்தான் வெற்றி என்ற கனி மறைந்துள்ளது. வெற்றியின் சின்னமாகப் போற்றப்படுகின்ற, "சிலுவையைப் பற்றிய செய்தி அழிந்து போகின்றவர்களுக்கு மடமையே. ஆனால் மீட்புப்பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை." (1கொரி. 1 : 18) என சிலுவையின் வல்லமையைப் பற்றி பவுலடியார் கூறுகின்றார். மேலும் அவர், "அச்சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கிறது." (1 கொரி 1 : 23) என்கிறார். ஆனால் கிறிஸ்தவர்கள் இந்தச் சிலுவையில்தான் வலிமையையும் ஞானத்தையும் பெறுகின்றனர். எனவே சிலுவை நம் கிறிஸ்தவ வாழ்வின் மையமாக உள்ளது.

### முள்முடி இல்லாமல் மணிமுடி இல்லை

முள் இல்லாமல் ரோஜா மலர் இல்லை. துன்பம் இல்லாமல் இன்பம் இல்லை. முள்முடி இல்லாமல் மணிமுடி இல்லை. இதைத்தான் நம் முன்னோர் சொல்லி வைத்தார்கள், "பாடு இன்றேல் பட்டம் இல்லை" என்று.

இயேசுவின் ஆச்சரியமான உயிர்ப்பும், மகிழ்வான விண்ணேற்றமும் எப்போது வந்தன? இயேசுவின் பாடுகள், இறப்பு இவற்றின் பின்னர்தானே? ஆகவே சோகத்தில் சுகம் காண ........ துன்பத்தில் இன்பம் காண ... கற்றுக்கொள்வோம். இயேசுவின் பாடுகள், மரணத்தில் நமது துன்பங்களுக்கான பொருளைப் புரிந்துகொள்வோம். முரண்பாட்டில் உடன்பாடு காணுவோம். எனவே சிலுவை என்பது சுகமான சுமைதானே?

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,

அன்புடன், அருட்பணியாளர் நேசன்

மன்னா பதிப்பாசிரியர்



# வாசகர் எண்ணங்கள்



### புலம்பெயர்ந்து வாழும் தமிழ் கத்தோலிக்க மக்களின்

## மனதைக் கவர்ந்த மன்னா!

ஓர் பத்திரிகையை வெளியிடுவது சுலபமான காரியமல்ல. அதிலும் இந்த இக்கட்டான காலகட்டத்தில், ஓர் காலக் கண்ணாடியாக - மக்களின் மனதில் சிந்தனையைத் தூண்டிவிடும் ஓர் சிறந்த ஊடகமாக மாதாமாதம் வெளிவரும் 'மன்னா'வை பாராட்டாமல் இருக்க முடியாது. சிறியோர், முதியோர், படித்தவர், பாமரர், என அனைவரின் மனத்திலும் ஓர் ஆன்மீக ரீதியான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களின் அறிவு வளர்ச்சியை மேம்படுத்த உதவும் சிறந்த வெளியீடு இம் 'மன்னா' பத்திரிகை!

அதுமட்டுமல்ல எமது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையால் உலகின் பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ் கத்தோலிக்க மக்களின் மனதைக் கவர்ந்த இந்த இதழின் சிறப்பை அறியாதோர் இன்னும் பலர் சில நாடுகளில் உள்ளார்கள் என்பதும் உண்மை.

இக்குறையை நிவர்த்திசெய்ய வேண்டிய வழிவகைகளைக் கையாண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டால் மிகவும் நலமாயிருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து.

வாழ்க! வளர்க! 'மன்னா' இதழ். நன்றி

*ஆர் எல். சேவியர், கனடா*

### பாதைகள் மூடியபோதும் – நீ மட்டும் செய்திகொண்டு

## வீடு நோக்கி வருகின்றாய்!

அன்பின் மன்னா, எமது நாட்டிலே தற்போது ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலைபற்றி நாம் யாவரும் அறிவோம். எமது மக்களின் வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்ட இந்த நிலையிலும், பாதைகள் பூட்டப்பட்ட இன்றைய சூழ்நிலையிலும் நீ மட்டும் தவறாமல் மாதம் ஒருமுறை வந்து எமது வீட்டைத் தட்டுகிறாய்.

"மன்னாவே" நீ எமக்கு செய்கின்ற சேவைக்கு நாங்கள் ஆயிரம் நன்றிகள் சொன்னாலும் போதாது. உன் சேவை தொடர, உன் புகழ் வளர வாசகனாகிய என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

*ம. காந்தன், கீரிசுட்டான், பாலம்பிட்டி.*

### எனது துன்ப வேளையில் உன்னைப் படிக்கும்போது

## மனநிலை மாற்றம் பெறுகிறது

எம் இனிய மன்னாவே!

நீ பல்லாயிரக்கணக்கான உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிட்டாய்! பல விடயங்களை நீ சுமந்து வந்தாலும், உன் அபிமானிகளின் ஆக்கங்களுக்கு இடம்கொடுக்கும் வாசகர் பகுதி என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

சில சமயங்களில் மனம் எத்தனை துன்பத்தில் இருப்பினும், உன்னைப் படிக்கும்போது எம் மனநிலையே மாற்றம் பெறுகிறது. பல ஆக்கங்களை நாம் உருவாக்கிட நீ களம் அமைத்துத் தருகின்றாய். இதனால் எம் மனம் ஒருநிலைப்பட்டு, எமது அறிவுத்திறமையும் வளர்ச்சியடைகின்றது.

எமது ஆக்கம் வந்திருப்பதை பார்க்கும்போது, அடுத்த பத்திரிகைக்கும் ஆக்கங்களை அனுப்ப வேண்டும், அடுத்த பத்திரிகை எப்போது வரும்? என்ற சிந்தனைகள் எழுகின்றது. மனதுக்கு நிம்மதி தரும் மன்னாவே, உனக்கு என் மனமார்ந்த நன்றி... நன்றி..

*திருமதி. சுகந்தி மனோகரன்,*
*ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்.*

### வண்ண மலர்போல் மலர்ந்து

## மக்கள் உள்ளத்தை மகிழ்வி

மன்னாவே நீ வாழ்க, மணம் கமழ்க.
இன்னும் கவிதைகள் கதைகளை வெளிக்கொண்டு வா.
உன் பயணத்தைத் தொடர்ந்து நடத்து.
வண்ணமலர்போல் மலர்ந்து மக்கள் உள்ளத்தை மகிழ்வி!

மன்னாவின் மூலம் எமது அறிவை வளர்ப்போம்
மன்னாவின் வெளிச்சத்தை ஒளிவீசச் செய்வோம்.
மன்னாவே உனது பெயர் உலகம் முழுவதும் பரவட்டும்.
மன்னாவின் மூலம் உலகிற்குச் சமாதானம் மலரட்டும்.

*ஞா. கிறிஷாந்தா, சாளம்பன், ஆட்காட்டிவெளி.*

### அவசர காலத்தில் மக்களின் பாதுகாப்பிற்காக வழங்க வேண்டிய

# மனித நேய உதவிகள்

*திரு. சின்கிலேயர் பீற்றர், மாவட்ட அதிகாரி, CHA, மன்னார்.*

- மக்களின் அடிப்படைத் தேவைகளில் முதலிடம் பெறுவது உணவு, உடை, இல்லிடம். இரண்டாவது சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு என்பனவாகும்.
- வன்முறையாலும் இயற்கையாலும் பொதுமக்கள் பாதிப்புறும் போது முதலில் வயதுவந்தோர், ஊனமுற்றோர், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், சிறுவர்கள் போன்றோரே அதிக பாதிப்பிற்குள்ளாகின்றனர். முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் இவர்களேயாவர்.
- காப்பாற்றும் நோக்குடன் பாதிக்கப்பட்டவர்களை அப்புறப்படுத்தும்போது முறையே - இறக்கும்தருவாயில் உள்ளவர்களையும், பாரதூரமான காயங்களில் உள்ளவர்களையும், குழந்தைகளையும், கர்ப்பிணிகளையும், வயதுவந்தவர்களையும் முதலில் காப்பாற்றுதல் வேண்டும்.
- அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் முன், பயிற்சி பெற்றவர்களின் மூலம் முதலுதவி வழங்கப்படல் வேண்டும். முடியுமானால் ஒவ்வொருவரையும் இலக்கமிடல் வேண்டும்.
- பாதுகாப்பான இடத்திற்கு உடனடியாக இவர்களைக் கொண்டுசெல்வதற்கு வாகன வசதிகள், செயற்கையான கட்டில்கள் போன்றவற்றை ஆயத்தம் செய்தல் வேண்டும்.
- வைத்தியசாலையில் இரத்தம் தேவைப்படுவோருக்கு இரத்தம் வழங்குவதையும், தேவையான மருந்து வகைகள் இருப்பதையும் உறுதிசெய்தல் வேண்டும்.
- இடம்பெயரும் மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு உடன் அழைத்துச்செல்லல் வேண்டும். இதற்காக ஏற்கனவே பொது இடங்களான பாடசாலைகள், தேவாலயங்கள், மசூதிகள், பன்சாலைகள், பொது மண்டபங்கள் போன்றவற்றை முன்கூட்டியே தெரிவுசெய்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
- மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக சமைத்த உணவுகள், சிறுவர்களுக்கான பால்மா, குடிநீர், கூடாரங்கள், படுக்கை விரிப்புக்கள் போன்றவற்றை வழங்குவதற்கு முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும்.
- இவற்றை யார், எவ்வாறு வழங்குவது என்பன குறித்து முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களின் பெயர், பால், வயது, விலாசம், பாதிப்பின் விபரம் போன்ற விடயங்கள் தொண்டர்களினால் உடன் பதியப்பட்டு அரச அதிகாரிகளுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.
- தொடர் நடவடிக்கைக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் உதவி கோரி விண்ணப்பித்தல் வேண்டும். (GA/ AGA/ NGOO/ Doctor/ GSN/ SLMM/ HRC)

### வைத்தியசாலையில் கவனிக்க வேண்டியவை

- இரத்தம், மருந்து வகைகள், அம்புலன்ஸ், வைத்தியர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- பாதிப்புற்றோரின் விபரங்களை இரத்த உறவினர்களுக்கு அறிவிக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.
- இறந்த உடல்களை அடையாளம் கண்டு, அவர்களின் உறவினர்களுக்கும், மரண விசாரணை அதிகாரிகளுக்கும், நீதவானுக்கும் அறிவித்தல் வேண்டும்.

### அகதிகளாக மக்கள் தஞ்சமடையும் முகாம்களில்

- சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், வயதுவந்தோர் மட்டில் விஷேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
- குடிநீர், மலசலகூடம், சுகாதாரம், நுளம்பு எதிர்ப்பு போன்றன கவனிக்கப்படல் வேண்டும்.
- மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- கூடியவிரைவில் மக்களைத் தங்களின் சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- அத்தோடு உலர் உணவு, பாத்திரங்கள், உடைகளை வழங்குதல் வேண்டும்.
- இறுதியில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளின் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முழுமையான நஸ்டஈடு வழங்குவதற்கு உதவிசெய்தல் வேண்டும்.

### செபம் பற்றிய பொன்மொழிகள்

- உதட்டின் முனையிலிருந்து வருவது செபமல்ல. உள்ளத்தின் அடியில் இருந்து வருவதே செபம்.
- கல்வாரிச் சிலுவையையும் முழங்காலில் நிற்கும் பக்தனையும் கண்டு சாத்தான் அஞ்சி நடுங்குகிறான்.
- உடலுக்கு காற்றும் ஆன்மாவுக்கு செபமும் இன்றியமையாதவையாகும்.



# தமிழர் தாயகப் பகுதியில் பொதுமக்கள் மீதான விமானக்குண்டுத் தாக்குதலைத் தடுத்து நிறுத்துங்கள்!

### ஐ.நா புதிய செயலரிடம் யேம்ஸ் பத்திநாதர் அடிகளார் அவசர வேண்டுகோள்

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதியில் பொதுமக்கள்மீது இடம்பெறும் கொடூரமான விமானக் குண்டுத் தாக்குதலைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு யாழ். மறைமாவட்ட நீதி மற்றும் சமாதானத் துணை ஆணைக்குழுவின் வன்னிப் பிரதேசப் பொறுப்பாளர் அருட்பணியாளர் ஜேம்ஸ் பத்திநாதர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, நாளுக்கு நாள் இலங்கைத் தமிழ் மக்கள் பூண்டோடு அழிக்கப்படுகின்றனர். இது குறித்து முன்னாள் செயலாளர் நாயகமான கொபி அனானின் கவனத்துக்குக் கொண்டுவந்தோம். இலங்கை விமானப்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலால் பொதுமக்கள் பயங்கரத்தை அனுபவிக்கின்றனர். இந்தக் குண்டுத் தாக்குதலால் பலர் காயமடைவதுடன் பலர் கொல்லப்படுகின்றனர்.

இறுதியாக நடைபெற்ற தாக்குதலில், டிசம்பர் 30ஆம் திகதி யாழ். மறைமாவட்டத்தின் கீழ் உள்ள கிளி – முல்லை மறைக்கோட்டத்தால் முல்லைத்தீவில் கடல்கோளால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கும் ஆண், பெண் விடுதிகள்மீதும், பொதுமக்கள் வீடுகள்மீதும் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. நத்தார் விடுமுறையைக் கழித்துக்கொண்டிருந்த பிள்ளைகளில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் ஐ. நா. அமைப்பின் முல்லைத்தீவு இணைப்பாளர் வீடும் தாக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் ஐந்து பிள்ளைகள் படுகாயமடைந்துள்ளனர். இத்தாக்குதல்போல் இடம்பெற்ற புதுவருடத் தாக்குதல் மிகக்கொடூரமானது.

2ஆம் திகதி மன்னார், இலுப்பைக்கடவை கரையோரக் கிராமத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கர்ப்பிணித்தாய் உட்பட 17பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் 40ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளதுடன் அம்மக்களது குடிசைகள் விமானத் தாக்குதலால் எரிந்துள்ளன.

இவ்வாறு நாளுக்கு நாள் நடைபெறும் தாக்குதலால் கொடூரமான முறையில் பொதுமக்கள் கொல்லப்படுவதுடன் பலர் படுகாயமடைகின்றனர். அத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறுபட்ட பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர்.

இவ்வாறான தாக்குதல் மனிதாபிமானத்துக்கு எதிரானதும் மற்றும் ஐ.நா. சாசனத்தால் ஏற்க முடியாததும் ஜெனீவா மாநாட்டுத் தீர்மானத்திற்கு முரணானதுமாகும்.

மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்செயலை ஐ.நா.சாசனமும் ஜெனீவா தீர்மானமும் ஏற்றுக்கொள்ளுமாவென அவர் அக்கடிதத்தில் கேள்வியெழுப்பியதுடன், இந்த இனப் பிரச்சினைக்கு மனிதப் பண்புள்ள திறமையான அரசியல்தீர்வை இலங்கை அரசால் தரமுடியாது.



அத்துடன் இலங்கை அரசுக்கு அதில் விருப்பமுமில்லை. இராணுவத் தீர்வில் நாட்டம் கொண்டமையால் தமிழர் தாயகப்பகுதியில் பாரிய சொத்தழிவுகள் உட்பட பலர் கொல்லப்பட்டும், காயமடைந்துமுள்ளனர். இது தமிழர் பகுதியில் பல தசாப்த அனுபவமாகும்.

மனிதாபிமானமற்ற குற்றச்செயலையும் ஓர் இனத்தை அழிக்கும் பயங்கரத்தையும் தடுக்க வேண்டியது ஐ.நா.வின் கடமையாகும்.

நாம் அவசரமாக உங்களிடம் கேட்பது என்னவென்றால் தமிழர் தாயகப்பகுதியில் தமிழர்கள் இரகசியமாக பூண்டோடு அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென்பதேயாகும் என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

## அங்கிலிக்கன் பேராயர் திருத்தந்தை சந்திப்பு

அங்கிலிக்கன் திருச்சபையின் தலைவர் கன்ரபரி பேராயர் முதன்முறையாக கடந்த நவம்பர் 23ம் திகதி திருத்தந்தையைச் சந்தித்தார்.

உரோமையில் திருத்தந்தை 6ஆம் சின்னப்பரின் காலத்தில் அங்கிலிக்கன் திருச்சபை மையம் உருவாக்கப்பட்டது. பேராயர் மைக்கேல் ராம்சே மற்றும் திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் ஆகியோர் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக கத்தோலிக்க திருச்சபைக்கும் அங்கிலிக்கன் திருச்சபைக்குமிடையிலான உறவை வளர்க்கும் நோக்கில் இந்த அங்கிலிக்கன் திருச்சபை மையம் உருவாக்கப்பட்டது.

இந்த மையம் நிறுவப்பட்டதன் 40ஆம் ஆண்டு நினைவாக தற்போது கன்ரபரியின் பேராயராக உள்ள பேராயர் ரோவன் வில்லியம்ஸ் உரோமையில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்றடைச் சந்தித்தார்.


## மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும்

- திருத்தந்தை -

“மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமானால் உலக நாடுகள் மனிதர்களின் மாண்பை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்” என்று 2007 ஆம் ஆண்டின் தொடக்க நாளில் திருத்தந்தை கூறியுள்ளார். ஜனவரி 1ஆம் தேதி புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு திருத்தந்தை உரையாற்றுகையில், இப்போது எல்லா இடங்களிலும் மனித உரிமைகள் பற்றிய பேச்சுக் காணப்பட்டாலும் மனித உரிமை குறித்த உறுதிப்பாடு இன்னும் குறைவாகவே உள்ளது என திருத்தந்தை தனது வருத்தத்தை வெளியிட்டார்.

### ஜே. பி. தேவராஜா அடிகளாரின்

## குருத்துவப் பொன்விழா நிகழ்வுகள்



அருட்தந்தை ஜே. பி. தேவராஜா அடிகளாரின் குருத்துவப் பொன்விழா நிகழ்வுகள் கடந்த 4. 02. 2007 அன்று வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றது. மங்கள வாத்திய இசை முழங்க ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்ட அடிகளார் தனது யூபிலி விழா நன்றித் திருப்பலியை பெருந்தொகையான குருக்கள், துறவியர் இறைமக்கள் மத்தியில் ஒப்புக்கொடுத்தார். திருப்பலி வேளையில் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணியாளர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் மறையுரையாற்றினார்.

திருப்பிலி முடிவில் மன்னார் ஆயர், வவுனியாப் பங்குத்தந்தை ஏ. செபமாலை அடிகளார், யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த செல்வராஜா அடிகளார் மற்றும் சிலரும் உரையாற்றினர். வாழ்த்துப்பாக்களும் வாசித்தளிக்கப்பட்டன. இறுதியாக பொன்விழா மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. மன்னா வெளியீடாக வெளியிடப்பட்ட இம்மலர் வெளியீட்டு நிகழ்வை அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் அவர்கள் நடாத்தி வைத்தார். விழாவின் நிறைவில் அனைவருக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது.

## சட்டத்தரணி ஆனார்



மன்னார் நானாட்டானைச் சேர்ந்த மரியாம்பிள்ளை டேவிற் தயாபரன் அவர்கள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் மன்/ நானாட்டான் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் இரண்டாம் நிலைக் கல்வியையும் கற்றார். உயர் கல்வியை கொழும்பு பல்கலைக்கழகத்தில் கற்ற இவர் 2006.12.14 அன்று சட்ட இளமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

தயாபரனுக்கு மன்னா வாசகர்கள் சார்பாக நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## அருட்பணியாளர் சாமிநாதன் சோசை இறைபதமடைந்தார்!



வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு மறைமாவட்டத்தில் பணிபுரிந்துவந்தவருமான அருட்பணியாளர் சல்வதோர் சாமிநாதன் சோசை அவர்கள் கடந்த 06.02.2007ல் இறைபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சல்வதோர் சோசை, அன்னம்மாள் கூஞ்ஞ ஆகியோரின் மூத்த மகனும், என்றி பிலோமினாள் சோசை, காலஞ்சென்ற அன்று சோசை (ஓய்வு பெற்ற அதிபர்), அருட்சகோதரி மேரி அலிஸ் (தி.கு. மன்னார்), மற்றும் பங்கிராஸ் சோசை (ஓய்வு பெற்ற அதிபர், வங்காலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவர் கொழும்பு மறைமாவட்டத்தில் அமதி அருட்சகோதரராக 35 ஆண்டுகளும், அருட்தந்தையாக 25 ஆண்டுகளும் இறைபணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அருட்தந்தையின் ஆன்மா இறைவனில் இளைப்பாறச் செபிக்கின்றோம்.

- பதிப்பாசிரியா

### க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றில்


## மன்னார் மாவட்டம் முன்னேற்றம்

க .பொ. த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றில் மன்னார் மாவட்டம் பாரிய முன்னேற்றம் கண்டிருப்பதாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். இலங்கையின் அனைத்து மாவட்டங்களின் பெறுபேறுகள் அடங்கிய புள்ளி விபரத்தோடு வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த 2005ம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் எமது மாவட்டம் 2004ம் ஆண்டைவிட மிகவும் சிறப்பான பெறுபேறுகளை ஈட்டியுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சிறப்பான பெறுபேற்றைப் பெற்ற மாவட்டங்களில் ஒன்றாக மன்னார் மாவட்டம் திகழ்வதை எண்ணி நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். 2005ம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றிய 1411 மாணவர்களில் 46.85% ஆனோர் க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கத் தகுதிபெற்றுள்ளனர். 2004ம் ஆண்டில் 38.02% ஆக இருந்த நிலை 2005இல் 46.8% ஆகியுள்ளது. இந்த 8% அதிகரிப்பு ஒரு குறிப்பிடத்தக்க சாதனை என்றே கூறவேண்டும்.

இவ் உயர் சாதனைக்கு வழமையான அலுவலகக் கடமைகளுக்கு மேலதிகமாக எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல செயற்பாடுகளும் ஒரு காரணமாக அமையும். அத்துடன் உங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்புக்களும் உதவிகளும் பல்வேறு வடிவங்களில் கிடைத்தமையும் இதற்கு ஒரு உந்துதலாக இருந்திருக்கின்றது என்பதை எண்ணி இவ்வேளையில் அதற்கு நாம் நன்றி கூறுகின்றோம். எனவே மாவட்டத்தில் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி இத்தகைய பங்களிப்புகளை மேலும் தொடர்ந்து வழங்கத் தங்களை நாடி நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அன்பின் சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் இருவரின் நித்திய அர்ப்பணம்



கடந்த நவம்பர் மாதம் 15ந் திகதி கொழும்பு கோட்டை புனித தோமையார் ஆலயத்தில் அன்பின் சகோதரிகள் சபையைச் சேர்ந்த் அருட்சகோதரி பிரியதர்சினி டி சில்வா, அருட்சகோதரி பேர்னடின் அமரசிங்க ஆகியோர் தங்களது நித்திய வார்த்தைப்பாட்டைச் செய்தனர். இவர்களோடு சேர்ந்து அவர்களுடைய குடும்பத்தினரும் அன்பின் சகோதரிகள் அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றார்கள்.

# அன்பியம் என்பது ஒரு வாழ்க்கைமுறை அது வாழ்ந்து காட்டப்பட வேண்டும்

## அன்பியப் பணியாளர்கள் மத்தியில் மன்னார் ஆயர்

அன்பியம் என்பது ஒரு வாழ்க்கை முறை. பெயரளவில் இல்லாமல் அது வாழ்ந்து காட்டப்பட வேண்டும் என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் குறிப்பிட்டார். கடந்த 16.12.2006 அன்று மன்னார் அன்பியத் தொடர்பகத்தில் நடைபெற்ற அன்பியப் பணியாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வின்போதே ஆயர் இவ்வாறு குறிப்பிட்டார். முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவக் குழுக்கள் என்ற மையப்பொருளில் தனிச்செபம், குழுச்செபம், குடும்பச்செபம் இவற்றின் மூலம் ஆன்மீக விழிப்பூட்டலுக்கு அன்பியம் ஒரு ஊடகமாக அமையும். அன்பியம் என்பது வாழ்க்கை முறை. அது வாழப்படவேண்டும். பெயர் அளவில் இல்லாது செயலில் அது வாழ்ந்து காட்டப்பட வேண்டுமென்றும் ஆயர் விளக்கிக் கூறினார். ஆதித்திருச்சபை மக்கள் நட்புறவிலும், பகிர்வதிலும், செபிப்பதிலும் எவ்வாறு விழிப்பாய் இருந்தார்களோ அதேவிதமாக அன்பியங்களும் செயற்பட வேண்டுமென ஆயர் குறிப்பிட்டார்.

யே. யூக்கறிஸ்ரா, புத்திரர்கண்டான், அளவக்கைப் பங்கு

## முன்னாள் குருமுதல்வருக்கு தாழ்வுபாடு பங்கில் பாராட்டு



மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் வண. சேவியர் குரூஸ் அடிகளார் கடந்த 25 வருடங்களாக குருமுதல்வராகச் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுபெற்றதை அடுத்து கடந்த 31. 12. 2006 அன்று தாழ்வுபாடு பங்கில் அவருக்கு ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. அன்றைய தினம் காலை 6.15 மணியளவில் தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணியாளர் ஞானாதிக்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

பங்குத்தந்தையுடன் இணைந்து அடிகளார் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் திருக்குடும்பத் திருவிழாவாக இருந்தபடியால் அவரது மறையுரை அன்பியங்களில் குடும்பங்களின் முக்கியத்தவம் பற்றியும், மேய்ப்புப்பணி மகாநாட்டுத் தீர்மானத்திற்கமைய குடும்ப செபவாழ்வு பற்றியதாகவும் அமைந்திருந்தது.

திருப்பலியின் பின்னர் பங்கு மக்கள் சார்பாக ஆலய மேய்ப்புப்பணிச்சபை உபசெயலாளரால் விழா நாயகன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். பின்னர் அடிகளாரின் சேவையைப் பாராட்டி ஆலய மேய்ப்புப் பணிச்சபை செயலாளரால் வாழ்த்துப் பாமாலையொன்று பாடப்பட்டது. பங்குத்தந்தையவர்கள் தமது வாழ்த்துரையில், தனக்கும் அடிகளாருக்கும் இடையே நிலவிய மென்மையான நட்புமுறை பற்றியும், அடிகளாரின் சவால்கள் நிறைந்த பணிவாழ்வு பற்றியும் எடுத்துரைத்து இறைவன் தொடர்ந்தும் இவரோடு தங்கியிருந்து உடல், உள, ஆன்மீக பலத்தினை அளித்திட வேண்டுமென இறைவனை வேண்டுவதாகக் கூறினார்.

## வருந்துகின்றோம்

எமது கடந்த ஜனவரி மன்னா பத்திரிகையில் ***"குருக்களின் பெற்றோர் இறைபதம்"*** என்ற தலைப்பில் "தற்போது உரோமாபுரியில் கல்விபயிலும் செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த ஜோசப் ஏ ஜெயசீலன் அடிகளாரின் தாயார் இறைபதம்...." என்ற செய்தி தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அது யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஜெயசீலன் அடிகளாரின் தாயார் என்பதையும் செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த ஜெயசீலன் அடிகளாருடைய தாயார் அல்ல என்பதையும் அறியத்தருகின்றோம்.

ஏற்பட்ட தவறுக்காக எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். - பதிப்பாசிரியர்.

### ஆசா. யோசவ்வாஸ் அடிகளார் நினைவு

## போட்டி முடிவுகள்

ஆசாரத்திற்குரிய யோசவ்வாஸ் அடிகளாரின் நினைவு தினத்தை முன்னிட்டு (ஜனவரி மாதம் 16ம் திகதி) புத்தளப் பங்கினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சிறுகதை, கவிதை இயற்றல் போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களின் விபரங்கள் பின் வருமாறு :

### கவிதை இயற்றல்

**1ம் இடம்**
செல்வி. டயனா மரியதாசன்
இளவாலை மேற்கு,
இளவாலை,
யாழ்ப்பாணம்.

**2ம் இடம்**
வெ. எமில் எழில்ராஜ்,
தேசிய குருமடம்,
அம்பிட்டிய, கண்டி.

**3ம் இடம்**
செல்வி, ம. நிலுஜினி,
ஆலங்குளம்,
வட்டக்கண்டல், மன்னார்.

### சிறுகதைப் போட்டி

**1ம் இடம்**
சகோ. எம். டெவின் கூஞ்ஞ
திருவுளப் பணியாளர் சபை,
'ஈஸ்ற் பொண்ட்'
மீக்கணுவ, அம்பிட்டிய.

**2ம் இடம்**
செல்வி டயனா மரியதாசன்
இளவாலை மேற்கு,
இளவாலை, யாழ்ப்பாணம்.

**3ம் இடம்**
எஸ். ஜீவதேவி,
இல. 109 B/2 அடிமூர்,
ரத்மலாவின்ன, பலாங்கொட.

*- அருட்திரு பெனட் சாந்த அடிகளார், புனித மரியாள் தேவாலயம், புத்தளம்.*

## நிகழ்வுகளும் ... நினைவுகளும் ...!





கடந்த டிசம்பர் 22ந் திகதி மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற பணியாளர்களுக்கான நன்றி நவிலல் நிகழ்வில் மன்னார் ஆயர் அவர்கள் குருமுதல்வருக்கும் அருட்சகோதரிகளுக்கும் அன்பளிப்புகளை வழங்குகிறார்.

வங்காலை புனித ஆனாள் பாடசாலையின் முன்னாள் அதிபரும் வங்காலை புனித ஆனாள் ஆலய இசைக் கலைஞருமான

## அ. உவில்பிரட் சோசை காலமானார்

வங்காலை புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் வங்காலை புனித ஆனாள் ஆலயத்தின் இசைக் கலைஞருமான திரு. அ. உவில்பிரட் சோசை அவர்கள் கடந்த ஜனவரி மாதம் 29ந் திகதி அன்று வங்காலையில் காலமானார். அன்னாருக்கு வயது 77.

இவருடைய பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இவருடைய ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

\- பதிப்பாசிரியர்

### *பாடகர் குழாமின் படகோட்டி பறந்துவிட்டார்*

மின்னாமல் முழங்காமல் இடியொன்று
வீழ்ந்துவிட்டதே ஐயகோ!
வங்கத்தின் இசைக்கலைப் பொக்கிசம்
ஓர் நொடிக்குள் மறைந்துவிட்டதே!

செபஸ்ரியம்மாவுடன் செம்மையாக வாழ்ந்தீர் ஐயா!
கண்ணியமும் கடமையும் கட்டுப்பாடும் உள்ள
நேர்மையாளன் ஐயா நீர்!
கடைசிவரையும் உறுதியான
விசுவாச வாழ்வில் திளைத்தீர் ஐயா!

ஐந்து பெண் சகோதரிகளுக்கும்
ஓர் ஆண் சகோதரனுக்கும் - அரசனானீர்.
இல்லை அமைச்சனானீர்
ஆசிரியராய் அதிபராய் வங்கத்தின்
பெருமை சேர்த்தீர் ஐயா!
இரு சகோதரிகள் திருச்சபையின்
இருமலர்கள் ஐயா!
உம் வழிகாட்டல்தானே ஐயா!
உம் பிள்ளை ஒன்றையும்
அன்புக் கன்னியராய் அளித்தீரையா!

கல்வியால் வளமான நிறைவான
வாழ்வு வாழ்ந்தீரையா!
உம் குடும்பத்தின் நான்கு கனிகளை
கல்விச் சமூகத்தின் நான்கு தூண்களாக்கினீர்
மக்களில் மூவரை பொது நிர்வாக சேவைக்கும்
மனமுவந்தளித்த வள்ளல் ஐயா நீர்.

அன்னை ஆனாளின் அருட்பணிச் சபையின்
முன்னாள் செயலராய் அரும்பணியாற்றிய
சேவையாளன் ஐயா நீர்!
தையற்கலையிலும் வல்லவன் ஐயா நீர்!
அறுபது ஆண்டுகள் தொடர்ச்சியான
இசைக்கலையை வரன்முறையாக
அன்னை ஆனாளுக்கு ஆனந்தமாய் அளித்தீரையா
ஈடுசெய்ய முடியாத இழப்பையா உம் இழப்பு.
அம்மையே மனமிரங்காய்
அமைதியில் இளைப்பாறுங்கள்.

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்,
வழிபாட்டுக்குழுத் தலைவி,
*புனித. ஆனாள் ஆலயம், வங்காலை*

## விளம்பர அறிவித்தல்

மன்னார் டிலாசால் அருட்சகோதரர்களினால் நடாத்தப்படும் லசாலியன் அபிவிருத்தித் திட்ட வேலைத்தளத்தில் மின் ஒட்டு (வெல்டிங் வேலைகள்) மலிவான, தரமான விதத்தில் செய்துகொடுக்கப்படும். உங்களுக்குத் தேவையான கேற் வேலைகளும், கிறில் வேலைகளும், லொறிகளுக்குப் பெட்டி அடிக்கும் வேலைகளும் அத்தோடு ட்றஸ் வேலையும் நம்பிக்கையான விதத்தில் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
இன்றே நாடுங்கள் : லாசாலியன் அபிவிருத்தித் திட்ட வேலைத்தளம், டிலாசால் இல்லம் மன்னார்.
தகவல்:- அருட்சகோதரர் எஸ். சி. விஜயதாசன், டிலாசால் இல்லம், மன்னார்.

## மன்னார் சிறிய குருமட தைப்பொங்கல் விழா





மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் தமிழர் விழாவாம் தைப்பொங்கல் விழா குதுகலமாகக் கொண்டாடப்பட்டது. குருமட வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மடு அன்னையின் திருச்சுரூபம் முன்பாக பொங்கல் பொங்கப்பட்டது. அனைத்து மாணவர்கள், நல்லுள்ளங்கள் முன்பாக குருமட அதிபர் அருட்பணியாளர் பி. ஜேசுறாஜா அவர்கள் பொங்கலை ஆசீர்வதித்தார்.

தொடர்ந்து மண்டபத்தில் பொங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குனரும் மன்னா ஆசிரியருமாகிய அருட்பணியாளர் பி. கிறிஸ்து நேசன் பொங்கல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அவரோடு குருமட அதிபர் பி. இயேசுராஜா அடிகளாரும், செ. அன்புராசா (அமதி) அடிகளாரும் திருப்பலியில் இணைந்துகொண்டனர். திருப்பலியைத் தொடர்ந்து அனைவருக்கும் பொங்கல் பரிமாறப்பட்டது.

தொடர்ந்து சில கலைநிகழ்வுகள் குருமட மாணவர்களினால் நடாத்தப்பட்டன. அதிபர் அவர்கள் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியைக் கூறினார். அதனைத் தொடர்ந்து குருமட மாணவர்களுக்கும் புனித செபஸ்தியார் பேராலய பீடப்பணியாளர்களுக்கும் இடையே கிறிக்கட் போட்டியும் கரப்பந்தாட்டப் போட்டியும் நடைபெற்றன. இரு போட்டிகளிலும் குருமட மாணவர்களே வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

*எஸ். அன்ரனி டிலைக்சன், சிறிய குருமடம், மன்னார்.*

### பிரச்சினைகளுக்கு மிகவிரைவில் தீர்வைக் காண்பதற்கு

# பொறுமையுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படும்படி சம்மந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்

### இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் கோரிக்கை

நாட்டின் தற்போதைய இக்கட்டான நிலைமைகளை விளக்கி இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் பொறுமையுடனும், நல்லெண்ணத்துடனும் செயலாற்றும்படி அனைத்துத் தரப்பினரிடமும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

எமது அன்புக்குரிய தாய் நாடாகிய சிறிலங்கா தனது வரலாற்றில் என்றுமில்லாதவாறு தற்போது மிகவும் இக்கட்டான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் நடைபெற்ற வான் தாக்குதல்கள், பொதுப்போக்குவரத்து வாகனங்களில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்புக்கள் போன்றவற்றால் அப்பாவிப் பொதுமக்கள் மீண்டும் பலியாகியமை போன்ற நிகழ்வுகள் எம்மை அதிர்ச்சியடையச் செய்துள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே ஏற்படும் மோதல்களின்போது வடக்கிலும், கிழக்கிலும் வாழும் அப்பாவி பொதுமக்கள் அடிக்கடி அகப்பட்டுக்கொள்கின்றனர்.

அனைவருக்கும் கிடைக்கக் கூடியதான நீதி, உண்மைக்கு அளிக்கும் மதிப்பு ஆகியவை மூலமே நீடித்த சமாதானத்தை அடைய முடியும் என்பதை நாம் மீளவும் உறுதிப்படுத்துகின்றோம்.

சமாதானத்துக்கான முன்னெடுப்புக்களை முன்னோக்கிக்கொண்டு செல்வதற்குப் பதிலாக நாம் அமைதிப் பேச்சுவார்த்தைகளிலும், பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதிலும் சிறிதளவு நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பது வருந்தத்தக்க விடயமாகும். உண்மையாகவும், யதார்த்தமாகவும் இருக்கும்போது மட்டுமே சமாதானத்தை அடைய முடியும்.

எமது மக்களின் துன்பங்களைக் கவனத்தில் எடுத்து, இந்தப் பிரச்சினைகளுக்கு மிக விரைவில் ஒரு தீர்வைக் காண்பதற்கு பொறுமையுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படுத்தும்படி இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினராகிய நாம் இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரிடமும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது அன்பிற்குரிய தாய்நாட்டின் மக்களுக்கு புதிய வருடமானது ஒப்புரவு, சமாதானம், செழுமை ஆகியவற்றை வழங்கும் ஒரு சகாப்தமாக விளங்க வேண்டும் என்பதே எமது ஆர்வமுள்ள எதிர்பார்ப்பாகும்.

## ஐரோப்பாவின் கிறிஸ்தவப் பாரம்பரியம் முக்கியமானது

### — திருத்தந்தை கருத்து —

ஐரோப்பிய யூனியனின் ஒப்பந்தங்களை முறைப்படுத்துவதில் ஐரோப்பியக் கிறிஸ்தவ பாரம்பரியத்தின் மதிப்பீடுகள் கவனிக்கப்பட வேண்டும் என்று திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான திருத்தந்தையின் அப்போஸ்தலிக்க தூதுவர்களை சந்தித்தபோது "ஐரோப்பியக் கண்டம் உருவாக்கப்பட்டதில் கிறிஸ்தவ பாரம்பரியம் ஆற்றிய பணிகளை யாரும் மறக்க முடியாது" என்று திருத்தந்தை கூறினார்.

மனித மாண்பின் அடிப்படைகளும், மதச்சுதந்திரமும், திருச்சபை அமைப்புகளின் தனியுரிமைகளும் தொடர்ந்து ஐரோப்பிய யூனியன் ஒப்பந்தத்தால் மதித்து நிறைவேற்றப்படும் என்று நம்புவதாக திருத்தந்தை கூறினார்.

மேலும் ஐரோப்பியக் கண்டம் உருவாவதற்கும், ஐரோப்பிய நாடுகள் மற்றும் மக்களின் வளர்ச்சிக்கும் கிறிஸ்தவப் பாரம்பரியம் ஆற்றியுள்ள பணிகளை யாரும் மறுக்க முடியாது என்றும் திருத்தந்தை கூறினார்.

20ஆம் நூற்றாண்டின் வரலாற்று நிகழ்வுகளை அசைபோட்டு, ஐரோப்பிய நாடுகள் ஏழைகள் எளியவர்கள்மீது அக்கறையுடன் சுதந்திரமான ஐரோப்பாவைக் கட்டியெழுப்ப முயல வேண்டும் என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.


# விவிலியக் கற்கை நெறிச் சான்றிதழ வழங்கும் விழா

மன்னார் மறைமாவட்டப் பொதுநிலையினர் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட விவிலியக் கற்கைநெறியை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா கடந்த ஜனவரி மாதம் 15ம் திகதி பொதுநிலையினர் மற்றும் குடும்பப் பணி நிலையத்தில் நடைபெற்றது.

பயிற்சிநெறியை நிறைவுசெய்தவர்களுக்கு மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இப்பயிற்சிநெறியின் ஆரம்பத்தில் 90 பேர் கலந்துகொண்டாலும் தொடர்ச்சியாக வகுப்புக்களில் பங்கேற்றுச் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றவர்கள் 31 பேர் ஆகும். இப்பயிற்சிநெறியை முன்னாள் பொதுநிலையினர் பணியக இயக்குனர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அவர்கள் ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய இயக்குனர் அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் இச்சான்றிதழ் வழங்கும் விழாவை ஒழுங்குபடுத்தியிருந்தார். விழா நிகழ்வுகளைக் கீழே காணலாம்.





# அனைத்துக் குழந்தைகளும் மறைபரப்புப் பணியாளராகலாம்

### குழந்தைகள் பற்றித் திருத்தந்தை கருத்து

குழந்தைகள் மறைபரப்புப் பணியாளர்களாகவும், கடவுளுடைய சாந்தத்தின் சாட்சிகளாகவும் இருக்கலாம் என்று திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் கூறியுள்ளார். ஜனவரி 6ஆம் திகதி மூவேளைச் செபத்திற்குப் பின்னர் மூன்று ஞானிகள் திருநாளன்று, "இந்தத் திருவிழா விசுவாசம் என்னும் கொடையை வாழும் கிறிஸ்தவக் குழந்தைகளின் விழா. கிறிஸ்துவின் ஒளி உலகின் குழந்தைகள் அனைவரையும் சென்றடைவதாக! 110 நாடுகளிலுள்ள திருப்பாலத்துவ சபைக் குழந்தைகள் நற்செய்தி அறிவிப்பு பணியின் இணை ஊழியர்கள் என்ற முறையில் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குழந்தைகளின் உள்ளங்களில் மறைபரப்புப்பணித் தாகத்தை ஊட்டி வளர்ப்பதன் வழியாகத் தீவிரமான மறைபரப்புப் பணியாளர்களை திருச்சபை பெறமுடியும் என்று திருத்தந்தை கூறினார்.

குழந்தைகள் கடவுளுடைய சாந்த குணத்தின் சாட்சிகள். இறை அன்பின் அறிவிப்பாளர்கள். வத்திக்கானின் மறைபரப்புக் குழந்தைகள் நல அமைப்பு குழந்தைகளில் மறைபரப்பு விருப்பத்தை வளர்த்து மற்றக் குழந்தைகளுக்காகச் செபிக்கவும், பொருளாதார உதவி வழங்கவும் ஊக்குவிக்கிறது. இந்தத் திருப்பாலத்துவ சபை அமைப்பு 1843 இல் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பு பெற்றோர்கள், வேதியர்கள், ஆசிரியர்களுக்கு உதவி செய்வதன் மூலம் குழந்தைகள் மறைபரப்பு நோக்குடன் கல்வி கற்க உதவுகிறது.

# இயேசு பிறந்து வளர்ந்த

## புனித பூமியை பாதுகாக்க திருத்தந்தை உதவி!

'கோர் ஊனும்' என்னும் வத்திக்கானின் பாப்பிறை ஆணையம், புனித பூமியின் பாதுகாவலராக உள்ள பிரான்சிஸ்கன் துறவி தந்தை பியர்பட்டீஸ்டா பிசபல்லாவிடம் ஒரு மில்லியன் யூரோக்களுக்கான காசோலையை வழங்கியது. இப்பெருந்தொகையானது திருத்தந்தையின் ஜேர்மனி நாட்டின் பவேரியா பயணத்தி[illegible] முனிக், பாசு மற்றும் ரேகன்ஸ்பு[illegible]மாவட்டத்தில் மக்கள் தந்த தாராள நன்கொடையாகும். திருத்தந்தை தனது அன்புப்பணி அமைப்பான 'கோர் ஊனும்' வழியாக புனித பூமியைப் பராமரிக்கும் பணிக்காக இதை வழங்கினார்.

நாசரேத்தில் ஒரு பெரிய பங்குப் பணித்தளத்தை உருவாக்க இந்த நன்கொடை பயன்படுத்தப்படும். புனித பூமியில் உள்ள பங்குத்தளங்களில் நாசரேத்துப் பங்கு பெரிய பங்காக விளங்கும் என்று கூறப்பட்டுள்ளது. திருத்தந்தை புனித பூமியில் உள்ள கிறிஸ்தவர்களுடன் தனது ஒன்றிப்பை உயர்த்தவும், இயேசுவின் நாடான எருசலேம் எத்தடையும் இல்லாத உலகக் கிறிஸ்தவக் கண்காட்சித் தலமாக விளங்கவும் தனது முழு ஆதரவையும் தருவதாக உறுதியளித்துள்ளார். இப்பங்கிற்கான அடிக்கல் பெப்ரவரி மாதம் நாட்டப்படும் என்றும் இதற்கு உதவிய திருத்தந்தைக்கும், ஜேர்மனின் இறைமக்களுக்கும் நன்றி என்று தந்தை பிசபெல்லா கூறினார்.

# ஐ. நா.வின் புதிய செயலாளர் நாயகம்

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய செயலாளர் நாயகமாக கொரியாவைச் சேர்ந்த இராஜ - தந்திரியான பான் கி மூன் என்பவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் ஐ. நாவின் எட்டாவது செயலாளர் நாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.

63 வயதான இவர் தனது நாட்டிலும் உலக அளவிலும் 37 வருட அனுபவம் உள்ளவர்.

கானா நாட்டைச் சேர்ந்த முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அன்னான் தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்ததை அடுத்து இவர் இப்பொறுப்பினை ஏற்றுள்ளார்.

திரு. மூன் ஐ. நா. செயலாளர் பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப் - பட்டபோது அவர் தனது நாட்டின் வெளிவிவகார அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வடகொரியா அணுஆயுத சர்ச்சைக்கு சமாதானமான முடிவைக் காணுங்கள்

## திருத்தந்தை அழைப்பு!

வட கொரியா அணுஆயுத சோதனை மேற்கொண்டதையடுத்து உலக நாடுகள் பல்வேறு தடைகளை அந்நாட்டின்மீது கொண்டுவந்துள்ளன. இந்தச் சர்ச்சையால் வடகொரியா மக்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் வத்திக்கானுக்கான ஜப்பானின் தூதரைச் சந்தித்த திருத்தந்தை, ஜப்பான் நாடு உலக நாடுகள் மத்தியில் சமாதானம் ஏற்பட மேற்கொண்டுவரும் முயற்சிகள் வழியாக வடகொரியா சர்ச்சைக்கு சரியான தீர்வு காண வேண்டுமே ஒழிய அந்நாட்டை அந்நியப்படுத்தக்கூடாது எனக்கேட்டுக்கொண்டார்.

கொரிய தீபகற்பத்தில் அணுசக்தி உற்பத்தியில் ஈடுபடும் அனைவரும் தங்களின் பொறுப்பை உணர்ந்து அணு ஆயுத ஒழிப்புக்கு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். சர்வதேச சமூகமும் சர்ச்சையைக் கையாளும் வேளையில் வடகொரிய மக்களின் மனிதாபிமானத் தேவைகளை உணர்ந்து மனிதநேய உதவிகளைத் தடைசெய்யாத வண்ணம் சமாதான முயற்சிக்குப் பாடுபட முன்வர வேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார். ஐ. நா. வடகொரியாமீது அக். 9 ஆம் திகதி அணு ஆயுத சோதனையைத் தொடர்ந்து பல்வேறு தடைகளைக் கொண்டுவந்தது. எனினும் வட கொரியா ஐ. நாவுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ள ஒத்துக்கொண்டுள்ளது.

# சிறுவர் பொழிவு



## வறுமையின் செம்மை

### - சிறுவர் சிறுகதை -

ஓர் ஊரிலே தார்சில் என்ற சிறுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது சிறுவயதிலேயே தாயும், தந்தையும் இறந்துவிட்டார்கள். அவன் தவித்துத் துயருறும்போது அவனை ஆதரவாக அணைத்தது அவனுடைய அக்காவின் கரங்கள்.

அக்காவோ திருமணம்செய்து ஒரு வருடத்தில் விதவையானவள். ஆனால் அவள் தன் தம்பியை நன்றாகப் படிக்கவைக்க வேண்டும் என்பதற்காக கிராமம் கிராமமாய்ச் சென்று கூலிவேலை செய்துவந்தாள். தையல் வேலையில் வரும் சிறு தொகைப் பணத்தை அவன் கல்வி வாழ்விற்கு செலவழித்தாள்.

அக்கா படும் கஷ்ரத்தினால் அவன் ஒழுங்காகக் கல்வி கற்றான். இவ்வாறாகக் காலங்கள் உருண்டோடின. தார்சில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினான். பின் சில காலங்கள் அக்காவுடன் வயல் வேலைகளில் தானும் கஷ்ரப்பட்டு வந்தான். இப்படித்தானே அக்கா ஒவ்வொரு நாளும் கஷ்ரப்படுகின்றாள் என எண்ணியபடியே இருந்தான். இவ்வாறாக நாட்கள் ஓடிக்கொண்டே இருந்தன. பரீட்சை முடிவும் வந்தது. அந்தப் பாடசாலையில் மிகக்கூடுதலான பெறுபேறுகளைப் பெற்றான். அவன் அக்கா அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. மேற்படிப்பிற்காக அவனை அனுப்பினாள்.



அக்காவின் ஆசீர் வாதத்துடன் சிறப்பாகப் படித்துவந்தான். நாட்கள் காலங்களாகி, காலங்கள் மாதங்களாகி, அவன் படித்து ஓர் உயர் பதவியை அடைந்தான். அதாவது அவன் ஒரு வைத்தியரானான். அவன் வீடு வந்து - கொண்டிருந்தபோது வீதியைக் கடக்க முயலுகையில் வேகமாக வந்துகொண்டிருந்த கார் ஒன்றில் அடிபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். நிறைய இரத்தம் வெளியேறியது. இதை அறிந்த அக்கா அவனுக்காகச் செபித்தாள். கண் விழித்துப் பார்த்த தார்சில் அவனருகில் சோர்வுடன் அக்கா இருப்பதைக் கண்டான். உடனே முத்தமிட்டான். சோர்வில் இருந்தவள் சரிந்து வீழ்ந்தாள். பின் அவனுடைய அக்கா என்ற தெய்வம் எழுந்திருக்கவேயில்லை. அக்காவின் பெருந்தன்மையை நினைத்து மனம் நொந்து அழுதான்.

"ஏழைகளின் மத்தியிலே இறைவன் பிரசன்னமாய் இருக்கின்றார்"

*செ. சோபா சயந்தினி, வண்ணாகுளம்*

## சிந்தனைத் துளிகள்.....

- அருவிக்கும் கற்பாறைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் எப்போதுமே ஓடுகின்ற அருவிதான் வெல்கிறது. பலத்தாலல்ல ஆனால் விடாமுயற்சியினால். அருவியினால் கல்லை அசைக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் விடாமுயற்சியால் அது கற்பாறையையே வென்றுவிடுகிறது.
- வாழ்க்கையின் வெற்றியினுடைய இரகசியம் எதுவென்றால் வாழ்க்கையின் ஒவ்வொரு படிக்கட்டிலும் திடமாகக் காலை வைப்பதுதான்.
- மாபெரும் அதிஷ்டங்கள் பிறருக்கு மிக அரிதாக உதவுகின்றன. ஆனால் சிறிய அதிஷ்டங்கள் பல எம்மை நாளும் சூழ்ந்து உதவத் தயாராக இருக்கின்றன.
- ஏதாவது ஒன்றைக் கடினமில்லாமல் நாம் வாசிக்கக்கூடியதாக இருந்தால், அதை எழுதியவன் அதை எழுதுவதற்கு மிகவும் கஸ்ரப்பட்டிருப்பான் என்பதை நாம் உணர வேண்டும்.
- நா தடுமாறுதல் கால்கள் தடுமாறுதலிலும் கேவலமானது.
- உடன்பட்டுப்போதல் தலைமைத்துவத்திற்கு எதிரான குணவியல்பு
- துன்பங்களைத் தாங்கிக்கொள். ஆனால் துன்பம் செய்யாதே.
- அனைத்தையும் கேள். ஆனால் எதையும் சொல்லிவிடாதே.
- அனைவருக்கும் கொடு. ஆனால் எதையும் எடுத்துவிடாதே.
- அனைவருக்கும் சேவை செய். ஆனால் பெரியவனாக இருக்க நினைத்துவிடாதே.

## மூன்று மூன்று



மரியாதை செய்யப்பட வேண்டியவை மூன்று :
வயோதிபம், மதம், சட்டம்.

தொழ வேண்டியவை மூன்று :
அறிவு, அழகு, இசை.

உருவாக்கிக்கொள்ள வேண்டியவை மூன்று :
உறுதி, நட்பு, காதல்.

கவனமாய் இருக்கவேண்டியவை மூன்று :
பேச்சு, சமநிலை, செயல்.

அகற்றப்படவேண்டியவை மூன்று :
பொய், சோம்பல், பிறர்பால் சார்ந்திருத்தல்.

அடிக்கடி கவனம் செலுத்தவேண்டியவை மூன்று
சொல், நடத்தை, குணம்.

அறவே நீக்கிவிடவேண்டியவை மூன்று :
மது, புகைப்பிடித்தல், சீட்டு ஆடுதல்.

விரும்பி ஏற்றுக்கொள்ளவேண்டியவை மூன்று
நேர்மை, தாய்மை, வாய்மை.

*தே. ஜெபமலர் (ஜெர்மா),சாளம்பன்.*

## பூ பூ பூ பூ

| | |
|---|---|
| ஒருவர் இன்னொருவர்மீது வைக்கும் பூ | - அன்பு |
| மனதில் மகிழ்ந்து விரியும் பூ | - சிரிப்பு |
| சமையல் செய்ய பயன்படும் பூ | - அடுப்பு |
| காலில் அணியும் பூ | - செருப்பு |
| உணவுக்குச் சுவையூட்டும் பூ | - உப்பு |
| இலங்கையில் ஏற்றுமதியாகும் பூ | - கராம்பு |
| நீர் வெளியேறாமல் வயலில் கட்டும் பூ | - வரம்பு |
| கெட்ட மனிதரிடம் உள்ள பூ | - வம்பு |
| நல்ல மனிதரிடம் உள்ள பூ | - அன்பு |

*ஆர். ஏ. றுக்சன், காந்திநகர், செட்டிகுளம்.*

## வெறுப்புக்குரியவை

*வெகுளி, சினம் ஆகிய இரண்டும்*
*வெறுப்புக்குரியவை.*
*பாவிகள் இவற்றைப்*
*பற்றிக்கொள்கின்றார்கள்.*

*ம. அனுஷா, மாவிலங்கேணி, அளவக்கை.*

# கவிதைப் பூக்கள்

## நிருபணம

அலைகள் ஓய்ந்துவிட்டது அவலக் குரல் ஓயவில்லை.
உயிர் பிரிந்துவிட்டது உடலோ இன்னும் கரைசேரவில்லை.
கடல் வற்றிவிட்டது - எம் கண்ணீரோ வற்றவில்லை.
காலனோடு வந்த கடலலையே நீ காவிச் சென்றது பலகோடி.
கற்றுத் தந்ததோ ஒரு பாடம்.
இவ்வுலகச் செல்வம் நிலையற்றது
என்பதை நிரூபித்துவிட்டாய்!

*ஆர். றொபின்சா, வண்ணாகுளம்*

## அன்பின் கங்கை



அன்பின் கங்கை அன்னை திரேசா
அரவணைத்திடும் அன்னை திரேசா
அகிலத்தை வென்ற அன்னை திரேசா
அன்பின் ஆசான் அன்னை திரேசா
அமைதி காத்திடும் அன்னை திரேசா.




நன்றியுள்ள அன்னை திரேசா
நல்லது செய்யும் அன்னை திரேசா
நாவைக் காத்திடும் அன்னை திரேசா
நறுமணம் பரப்பிய அன்னை திரேசா.

ஞானமுள்ள அன்னை திரேசா
ஞாலத்தைக் காத்த அன்னை திரேசா
ஏழ்மையின் வடிவம் அன்னை திரேசா
ஏழைகளைக் காத்திடும் அன்னை திரேசா.


*செ. வினோதினி (யூலி), பரிகாரிகண்டல்*

## சமாதானம்



பாரெல்லாம் அமைதி பெற்றிடவே
இளைஞர்கள் ஒன்றாய் கை கோர்த்திடுவோம்
சமுதாயத்தில் அமைதி பெற்றிடவே
யுவதிகள் ஒன்றாய் கைகோர்த்திடுவோம்.

இறைவனின் சிற்பக்கலை தரணியடா
அதைக் காப்பது நமது கடமையடா
அவனியெல்லாம் ஒளிவீச பாடுபடுவோமடா
தாய்மண்ணை என்றும் மறவோமடா.



இனவெறி கொண்ட காளையரையும்
மதவெறி கொண்ட மூர்க்கரையும்
இளைஞர் சமுதாயம் ஒன்றுசேர்ந்து
அடிச்சுவடு தெரியாமல் அடக்கி ஆளுவோமடா.

மனையில் திருவிளக்காய் வேண்டும் சமாதானம்
சமுதாயத்தில் ஒளிவிளக்காய் வேண்டும் சமாதானம்
பாரினில் குலதீபமாய் ஒளிர வேண்டும் சமாதானம்
உள்ளத்தில் வேண்டும் சமாதானம்
இரத்தத்தில் ஊற வேண்டும் சமாதானம்.

*டி. லொஜிற்றா, பேசாலை*

## தாய்மனம்

உதரத்தில் உன்னை வைத்து ஈர்ஐந்து திங்கள் வரை
இளைப்பின்றிச் சுமந்தவளே,
இவ்வுலகில் புது மலராய் மாலை இட்டு வரவேற்றாள்
மாதங்கள் அனைத்திலும் உன்னை மாசறக் காத்துவந்தாள்.
பாலோடு பாசம் ஊட்டி பருவத்தில் பள்ளி சேர்த்து
பக்குவமாய் பயிற்றுவித்தாள்.
மாணவன் வரம்பினுள் மாணிக்கமாய் வாழவன்றோ
மாலையிலும் கண் துஞ்சாது உன்னை அவள் ஊக்குவித்தாள்.
உணர்வுகள் உனக்கிருந்தால் இப்பாரில் நீ உயராயோ?
ஊனமாய் இருந்துவிட்டால் தூங்கிடுமோ தாய் மனம்.
உத்தமனாய் உனை வளர்க்க உறங்கி அவர் பலகாலம்.
கல்வியில் கரை சேர்த்து,
காலமதில் வாழ்வு தந்தவளுக்கு கடைசிவரை துணை இருக்க
மரமாகிறதே உன் மனம் ..........!

*பி. வறேஸ் சொய்சா, வங்காலை*

# கொஞ்சமாச் சிரிங்க ..... கொஞ்சமாச் சிரிங்க .....

**சுந்தர்:-** என்னங்க! கல்யாணப் பத்திரிகையைக்கூட சின்னக்கவர் ஒண்ணுல வெச்சுக் கொடுக்கிறீங்க?
**ஆனந்:-** 'கவர்' இல்லேன்னு நீங்க காசு வைக்காம இருந்துடக்கூடாது பாருங்க...... அதுக்குத்தான்.

*************



**சந்திரன்:-** கடைசிக் காலத்தில் நீ நடுத்தெருவிலதான் நிக்கப்போறேன்னு என் அப்பா சொன்னது நடந்திச்சு.
**இந்திரன்:-** ஆ......அப்படியா? எப்படி?
**சந்திரன்:-** "டிராஃபிக் கான்ஸ்டபிள்" (போக்குவரத்து ஒழுங்கமைப்பாளர்) வேலை கிடைச்சிருக்கு.

*ச. மேர்சி தனுஜா, பாலையடிப்புதுக்குளம்.*

**ஒருவன்:-** இளவரசன் ஏன் போர்க்களத்திற்கு சீப்போட போகிறார்?
**மற்றவர்:-** போர்க்களத்தில் 10 பேர் தலையையாவது சீவிவிட்டு வரனும் என்று மன்னர் உத்தரவிட்டிருக்கிறாராம்.

*************

**நண்பன்:-** உங்கள் பையன் குடிக்கிறானே, நீங்க கேட்கக்கூடாதா?
**மற்றவர்:-** நானே இப்ப மப்புல இருக்கிறேன். அவன்கிட்ட வேற வாங்கிக் குடிச்சா விழுந்திடுவேன்.
**நண்பன்:-** !!!!

*ஞா. கிறிஸ்து றாஜா (கிறேசியன்), சாளம்பன்.*



**பெண்:-** இந்த மருந்தைச் சாப்பிட்டதும் நடக்கணும்னு என் புருசங்கிட்ட சொன்ன நீங்க எவ்வளவு தூரம் நடக்கணும்ணு சொல்லியிருக்கக் கூடாதா டாக்டர்?
**டாக்டர்:-** ஏம்மா ஏதாச்சும் பிரச்சினையா?
**பெண்:-** நேத்து மருந்தை சாப்பிட்டதும் நடக்கப்போறேன்னு போனவர்தான், இன்னமும் வீடு திரும்பல டாக்டர்.

*ப. டினஷா, பெரிய குஞ்சுக்குளம், மடுவீதி.*

**சிறுவன்:-** என்ன தாத்தா சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள்?
**முதியவர்:-** அதுவா எல்லாம் மகிந்த சிந்தனைதான்.

**மனைவி:-** கோவிலுக்குள்ள வந்து சாமி கும்பிடாமல் என்னத்துக்கு அந்தப் பிச்சைக்காறனோட ஜோக் பண்ணிக்கொண்டு இருந்தனீங்க?
**கணவன்:-** ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டனான் கமலா.



**ஒருவர்:-** கத்தி சாணை பிடிப்பீங்களா
**சாணைபிடிப்பவன்:-** கத்தவெல்லாம் முடியாது. அமைதியாகத்தான் சாணைபிடிப்பேன்.

************

**மாலா:-** என் கணவர் எல்லாவற்றிலும் மிகவும் சிக்கனம், ரேடியோவில் செய்தி மட்டும்தான் கேட்பார்.
**மாலதி:-** இதென்ன சிக்கனம் என் கணவர் ரேடியோவில் செய்திச் சுருக்கம்தான் கேட்பார்.

*************

**சுந்தர்:-** டாக்டர் எனக்கு சரியான சக்கரை வியாதி.
**டாக்டர்:-** சுந்தர் கொஞ்சம் கவனமாக இருங்க, பல ஜாதி எறும்புகளும் தேடி வரும்.

**************


**வேந்தன்:-** முகுந்தா நம்மட சுப்பையா மீனைச் சாப்பிட்டுவிட்டு மண்டையப் போட்டிற்றார்.
**முகுந்தன்:-** என்ன இறந்திட்டாரா?
**வேந்தன்:-** இல்லடா, மீனுடைய மண்டைய கீழே போட்டிற்றார்.

*இ. டெலாறோஸ், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.*

**டாக்டர்:-** அந்த நோயாளிக்கு நீ முத்தமெல்லாம் கொடுக்கிறியாமே?
**நேஸ்:-** அவர் எது கேட்டாலும் கொடுங்கன்னு நீங்கதானே டாக்டர் சொன்னீங்க ....!

*ம. தர்மிகா, இல. 109, பெரிய பண்டிவிரிச்சான்.*


# தவக்கால சிறப்பிதழ்



## தவக்காலச் சிந்தனைகள்

சுதர்சன் பீரிஸ், மன்னார்

தவக்காலம் என்பது மனமாற்றத்தின் காலம். இந்தக் காலத்தில் நாம் இயேசுவின் பாடுகள், மரணத்தை எமது உள்ளத்தில் நினைவுகூர்ந்து தியானிக்கின்றோம். பிறர் நம்மைப் பார்க்க வேண்டும் என்று நினைக்காமல் மறைவாக, எம்மால் இயன்ற தவ ஒறுத்தல் முயற்சிகளை நிறைவேற்றுவதன் மூலம் தவக்காலத்தின் மனநிலையை நாம் நமதாக்கிக்கொள்ளலாம்.



கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் "ஒவ்வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் சகோதரன்" என்று எண்ணி வாழ அழைக்கப்படுகின்றோம். ஒற்றுமை, அன்பு, பகிர்வு, விட்டுக்கொடுத்தல், பராமரித்தல், உதவிசெய்தல் போன்ற பண்பில் நாம் வளர இத்தவக்காலம் அழைப்பு விடுக்கின்றது.●

## எமது வாழ்வின் பாதை...

தே. ஜெயமலர்,
சாளம்பன், ஆட்காட்டிவெளி.

*சிலுவைப் பாதை நம் மீட்பின் பாதை*
*நலிவுகொண்ட நம் மீட்பர் நடந்துசென்ற பாதை*
*நம் அனைவருக்கும் நலமும் வளமும் தந்திட்ட நற்பாதை*

இது என்றோ ஒரு நாள் வரலாற்றில் நடந்து முடிந்து விட்ட சரித்திர நிகழ்ச்சி மட்டுமல்ல. இது எம் ஒவ்வொருவரினதும் அன்றாட வாழ்க்கைப் பாதையாகும்.



கிறிஸ்துவின் சிலுவை ஏழைகளின் வெற்றிச்சின்னம். பாவிகளின் தஞ்சம். பலவீனர்களின் ஆற்றல், கலங்கித் துடிப்போருக்கு கலங்கரை விளக்கம், கட்டுண்டு இருப்போருக்கு விடுதலைக் கருவி.

தம் சொந்த இரத்தத்தினால் பாதை முழுவதும் சிவப்பாக்கிய சிலுவைத் தேவன் தாம் வெற்றி நடைபோட்ட பாதையில் எம்மை அழைக்கிறார். பாரச் சிலுவை தாங்கி கோர மரணத்தைச் சந்தித்து வீரமுடன் வெற்றிநடைபோட அனைவரும் வாருங்கள். ●

## இயேசுவின் கல்வாரி அன்பு

பிலேந்திரன் யூலியஸ், தேவன்பிட்டி

இயேசு செய்த அற்புதங்களைக் கண்ட பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஆலோசனைச் சங்கத்தார் அனைவரும் கூடி ஆலோசனை செய்து இயேசுவைக் கைது செய்து பிலாத்துவிடம் ஒப்படைத்தனர்.



அவர்களோ அவரைச் சிலுவையில் அறையும்படி கூக்குரல் இட்டனர். அப்பொழுது பிலாத்து அவர்கள் கேட்டுக்கொண்டபடியே ஆகட்டும் என்று தீர்ப்பளித்தான்.

முள்முடி சூட்டி, பாரச் சிலுவையைத் தோளில் சுமத்தி, கொல்கொத்தா மலை நோக்கி யேசுவை நடத்திய வேளையில் சிலுவையின் பாரத்தால் களைப்பும், வேதனையும் மேலிட்டதால் சீமோன் என்பவனை உதவிக்கு அழைத்தனர் எனினும் எம் பாவச் சிலுவையை யேசு ஒருவரே தனித்து நின்று சுமந்தார்.

கொல்கொத்தா மலை உச்சியில் பிலாத்துவின் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. இயேசு ஏலீ, ஏலீ, லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டு உயிரைவிட்டார்.

ஆம். நம் தேவன் நாம் அவமானப்படக்கூடாது என்று தாமே எமது அவமானத்தைச் சிலுவையில் சுமந்துகொண்டார். நாம் பாவத்தில இருந்து விடுதலை அடைவதற்காக தம் சிலுவையினால் எம் பாவ நாட்டங்களை எல்லாம் தகர்த்துவிட்டார். நாம் கைவிடப்படக்கூடாது என்பதற்காக நமக்காக அவர் சிலுவையில் கைவிடப்பட்டார். அதுமட்டுமா எங்கள் நோய்களை எல்லாம் சுமந்து கொண்டார். எங்களுக்காக சிலுவையிலே பரிந்து பேசினார்.

இவரே நம் கல்வாரி நாயகன். இவருடைய அன்பு ஆழம் காண முடியாதது. அதனால்தான் தம் உயிரைக் கொடுக்கவும் அவர் தயங்கவில்லை. இவர் ஒருவரே எங்கள் மீட்பர், இவர் ஒருவரே நம் தேவன். இவர் ஒருவரே ஆண்டவர். இவர் மூலமாய் மட்டுமே நாம் விடுதலை பெறமுடியும்.

"அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படவில்லை, மாறாக குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தாலே மீட்கப்பட்டீர்கள்" (பேதுரு 1 : 18-19). அதனால்தான் முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்று எழுதியிருக்கின்றது. பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்து உயிர்ப்பிக்கின்ற ஆவியானார் (1 கொரி 15:45).

ஆகவே இதுவரையும் நாம் பின்பற்றி வந்த தவறான வழிகளைத் தள்ளிவிட்டு கடவுளுக்கு பிரியமானதைச் செய்வோம். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராடி, நித்திய ஜீவனைப் பற்றிக்கொண்டு அதற்காகவே நாம் அனைவரும் அழைக்கப்பட்டோம் என்று அறிந்தவர்களாய் ஓடி, ஓடி உழைத்து நமக்காக வைக்கப்பட்டிருக்கும் ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வோம். ●

## சிலுவையில் ஓர் சிந்தனை

அருட்பணி.நிர்மலராஜ் செ. தா.



*மனிதத்தின்*
*விடிவுக்காக நீர்*
*மரித்தீரே.*
*நான் மனிதம்*
*மலர என்ன*
*செய்தேன்?*
*நீர் உண்மையின்*
*வாழ்வை*
*உணவாகத்*
*தந்தீர்.*
*நான் உறவின் பாதையை*
*எவ்வாறு கட்டி எழுப்பினேன்?*
*நீர் நீதியின் வாழ்வை*
*நிலைநிறுத்தி வாழ்ந்தீர்.*
*நான் என் வாழ்வில் எவ்வாறு*
*நீதியாக நடக்கின்றேன்?*
*நீர் தியாகத்தின் மாமனிதராக*
*என்றும் நிலைக்கின்றீர்.*
*நான் எந்தளவுக்கு உம்*
*தியாகத்தில் பங்கு*
*கொள்கின்றேன்?*
*நீர் சிந்திய இரத்தத்தால் என் பாவங்கள் கழுவப்பட்டன*
*நான் எத்தனை மனித உயிர்களின் உணர்வுகளை*
*சிதைவடையச் செய்துவிட்டேன்?*
*நீர் பாடுகளால் பல உண்மைகளை எனக்கு வெளிப்படுத்தினீர்*
*நான் என் சிறு பாடுகளையே எதற்காக மறுத்துவிடுகின்றேன்?*
*நீர் சிலுவ்வையில் எனக்கு மீட்பைத் தந்தீர்*
*ஆனால் நான் என் சிறுமையான எண்ணத்தால்*
*எத்தனை தடவை உம்மை மறந்து இருக்கின்றேன்?*
*மறுத்து இருக்கின்றேன்?*

கொஞ்சம் நிமிர்ந்து பார் சிலுவையை! ஏனெனில் இதுதான் மனித மீட்பின் திறவுகோல். மனித வாழ்வின் அளவுகோல். ஏனென்றால் நீ எந்தளவுக்கு இயேசுவின் பாடுகளில் பங்கு கொள்கின்றாயோ அந்தளவுக்கு நீ இறையன்பில் மகிழ்வாய். அருள் வாழ்வு உன்னில் குடிகொள்ளும். இதனால் இறை இயேசுவின் பாடுகளுக்கு நீ சாட்சியம் அளிப்பாய். ஏனெனில்

"சிலுவையில்தான் எமக்கு நிறை வாழ்வு
சிலுவையினால்தான் எமக்கு மீட்பு"





## தவமாய் தவமிருந்து...



திருமதி. எம்.ஏ.எம். கபிரியேல் நீற்றா
நானாட்டான்

எமது வாழ்க்கையில் நாம் எவ்வளவோ எண்ணில் அடங்காத அருட்கொடைகளையும் நன்மைகளையும் பெற்று இருக்கின்றோம், அனுபவித்து இருக்கின்றோம். ஒவ்வொரு வளர்ச்சிப்படிகளையும் நாம் தாண்டிச்சென்று, ஒவ்வொரு திருவருட்சாதனங்களையும் பெற்று, எம்மை பக்குவப்படுத்தி இருக்கின்றோம்.

இவ்வருட்சாதனங்கள், திருக்கொடைகள் ஊடாக, மாபெரும் அருட்கொடையை, விலைமதிக்க முடியாத பெருங்கொடையை, ஈடுஇணையற்ற திருக்கொடையை இறைவன் எமக்குத் தந்து இருக்கின்றார். அவர்தான் இயேசு.

நாம் செய்த புண்ணியத்தால் வந்தவர் அல்ல கிறிஸ்து, தவத்தின் முயற்சியால் கிடைத்தவர் அல்ல கிறிஸ்து. எமது பாவத்தின் வீழ்ச்சியால் உயர்த்தப்பட்டவரே கிறிஸ்து. துன்பத்தைப் போக்கும் சிலுவையில் அறையப்பட்டு எம் மனத்துயரத்தை நீக்கிய யேசுவை நாம் ஏன் தவமாய் தவமிருந்து கிடைத்த மீட்பர் என எண்ணக்கூடாது?

தப்சுகாலம் வரும், போகும். ஆனால் நாம் எந்தக் காலத்துக்குள் நுழைந்து வெளியே வந்தாலும், ஏன் நாம் மாற்றமடைய மறக்கின்றோம். தபசு காலத் தொடக்கத்தில் எத்தனை குருசுகளை எரித்து, நொறுக்கித் தூளாக்கி, பின்பு அதை அடையாளமாகப் பூசுகின்றோம். அன்று ஒரே ஒரு சிலுவையில் யேசுவை அறைந்து, உயிர் நீக்கச் செய்தார்கள். அந்த ஒரு இயேசு கோடிக்கணக்கான மக்களுக்காக உயிர் துறந்தார். நாம் பல குருசுகளை எரித்து நெற்றியில் பூசிய பின்பும், அந்த ஒரு இயேசுவுக்காக ஏன் நமது உள்ளத்தை மாற்றக்கூடாது. "தாவீதின் மகனுக்கு ஓசானா" என்று ஓலமிடுகின்றோம். இது பக்தி முயற்சியாக இருந்தாலும் எம் உள்ளத்தை ஏன் நாம் மாற்றுவது இல்லை?

வீடுதோறும், வீதிதோறும், ஆலயம்தோறும், பாடுகளின் பயணத்தை ஊர்வலமாகத் தியானிக்கின்றோமே. எம் அகத்திற்குள் ஆண்டவனை வைத்திருக்கின்றோமா? யார் மடிந்தாலும், அழிந்தாலும் நமக்கென்ன என்று அலட்சிய மனநிலையோடு வாழும்போது நாம் செய்யும் சிலுவைப்பாதை வெறும் பக்தி முயற்சியாகவே மாறிவிடும்.

"தீர்ப்பிடாதே, தீர்ப்புக்கு உள்ளாவாய்" என்பது யேசுவின் திருவாக்கு. இந்த நல்வாக்கைப் பொழிந்த யேசுவையே அன்று மனிதன் தீர்ப்பிட்டான். ஏன்? சிலுவையைச் சுமந்து கல்வாரி மட்டும் போகும்படி செய்த நமது தீர்ப்பு எப்படிப்பட்டது? கல்வாரி மட்டுமல்ல கடைசி மட்டும் வாழ்க்கையில் மறக்கமுயாதவாறு நமது நாவின் வலிமையைக் காட்டிவிடுவது இல்லையா?

சிலுவை மரத்தின் பளுவையும் எமது பாவத்தின் அழுத்தத்தையும் தனது தோள்மேல் ஏற்றி, மௌனமாக ஊர்வலம் செல்கின்றார் இயேசு. பாதையில் தடைக்கற்களைத் தாண்டி மீட்பு எனும் படிக்கற்களைத்தர தாண்டித்தாண்டிச் செல்கின்றார்.

வாழ்வின் சுமைகளினால் சுகம் இழந்த மாளிடருக்கு எப்போது சுமைதாங்கிகளாக மாறப்போகின்றோம்? சிலுவைகளைச் சிறகுகளாக மாற்ற, சுமைகளை சுகங்களாக மாற்ற, சுமை சுமக்கும் தோள்களுக்கு வலிமையை ஊட்ட நாம் முயற்சிக்க வேண்டாமா?

யேசு மூன்று முறை முகம்படிய மண்ணை முத்தமிட்டார். முயற்சித்தார், எழுந்தார், பயணம் தொடர்ந்தது, ஆனால் நாம்? பாவத்தில் இறந்தவர்களாக நடைபிணமாக நடமாடித் திரிவதில்லையா?

அடுத்தவனை மிதிப்பதற்கு மட்டும் எமது கால்கள் தயராகி விடுகின்றன. ஆனால் அடுத்தவனை மதித்து தூக்கிவிட நாம் முன்வருவதில்லை.

ஆலமரமாகிய யேசு விழச்சென்றபோது அவருக்கு ஆறுதலாக சீமோன் சென்றார். இன்று எவரின் ஆறுதலுக்காக, எவரின் வீழ்ச்சியை உயர்த்த நாம் கைகொடுக்கின்றோம்? அடுத்தவரின் கண்ணீர் வாழ்க்கையைக் கண்டும் காணாதவர்களாய் எம் கண்களை குருடாக்கி கொள்வதில்லையா? ஓடிச்சென்று உதவவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் எம் கால்களை முடமாக்கிக் கொள்வதில்லையா?

ஒரு தென்றலாக இருந்த வெரோணிக்கா ஒரு புயலாகப் புகுந்து யேசுவின் திருமுகத்தைத் துடைக்கின்றாள். யேசுவின் இதயத்தைத் தொட்டவள் வெரோணிக்கா.

இன்று நாம் எத்தனைபேரின் இருள் சூழ்ந்த முகத்தைத் துடைக்க முன்வந்து இருக்கின்றோம்? அல்லது எமது செய்கையால் கறைபடியச் செய்து இருக்கின்றோம்? அழுதார்கள் ஜெருசலேம் பெண்கள். யாருக்காக? யேசுவுக்காகத்தானே. யேசு கூறுகின்றார், மெழுகு உருகுகிறதே என்று வருந்தாதே. விதைகள் மடிகின்றதே என்று கவலைப்படாதே. வேர்கள் மறைந்து போகின்றதே என்று அங்கலாய்க்காதே.

அழுங்கள், எனக்காக அல்ல உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார். எது நிழல்? எது நிஜம்? என்று தெரியாத அளவிற்கு வாழ்க்கை தடம்புரண்டு விட்டதை நினைத்து அழுகின்றோமா? வாழ்க்கையில் அழவேண்டிய காரியங்கள் நிறைய இருந்தும், அந்தத் தூய யேசுவைப் பார்த்து நாம் ஏன் அழவேண்டும்?

பறவைகளுக்குகூட சிறகுகள் என்ற ஆடை கொடுத்த பரமனுக்கு, மரங்களுக்குக்கூட பட்டை என்ற ஆடை கொடுத்த ஆண்டவனுக்கு, இங்கே ஆடை உரிக்கப்படுகின்றது. யேசு ஆடை இழந்தார். நாம் பாவம் செய்யும் ஒவ்வொரு முறையும் அருள் ஆடையை இழந்து நிற்கின்றோம். ஆண்டவனின் அருளை, ஆடையாக அணிவதை விடுத்து, அணிகலன்களுக்கு அழகுசாதனங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து ஆடையாக அணிவதில்லையா? அன்பு எனும் ஆடையை அணிந்து அடுத்தவரை ஏற்று அரவணைக்க முற்படுகின்றோமா?

தொழுநோயாளரைத் தொட்டு குணப்படுத்திய கரங்கள், குழந்தைகளை அணைத்த கரங்கள் இவற்றின்மேல்தான் ஆணிகள் அறையப்படுகின்றன. ஊர் ஊராய் நடந்து சென்று புதுமைகள் நடத்திய கால்கள் ஆணிகளால் அறையப்படுகின்றன. யேசுவின் கால்கள், கைகள் செய்த குற்றம் என்ன? எமது நிலை என்ன?


நாம் எம்மையும் பிறரையும் ஆணிகளால் அறைந்த சந்தர்ப்பத்தை நோக்கினால் அறைய வேண்டும் எமது தன்னல வாழ்க்கையை, அன்பற்ற இதயத்தை, அடுத்தவரின் வாழ்வை சிதைக்கின்ற சிந்தனைகளை, குள்ளநரித்தனமான எமது எண்ணத்தை, மற்றவர்களை மிதிக்கத் துடிக்கும் எமது கால்களை அறைய வேண்டும்.

தபசு காலம் எமக்கு புகட்டும் பாடம் என்ன? பாடுகளின் நிலைகள் எமக்குத்தரும் சிந்தனைகள் எவை? அதை செவிமடுப்பதால் எம்மீது எழும் மாற்றங்கள் என்ன? சிந்திப்போம், பிறரையும் சிந்திக்கத் தூண்டுவோம். தவமாய் தவமிருந்து கிடைத்த தபசு காலத்தை இயன்ற அளவு பயனுள்ளதாக மாற்றுவோம்.

உலகிற்கு ஒரே ஒரு சூரியன் ஒளியைத் தருகின்றான். எம் வாழ்விற்கு ஒரே ஒரு மீட்பர் மீட்பைத் தந்தார். அவரோடு இணைந்து வாழ்வோம். ●

# கலை இலக்கியச் சாரளம்

## கவிதைக் களம்



### பூவே புயலாகு...!

பெண்ணே நீ
பாரதியின் புதுமைப் பெண்!
நாளாந்த நடப்புக்குள்
நலிந்து கிடக்க
உனக்கு இன்னும் ஆசையா?

சீதன வெறியர்களின்
சீதனக் கொடுமைக்குள்
சிக்கித் தவிக்க
உனக்கு இன்னும் வேட்கையா?

நீ படிப்பதும் பக்குவப்படுவதும்
இறைவழிபாட்டிற்கு சமம்
என்றார் நேரு.
உனக்கு சமத்துவம் வழங்குவதே
மானிடத்தின் சுயமரியாதைக்கான
சரித்திரம் என்றார் பெரியார்.

உனக்காக பேசிய
பெண்ணினவாதிகளின் வார்த்தைகள்
வெற்றுக் காகிதமாகலாமா?
நீ புத்துலகு படைக்கும்
வித்து என்பதை விளங்க வைத்துவிடு.

பெண்ணே! நீ
பூவாக இருப்பதை முதலில் நிறுத்து.
புயலாக புதுப்பாதையில் புறப்படு.
நீ புயலான பூ
என்பதை இப்பூமி
புரிந்துகொள்ளட்டும்!

*எம். ஆர். றெஜினா,*
*தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா.*

### சுடரில்லா தீபம்

நதிகளின் மேல் ஓர் துரும்பு
அலைகளில் தள்ளாடுகின்றது.
கரைகளில் படகிருக்கு, துடுப்பிருக்கு.
பக்கத்திலே படகோட்டியும்
கரைகளில் ஒதுங்க முடியவில்லை
அலைகளுக்குள் அடங்கவும் வழியில்லை.

வழி சொல்லாத மனிதர்களும்
வழி மறித்த மனிதர்களும்
மௌனங்களில் குடியமர்ந்து
வாசலிலே தடுக்கிறார்கள்.

இதயங்கள் பூட்டப்பட்டு
திறப்புக்கள் தொலைந்துவிட்டன.
என்ன அதிசயம்
பூவை முட்கள் படருவது!

பழத்தோலைப் பிடுங்குவது நியாயம்தான்
குருத்தோலையையுமா பிடுங்குவார்கள்?

சபைகளில் தீர்ப்பு தரிசனங்கள் கத்தியுடன்
கருவியுடன்தான் காத்திருப்போ!

*எஸ். எட்வேட் தாசன்,*
*தலைமன்னார் மேற்கு.*

## மன்னா சிறுகதை

### சொல்ல முடியாத சோகங்கள்

**க. ராதிகா**
**அரச மகளிர் விடுதி, மன்னார்.**



அன்று ஓகஸ்ட் மாதம் 11ம் திகதி வெள்ளிக் கிழமை. காலைக் கதிரவனின் ஒளி ரதியை வருடவே, "கடவுளே!" என்றவாறே ரதி தூக்கத்திலிருந்து விழித்தாள். சுறுசுறுப்பாக தன் காலைக் கடமைகளை முடித்துவிட்டு கடவுளிடம், "இறைவா, என் அம்மாவைக் காப்பாற்று, வருத்தம் சுகமாக மாறவேண்டும் என் உயிரை என்னுடன் வாழவையப்பா" என மன்றாடிவிட்டு அலுவலகம் புறப்பட்டாள்.

அலுவலகத்திலும் அவள் மனமோ தன் தாயையே நினைத்தது. "நாளை நான் யாழ்ப்பாணம் செல்ல வேண்டும்" என லீவு அனுமதி பெற்றுக்கொண்டாள். அப்போது அவளது கையடக்கத் தெலைபேசி அலறவே "ஹலோ வணக்கம்" எனக் கூறியவாறே தன் அழைப்பை இணைத்தாள். மறுமுனையில் அவளது மாமனார் "மகளே உம்முடைய அம்மாவை ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கிறம். அவங்க அவசர சிகிச்சைப் பிரிவில அனுமதிச்சிருக்கிறாங்க. நீ உடனடியாக வெளிக்கிட்டு யாழ்ப்பாணம் வா" எனக்கூறி அழைப்பை நிறுத்திக்கொண்டார்.

ரதியின் மனமோ, "கடவுளே இப்போது நேரம் மதியம் 12 ஆகின்றதே. இப்போது மன்னாரில் இருந்து புறப்பட்டாலும் வவுனியா செல்லவே இரண்டரை மணி நேரமாகுமே" என அழுதாள். நாளைக் காலை முதல் பேரூந்தில் மன்னாரில் இருந்து புறப்பட வேண்டும் என நினைத்துக் கொண்டாள். அவளின் மனநிலை ஒரு நிலைப்பாட்டில் இருக்கவில்லை. அரைநாள் விடுமுறை எடுத்துவிட்டு தனது விடுதிக்குச் சென்றுவிட்டாள்.

தாயின் நினைவு அவளை வாட்டியது. ஆலயம் சென்று இறைவனிடம் முறையிடுவோம் என நினைத்தவளாக மன்னார் வேளாங்கன்னி மாதாவிடம் சென்று வேண்டினாள். "அம்மா தாயே, என் அம்மாவைக் காப்பாற்று. என்னைத் தனிமையில் விட்டுவிடாதே. என் இரு கண்களில் ஒன்றான என் அப்பாவைத்தான் என்னிடம் இருந்து பிரித்து விட்டாய், இனி மறு கண்ணையும் பிரித்துவிடாதே" என அழுது மன்றாடினாள். "கடவுளே! என் அம்மாவை இறுதியிலாவது பார்க்க அருள் செய்வாயா? நாளை என் தாயின் காலடியில் நிற்க வேண்டும், அவளது பொன் முகத்தை நான் பார்க்க வேண்டும்" எனப் புலம்பியவாறே தன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

தாயாருக்குத் தேவையான மருந்துப் பொருட்களையும் சத்துள்ள மா பைக்கற்றுகளையும் வாங்கி வைத்துக்கொண்டாள். நேரமோ மாலை 6.00 மணி ஆகியது. சிறிது நேரத்தில் அவளது நண்பி அம்பி தொலைபேசியில் அழைப்பை விடுத்தாள். "ஹாய் ரதி இண்டைக்கு மாலை 6.00 மணியுடன் A9 பாதை மூடப்பட்டுவிட்டதாம்" எனக் கூறினாள். அப்போது ரதியின் இதயத்தை நேரே துப்பாக்கி தாக்கியதுபோல் இருந்தது.

"கடவுளே! என்ன விளையாட்டு இது. என் தாயை நாளை நான் பார்க்க முடியாதா? இறைவா, வேண்டாம் இந்த விளையாட்டு என்னைப் பெற்ற தாயை நான் பார்க்க வேண்டும்" எனப் புலம்பினாள். உடனே வீட்டிற்கு தொலைபேசி எடுத்து அம்மாவின் நிலை எப்படி என்று பார்க்கலாம் என நினைத்து அழைப்பை எடுத்தாள், ஆனால் அவளின் முயற்சி பயனளிக்கவில்லை. இணைப்புக் கிடைக்க வில்லை. அப்போதுதான் அவளின் வானொலிப் பெட்டியில் அறிவித்தல் போய்க்கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் தாக்குதல் ஆரம்பித்து விட்டதாகவும், தொலைபேசி இணைப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி கூறியது. "கடவுள் இப்படியும் செய்வாரா?" என நினைத்துத் தன் இரவுப்பொழுதை மிகுந்த அங்கலாய்ப்போடு கழித்தாள்.

மறுநாள் 12ம் திகதி சனிக்கிழமை அவள் யாழ்ப்பாணம் செல்ல பல வழிகளில் முயற்சி செய்தாள். ஆனால் கடவுள் அந்த நிமிடம்கூட அவளுக்குக் கைகொடுக்கவில்லை. தொலைபேசி அழைப்பும் இரத்துசெய்யப்பட்டு நாட்கள் 2,3,4 எனச் சென்றுகொண்டே போனது. எந்தவிதமான தொடர்பும் இல்லை. அவளால் எதையும் தாங்கும் மனநிலையும் இருக்கவில்லை. "கடவுளே ஆறுதல் கூறக்கூட ஒருவருமில்லாது தனி மரமாக இருக்கிறேனே" என அழுதாள். A 9 பாதை மூடப்பட்டு ஆறாம் நாள் யாழ்ப்பாணத்தில் இருந்து அழைப்பு வந்தது அவளின் மாமனார் பேசினார். "மகளே! என்னம்மா செய்வது உம் தாயை எம்மால் காப்பாற்ற முடியாது போய்விட்டதே இன்று அம்மா இறந்து ஐந்து நாளாகுதம்மா" எனக் கூறினார்.

"கடவுளே! இப்படிச் செய்துவிட்டாயே. என்னைத் தனிமரமாகவே ஆக்கிவிட்டாயே" எனக் கூச்சலிட்டாள். தன்னை மறந்தாள், உலகத்தையே வெறுத்தாள். அழுதவாறே தூங்கிவிட்டாள். மறுநாள் விழித்து

"மாதாவே ஒரு நாட்டினுள் எங்களுக்கு இந்த நிலையா? பத்து மாதம் தவமிருந்து பெற்றவளின் பூ முகத்தை இறுதி நேரம்கூட பார்க்க முடியாத ஒரு அனாதையாக உள்ளேனே இந்த நிலை யாருக்குமே வரக்கூடாது" என மன்றாடினாள்.

"கடவுளே நான் உன்னிடம் வேண்டுவது, எமது நாட்டில் நிரந்தர சமாதானம் மலர வேண்டும், நாம் மீண்டும் எமது உறவுகளிடம் எந்த அச்சமுமின்றி சென்றுவர அருள்பாலிக்க வேண்டும். எல்லா இன மக்களும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதே என் ஆசை" என இறைவனுக்கு அன்பான கட்டளை விடுத்தாள்.

## தொடர் கட்டுரை – அங்கம் 45



### கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்

#### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

இலங்கையில் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் தனிப்பெரும் நோக்குடன் வருகை தந்த போத்துக்கல் நாட்டு கத்தோலிக்க மதம்சார் மறைப்பணியாளர்கள், குறிப்பாக இயேசு சபை, பிரான்ஸ்சிஸ்கன் சபையைச் சேர்ந்தவர்கள் மறைப்பரம்பலுக்குப் பல ஊடகங்களைக் கையாண்டனர். இவற்றுள் கல்வி, நாடகம், ஆகிய இரண்டு ஊடகங்களும் மிகப்பயனுள்ள பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதற்கு பல வரலாற்று ஏடுகள் சான்றுபகர்கின்றன. பிரான்சிஸ்கன் சபைக் குருமாரிலும் மேலாக இயேசுசபைக் குருமாரே நாடகத்தை மதப் பரம்பலுக்கு அதிகம் பயன்படுத்தி உள்ளனர்.

போத்துக்கல் இயேசு சபை குருமார் இலங்கையில் மறைப்பணியாற்றுவதற்கு 1602ஆம் ஆண்டு வந்துள்ளபோதும், இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தம் சொந்த நாட்டிலும், ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலும் நாடகங்களை ஆற்றுகை செய்து நாடகத்துறையில் ஆழ்ந்த அறிவும், அனுபவமும் பெற்றிருந்தனர். இதனால் இவர்கள் இலங்கையில் கத்தோலிக்க மறைப்பணி தொடர்பான விவிலிய நாடகங்களையும், புனிதர் வரலாறுகளையும் கொள்கை விளக்க நாடகங்களையும், ஒழுக்கக் கோட்பாட்டு நாடகங்களையும் ஆற்றுகை செய்து, நாடகங்களைச் சிறந்த கற்பித்தல் ஊடகமாகக் கையாள்வதில் புலமையும், திறமையும் கொண்டிருந்தனர்.

மத்திய காலத்தில் இடம்பெற்ற பாஸ்குச் சடங்குகளே கிறிஸ்தவ நாடகங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டன. வளர்ச்சிபெற்ற கிறிஸ்தவ நாடகங்கள் மூன்று வகையாக வகுக்கப்பட்டன.

1. mystery plays - மறைபொருள் நாடகங்கள் ( விவிலிய நாடகங்கள்)
2. Miracle plays - அற்புத நாடகங்கள் அல்லது புனிதர் வரலாற்று நாடகங்கள்.
3. Morality plays - ஒழுக்கப் பண்பு நாடகங்கள்

இவற்றுள் விவிலியத்தை அடிப்படையாகக்கொண்டு தோற்றம்பெற்ற நாடகங்கள் மேலும் இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டன. அவை முறையே, கிறிஸ்துவின் பிறப்பைக் கருப்பொருளாக கொண்டவையாகவும், கிறிஸ்துவின் பாடுகள், மரணத்தைக் கருப்பொருளாக கொண்டவையாகவும் ஆக்கப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டவை. கிறிஸ்துவின் பிறப்புப்பற்றிய நிகழ்வுகளுடன் தொடர்புடைய நாடகங்கள் பார்வையாளருக்கு உவகை அளித்தாலும், நாடகப் பாங்கான பண்புகளையும், நடிப்புத்திறமைகளையும், கலைசார் நுட்பங்களையும், வெளிக்காட்டக்கூடியதாக அமைந்தவை பாஸ்கு நாடகங்களே. மேலும் நடிகர்கள், நாடக ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள், நெறியாள்கை செய்வோர் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் பாஸ்கு நாடகங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய சம்பவங்களைக் குறிக்கும் சடங்குகள் பாஸ்குச் சடங்குகள் எனப்பட்டன. பாஸ்குச் சடங்குகளே பாஸ்கு நாடகங்களுக்கு வித்திட்டன. இலங்கைக்குப் போர்த்துக்கேயக் குருமார் கத்தோலிக்க மறையைப் பரப்பும் நோக்குடன் வருகை தந்த சமகாலத்தில் ஐரோப்பாவில் பரவலாகப் பல இடங்களிலும் பாஸ்கு நாடகங்கள் அல்லது பாடுகளின் நாடகங்கள் நன்கு வளர்ச்சிபெற்ற நிலையில் காணப்பட்டன. எனினும் இவை மனிதர்களால் மட்டுமே நடிக்கப்பெற்றன என்பது இங்கு கோடிட்டுக் காட்டப்படவேண்டும். இலங்கையில் முதன் முதல் மனிதர்களால் மட்டும் நடிக்கப்பெற்ற பாடுகளின் காட்சி 1923ஆம் ஆண்டிலேயே இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் முதன்முதல் இடம்பெற்ற பாடுகள் பற்றிய புலக்காட்சி அமைப்பாக பாசோ என்னும் சடங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. 1543ஆம் ஆண்டு முதல் பிரான்சிஸ்கன் சபைக் குருமார் உத்தியோகபூர்வ நிலையில் மறைபரப்பும் பணியை மேற்கொண்டாலும் 1609ஆம் ஆண்டிலேயே இலங்கையில் முதல் பாசோ இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. 1602இல் இலங்கையில் மறைப்பணியை மேற்கொள்ளும்பொருட்டு வருகை தந்த இயேசு சபைக் குருமாரே முதன்முதலில் இலங்கையில் பாசோ புலக்காட்சிச் சடங்கை நடத்தியுள்ளார்கள் என அறியமுடிகின்றது.

இங்கு இடம்பெற்ற பாசோ சடங்கின் நிறைவாக இடம்பெற்ற திருப்பவனியின்போது பவனியில் பங்குகொண்ட சிலர் தம்மைத்தாமே சாட்டைகளால் அடித்து தமது பாவங்களுக்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டார்கள் என்பதையும் 1609 ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகின்றது. (தொடரும்)

## துளிப்பா

**இயேசு**
மனித பாவத்திற்காக
சிலுவையேற்ற ஒரு ஜீவன்.

**தாய்**
தனது உதிரத்தையே
பாலாகக் கொடுக்கும் உத்தமி.

**நண்பி**
என்னை முழுமையாக
அறிந்து வைத்திருப்பவள்.

**கவிதை**
மனதில் புதைந்தவற்றை
வெளிப்படுத்துவது.

**நட்பு**
உண்மையாக உள்ளத்தில்
ஊற்றெடுக்கும் அருவி.

**மெழுகுதிரி**
தான் அழுது
பிறரை சிரிக்க வைப்பது.

*ஞா. நகோமி,*
*ஆலங்குளம்,*
*வட்டக்கண்டல்*

**கல்வி**
மனிதனின் வாழ்வை
வளமாக்கும் ஒரு பள்ளி.

**நம்பிக்கை**
மனிதனின் வாழ்க்கைக்கு
அத்திவாரம்.

**வதந்தி**
கட்டணம் இன்றிப்
பட்டணம் போகும்.

**சீதனம்**
காகிதத்தில் ஒப்பந்தமாகும்
ஓர் களப்பலி.
சமூகத்தின் சம்மதத்துடன்
இடம்பெறும்
பகல் கொள்ளை.

**வாழ்க்கை**
இறக்கும்வரை
விடாது சுழலும் சக்கரம்

*எஸ். வினோதினி*
*(யூலி),*
*நறுவிலிக்குளம்,*
*வங்காலை.*

**தாய்**
கலியுகத்தின்
கண் கண்ட தெய்வம்.

**காதலித்தால்**
காதலித்தால் கவிதை வரும்.
கூடவே கலகமும்
கலக்கமும் கவலையும்
சேர்ந்தே வரும்.

**ஏமாற்றம்**
கனவுக்குள் இருக்கும் ஆயிரம்
கற்பனைகளை ஏன் இந்த
நிஜங்கள் ஏமாற்றுகின்றனவோ?

**சீதனம்**
வாங்கும் கைகளும்
கொடுக்கும் கைகளும்
ஒளிந்தால்தான்
பல ஏழைப் பெண்களின்
வாழ்வு ஒளிரும்.

*அ.அருள்நாதன்,*
*முதலைக்குத்தி,*
*உயிலங்குளம்.*




## முன்னுரை – கொஞ்சம் நில்லுங்கள்!

முகங்களைச் சோகமாக்கி வழிகளை நீர்த்தேக்கங்களாக்கி துக்கத்தில் துவண்டிருக்கும் மனிதர்களே கேளுங்கள்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மாட்டுத்தொழுவத்தில் மரியன்னை மடியில் தவழ்ந்து முப்பத்து மூன்று ஆண்டுகள் இந்த மண்ணிலே நடமாடி இறையாட்சியை உருவாக்கக் கோதுமை மணியாய் பூமியில் விழுந்த நாசரேத்தூர் இயேசு நான் பேசுகிறேன்.

நான் கல்வாரி மலையில் சிலுவையோடு நடந்த பாடுகளின் நிகழ்ச்சியை நீங்கள் இப்போது சிலுவைப்பாதை என்று வழிபாட்டு முறையாக்கிவிட்டீர்கள். இது வெறும் ஆலயச் சடங்காகிவிட்டதே என்ற வேதனை எனக்கு. இது உங்கள் வாழ்க்கைச் சடங்காக மாறவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். என்னிடம் நம்பிக்கை கொண்டவர்களே நான் கூறுவதைக் காது கொடுத்துக் கேளுங்கள். ஒவ்வொரு நிலையிலும் நான் சொல்லும் கருத்துக்களை உங்கள் செவிகளைத் திறந்து சிந்தனையில் பதியுங்கள். இருள்மூடிப்போன உங்கள் இதயங்களில் இந்த வெளிச்சம் பாய்ந்து பரவட்டும்.

## நிலை 01. நீதிமன்றத்தில் நான்

என்னைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்து வந்தவர்கள், பல சித்திரவதைகளைச் செய்து, என்னைக் கசையால் அடித்து, தலையில் முள்ளைக் கிரீடமாய் அறைந்து, பரிகசித்து மக்கள் முன்னிலையில் நீதிமன்றத்தில் நிறுத்தியிருக்கிறார்கள்.

என்னைப்போல நீ எத்தனை பேரை இந்த நிலையில் நிறுத்தியிருப்பாய்? நான் குற்றம் செய்யாதவன் என்பதை நம்புகிறாய் என்பது எனக்குத்தெரியும். ஆனால் குற்றமே அறியாத எத்தனைபேரை நீ இழிவுக்கு ஆளாக்கியிருக்கிறாய்? நிரபராதிகளை கயவர்களின் கைகளிலிருந்து விடுவிக்க நீ முன் வருவாயா?

**எனது பதில் :**

இயேசுவே, நேர்மையாளர்கள் உலக மன்றத்தில் தவறான தீர்ப்புக்கு ஆளாகிறார்கள். இதற்கு இனி நான் காரணமாக இருக்க மாட்டேன். என்னால் முடிந்தவரை நீதியை நிலைநாட்ட முயற்சிப்பேன். இது உறுதி.

## நிலை 02. சிலுவை சுமத்துகிறார்கள்

பிலாத்துவின் விசாரணை மன்றம் என்னைக் குற்றவாளி என்று முடிவுசெய்ததால் எனக்கு மரணதண்டனை உறுதி ஆயிற்று. மரண தண்டனையை நிறைவேற்றுகிற கருவியாக சிலுவையை கல்வாரிமலைக்கு சுமந்துசெல்ல என் தோளிலே சுமத்துகிறார்கள்.

என் நிலையை நினைத்து நீ இரக்கப்படுகிறாய். ஆனால் நீ பல அப்பாவிகளின் தோளில் இதுபோல சிலுவையைச் சுமத்தி விடுகிறாயே! வீண் பழிகளை அடுத்தவர்மீது சுமத்துகிற நீ அதைச் சிலுவை என்று நினைத்திருக்கிறாயா? நீ சிலுவை சுமத்துவது இருக்கட்டும். நீயே பிறருக்குச் சிலுவையாக இருந்து பலரை பாடுபடுத்துகிறாய். நான் உனக்காக சுமக்கின்றேனே, நீ பிறருக்காக சுமக்கக்கூடாதா? உன்னை சுமந்த பெற்றோரை நீ சுமந்தால் என்ன?

**எனது பதில் :**

இயேசுவே! நான் அப்பாவிகள் பல பேரின் தோள்களில் பழிச் சிலுவைகளை ஏற்றி, நானும் என் அழுக்குச் சிலுவைகளால் பிறருக்குப் பாரமாகி விட்டேன். உமது குரலைக் கேட்ட நான் இனி பிறர்மீது சிலுவையைச் சுமத்தமாட்டேன், பிறர் சிலுவையானாலும் மனநிறைவோடு சுமப்பேன்.

## நிலை 03. முதல் முறை விழுகிறேன்

சிலுவைப்பாரம் என் தோளை அழுத்த தடுமாறித் தரையில் விழுகிறேன். படைவீரர்கள் என்னை அப்போதும் அடிக்கிறார்கள்.

மனிதர்களே நீங்கள் வேடிக்கை பார்ப்பதில் வல்லவர்கள். வாழ்க்கைச் சுமையால் விழுகிறவர்களைப் பார்த்து ரசிக்கிறீர்கள். அவர்களைத் தூக்கிவிட நீங்கள் ஒருபோதும் நினைத்ததில்லை. வட்டிக் கடன் சுமையால் அவர்கள் கீழே விழுகிறபோது உங்கள் மனம் இரங்கவில்லையே? வாங்கும் வட்டிப்பணத்தில் கொஞ்சம் குறைக்கக்கூடாதா?

**எனது பதில் :**

இயேசுவே! எம்மோடு வாழ்பவரின் வறுமைக் கோலத்தையும், வாழ்க்கைப் போராட்டத்தையும் வேடிக்கைப் பார்த்தே வாழ் நாட்களை செலவிட்டுவிட்டோம். அவர்களது வீழ்ச்சியில் தரையில் தத்தளிப்பது நீர்தான் இயேசுவே! இனிக் கோரக்காட்சிகளை வேடிக்கை பார்க்காமல் முடிந்தமட்டும் கைதூக்கி விடுவோம்.

## 04 வழியில் அம்மாவை சந்திக்கிறேன்

எனது முகத்தின் கோரக்காட்சியை, தலையில் அறையப்பட்ட முள் கிரீடத்தை, உடலையெல்லாம் கிழித்துப்போட்ட காயங்களை அம்மா பார்த்து எவ்வளவு மனம் சிதைந்து போயிருப்பார். என் கோலத்தைக்கண்டு கொந்தளித்தாலும் என் நிலைப்பாட்டைக் கண்டு நிம்மதியடைந்திருப்பார். எனது பணிவாழ்விற்கு அவர் தடை விதித்ததில்லை.

குழந்தை வளர்க்கிறோம் எனக் கூறிவிட்டு பிள்ளைகளை சமூக அக்கறையோ, ஈடுபாடோ இல்லாது வளர்த்துவிடும் தாய்மார்களே! உங்கள் குழந்தைகளுக்குக் கொஞ்சம் பொது நலனை ஊட்டக்கூடாதா? என்னை உங்களுக்காக என் அம்மா காணிக்கையாக்கினார். பிள்ளைகளை நீங்கள் சுயநலமாக, பிறர்நலனில் அக்கறையில்லாமல் வளர்ப்பது சரிதானா?

**எனது பதில் :**

இயேசுவே! சுயநலமாக குழந்தைகளை வெளியுலகம் தெரியாமல் வளர்த்துவிட்டோம். எங்களை மன்னித்தருளும். இனி, குழந்தைகளை சமூகத்திற்கு பயன்படுபவர்களாய் வளர்ப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

## நிலை 05. சீமோன் உதவுகிறார்

என்னோடு பந்தியில் உண்டவர்கள்கூட எனது சிலுவைச் சுமையை பகிரவில்லையே! இந்தச் சீமோனை நான் பார்த்ததே இல்லை. எனது பாரச் சிலுவையைச் சுமக்க உதவிய சீமோனுக்கு எப்போதும் என் இதயத்தில் இடம் உண்டு. ஒருவருடைய மகிழ்ச்சியில் பங்கெடுப்பதைவிட அவரது சங்கடத்தில் பங்கெடுப்பது சிறந்தது. உதவி தேடி உங்கள்முன் வருபவர்களுக்கு நீங்கள் கருணை காட்டுவதில்லை. உதவிசெய்யும் எண்ணம் இயல்பாகவே உங்களுக்கு இல்லை.

**எனது பதில் :**

இயேசுவே! ஏழை எளியவர்களுக்கு செய்கிறபோது அதை உமக்கே செய்வதாக இப்போது உணருகிறோம். பிறருக்கு உதவுகிறபோது உமக்கு உரியவர்கள் ஆகிறோம் என்ற உண்மையை உணர்ந்துகொண்டோம்.

## நிலை 06. பெண் முகம் துடைக்கிறார்

இரத்தமும், வியர்வையும், கண்ணீரும் சேர்ந்த கலவை என் முகத்தை உருக்குலைத்தது. வெரோணிக்கா என்ற வீரமகள் துணிச்சலுடன் எவரையும்பற்றிக் கவலைப்படாமல் என் முகத்தைத் துடைக்கின்றாள்.

இன்று பெண்கள் வீடுகளில் முடங்கிக்கிடக்கிறார்கள். பல பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டாலும் அதனை அவர்கள் பயன்படுத்துவதில்லை. இரக்கமும், துணிச்சலும் பெண்களிடம் இருந்தால் வெரோணிக்காவைப்போல் வீர வரலாற்றில் அவர்களுக்கு நிச்சயம் இடம் உண்டு.

**எனது பதில் :**

பெண்ணினத்தை மதிக்கும் இயேசுவே, இவ்வுலகில் பெண்கள் ஆணாதிக்க அத்துமீறல்களால் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். உமது முகத்தைத் துடைத்த வீரப்பெண் வெரோணிக்காவை முன்மாதிரிகையாகக்கொண்டு துணிச்சலோடு நாங்கள் இந்தச் சமூகத்தின் கறைபடிந்த முகத்தைத் துடைக்க முன்வருவோம்.

## நிலை 07. இரண்டாம் முறை விழுகிறேன்

என் கால்களும்,கைகளும் நடுங்கி களைத்த உடல் வேறு வழியின்றி மீண்டும் கீழே விழுகின்றது. பயணம் என்றால் பாடுகள் இருக்கும். ஆனால் எனக்கோ பாடுகளே பயணமானதால் இந்தத் தடுமாற்றம்.

மக்களே, நீங்கள் வாழ்க்கையில் எங்கே விழுந்து கிடக்கிறீர்கள்? மூடப்பழக்கவழக்கங்கள், பில்லி-சூனியங்கள் இவைதான் வாழ்க்கை என்று நீங்கள் விழுந்து கிடக்கிறீர்கள். சோதிடம் பார்ப்பது, குறி கேட்பது, சாத்திரங்களும் சகுனங்களும் பார்ப்பது என எனக்கு ஒவ்வாத மூடத்தனங்களில் நீங்கள் ஈடுபட்டு விழுந்து கிடக்கிறீர்கள். நான் தந்த பகுத்தறிவைப் பயன்படுத்தி தெளிவுபெறுங்கள்.

**எனது பதில் :**

வயிற்றுப் பிழைப்புக்கு அலையும் மந்திரவாதிகளை இறைவாக்கினர்கள்போல் ஏற்றுக்கொண்டு, உமது பாதையில் இருந்து தடம்புரண்டு விட்டோம். போலியான இந்தப் பழக்கங்களிலிருந்து எழுந்து உமது பாதையில் நடப்போம்.

## நிலை 08. ஆறுதல் கூறும் பெண்கள்

கருணைமிக்க இந்தப் பெண்கள் கண்ணீரை ஆறுதலாகத் தருகிறார்கள். அவர்கள் அழுது புலம்புவதில் எனக்கு விருப்பமில்லை. ஆனாலும் எனது துன்பத்தில் பங்கெடுக்க வேண்டும் என்ற அவர்களின் ஆதங்கத்தை நன்றியோடு நினைக்கின்றேன். உங்களில் பலருக்கு இதயமும் இல்லை. அப்படியே இருந்தாலும் அதிலே ஈரமும் இல்லை. கண்ணெதிரே யார் கண்ணீர் வடித்தாலும் அந்தக் கண்ணீர் உங்களைத் தொடுவதே இல்லை. துயருறுவோரைக் காணும்போது நீங்கள் ஏன் நல்ல சமாரியர்களாய் மாறக்கூடாது?

**எனது பதில் :**

எங்களின் ஆறுதலான இயேசுவே, எங்கள் அயலாரை அலட்சியப்படுத்தியபோதெல்லாம் உமக்கு நாங்கள் ஆறுதல் அளிக்கவில்லை. எங்கள் இதயங்களை ஈரமாக்கி பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரைத் துடைப்போம்.

## நிலை 09. மூன்றாம் முறை விழுகிறேன்

என் உடல் பலம் இழந்துவிட்டது. உயிர் போராட்டத்தின் உச்சம் வந்துவிட்டதுபோலிருக்கிறது. தசைகளின் வலுவெல்லாம் அடங்கி விட்டது. ஆனால் இன்னமும் என் நம்பிக்கை தளரவில்லை. உடல் விழுந்தாலும் என் உள்ளம் எழுந்து நிற்பதைப்போன்ற உணர்வு. மனிதர்களே சின்னச் சின்னப் பிரச்சனைகளில்கூட உங்கள் உடலும், உள்ளமும் விழுந்துவிடுகிறதே. சின்னச் சவால்களையும் எதிர்கொள்ள முடியாமல் இடிந்து விடுகிறீர்களே. இதெல்லாம் விடக் கொடுமை விழுந்த நீ எழுவதற்கு போதைப்பொருட்கள் துணை செய்யுமென நம்புகிறாயே?

**எனது பதில் :**

உடல் சோர்ந்தாலும், மனம் சோர்ந்து போகாத இயேசுவே, விழுந்த எங்களுக்கு போதையே ஆறுதலென நம்பிவிட்டோம். உமது வார்த்தையால் தெளிவுபெற்ற நாங்கள், இனி வாழ்க்கையில் தெளிவுபெற்று துணிந்து நடப்போம்.

## நிலை 10. ஆடைகளை அவிழ்க்கிறார்கள்

நான் ஆடைகள் இல்லாமல் மனம், உடல் வேதனையோடு அவமானப்பட்டு கூனிக்குறுகி நிற்கிற கொடூரத்தைப் பார்! உன் உடலும், உள்ளமும் நடுங்குகிறதா?

மரணத்தைவிடக் கொடியது அவமானம் இது. என்னை நினைத்தபோது, இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள்மீது எவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? நீ பலபேரை இந்த நிலைக்குத்தானே ஆளாக்கியிருக்கிறாய்? எத்தனைபேர் அவமானப்பட நீ காரணமானாய்?

**எனது பதில் :**

என் செயல்களின் நிமித்தம் அவமானத்தை ஏற்றுநிற்கிற இயேசுவே, என்னை மன்னித்தருளும். இனி ஒருபோதும் பிறரின் நற்பெயருக்குக் குந்தகம் வருவிக்க மாட்டேன். பிறரைப்பற்றி இழிவாகப் பேசவும் மாட்டேன்.

## நிலை 11. சிலுவையில் அறைகின்றனர்

எனது உடலைச் சிலுவையில் அறைகிறார்கள். என்னால் இந்த வேதனையைப் பொறுக்க முடியவில்லை. நான் கதறுவது யாருக்கும் கேட்கவில்லை.

இன்று எத்தனைபேரை இப்படிக் கொடூரமாய் சித்திரவதைக்கு ஆளாக்குகிறார்கள். வன்முறையால் எத்தனைபேரின் வாழ்வு சோகமாய் முடிகிறது. கொடிய ஆணிகள் மட்டும்தான் கொலை ஆயுதங்கள் என நினைக்கிறீர்களா? உங்கள் வார்த்தைகளே நச்சு ஆணிகள்தான்! அவை எத்தனைபேரின் இதயங்களைப் பதம் பார்த்துவிட்டன.

**எனது பதில் :**

இயேசுவே உம்மைச் சிலுவையில் அறைந்தது யூதர்கள்தான் என நினைத்தேன். என் சொல் செயல்தான் உம்மை அறைகிற கொடிய ஆணிகள் என்று நான் உணரவில்லை. இனி பிறருக்குத் துணையாக இருப்பேனே தவிர ஒருபோதும் துரோகமாய் இருக்க மாட்டேன்.

## நிலை 12. சிலுவையில் உயிர் துறக்கிறேன்

உனக்காக உயிர் துறப்பதில் எனக்கு நிறைவு இருக்கிறது. உன்னில் அந்த நிறைவு உள்ளதா? உனது உயிரைக் காக்க கோழைத்தனமான வாழ்க்கை வாழுகிறாய். உன் வாழ்வில் அர்த்தம் உள்ளதா? எப்படியும் உயிரைப் பாதுகாத்து வாழ வேண்டுமெனத் துடிக்காதே. உயிரை இழந்தாலும் பரவாயில்லை வாழ்வின் மதிப்பீடுகளையும் கொள்கைகளையும் காத்துக்கொள்ள முயற்சி செய்.

**எனது பதில் :**

உம் உயிரை எனக்காக கொடுத்த இயேசுவே! கொள்கைகளை விற்று உயிரைக் காக்கும் கோழை வாழ்க்கை வாழும் என்னை மன்னியும். உயிரைவிடக் கொள்கைகள் உயர்ந்தவை என உணர்ந்து, கொள்கைகளைக் காப்பாற்ற உயிரையும்விட தயாராகி விட்ட எனக்கு மீட்பில் பங்குதாரும்.

## நிலை 13. சடலத்தைச் சுமக்கும் என் அம்மா

வாழ்வின் சுகத்தைச் சுமக்கும் வயதில் அம்மா இறந்த எனது உடலை மடியில் சுமக்கிறார்கள். என் தாய்க்கு நான் எதுவும் செய்தது இல்லை. உங்களுக்காக எனது நாட்களை செலவிட்டதால் என் அம்மாவுக்கும் குடும்பத்திற்கும் நான் பயன்படவில்லை. என் அம்மா என்னிடம் எதிர்பார்த்ததும் இல்லை. என் தாயை சிலுவையின் நிழலில் நின்ற யோவானிடம் ஒப்படைத்துவிட்டேன். என் தாய் உங்களுக்கும் தாய் என்பதாலே அப்படிச் செய்தேன். உங்களிடமிருந்து விடைபெறும்போது பரிசு கொடுக்க நினைத்து என் தாயைப் பரிசாக்கினேன்.

**எனது பதில் :**

அருள் நிறைந்த அன்னை மரியே, தியாக வடிவே, உமது தியாகத்தை எங்களுக்குக் கற்றுத்தாரும். வேதனையை இரக்க இதயத்தோடு ஏற்ற வியாகுலத் தாயே! எங்களுக்கு உமது இதயத்தை இரவலாகத் தாரும்.

வாழ்வில் சிறு வேதனைகளை சந்திக்கும்போதுகூட நாங்கள் வெடித்துச் சிதறுகிறோம். நாதனை சுமந்த ஆலயமே, எம்மையும் உமது மடியில் சுமந்தருளும்.

## நிலை 14. அடக்கம் செய்கிறார்கள்

வாழ்க்கை தொடரும் என்பதை நான் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கிறேன். மண்ணகப் பயணத்தில் இது கடைசி அங்கம். இதைப்பற்றிக்கூட நான் யோசித்தது இல்லை. எனக்கென்று சொல்லும் அளவு எந்த உடமைக்கும் நான் ஆசைப்பட்டதில்லை. ஆனால் என்னைப் பின்பற்றுவதாகக் கூறும் நீ உனது ஆசைக்கு அணை போட்டாயா? உலகத்தைச் சுருட்டி உள்ளங்கைக்குள் மடக்கப்பார்க்கிறாயே. அடிப்படைத் தேவைகள் இல்லாது வாழ்க்கையை ஓட்டுகிற மக்கள் பலர் உள்ளார்கள். நீ சகல சௌகரியங்களிலும் நாளாந்தம் மகிழுகிறாயே... ஏழைகளுக்கு கல்லறைக்குக்கூட ஒரு அடி நிலம் தராமல் மடக்கி மதில் சுவர் கட்டுவது நியாயம்தானா?

**எனது பதில் :**

ஏழையாக வாழ்ந்து அடுத்தவரின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசுவே! என் பேராசைகளை அடக்கம் செய்ய அருள்தாரும். இருப்பது போதாது என்று பறப்பதைப் பிடிக்க ஆசை வளர்த்து அமைதியை இழந்து தவிக்கிறேன். எளிய வாழ்வில்தான் நிறைவுபெற முடியும் என்ற பாடத்தை எனக்கு புகட்டிவிட்டீர். என் பாதையை திருத்திக்கொள்கிறேன்.

செப ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# இறைவார்த்தையில் செபிப்போம்

*இ. மரிய செல்வன் (மூத்த மறையாசிரியர்),*
*ஜோசவ்வாஸ்நகர், தோட்டவெளி.*

மன்னார் மறைமாவட்டம் இவ்வாண்டை (2007) செப ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளதை நாம் அறிவோம். செபம் என்னும்போது இறை மனித உரையாடல் - உறவாடல் என்று கூறலாம். செபிப்பதில் நாம் பல முறைகளைக் கையாளலாம். வாய்மொழிச் செபம், மௌனச் செபம், மனனச் செபம், பக்தி முயற்சிகள் என்பன அவற்றுள் சிலவாகும். ஆனால் இங்கு நாம் இவற்றைவிட மேலான இன்னுமொரு வகையில் செபிக்கலாம் என்பதை இவண் குறிப்பிட விரும்புகின்றேன். அது என்னவெனில் இறைவார்த்தையில் செபிப்பதாகும்.

அண்மைக்கால கணக்கெடுப்பின்படி நமது மன்னார் மறைமாவட்டத்தில் 80% இல்லங்களில் திருவிவிலியம் உண்டு. 65% இல்லங்களில் திருவிவிலியம் (இறைவார்த்தை) வாசிக்கும் பழக்கம் உண்டு. ஆனால் 5% இல்லங்கள்தான் திருவிவிலியத்தில் செபிப்பதாக அறியமுடிகிறது. திருவிவிலியத்தை வாசித்தால் மட்டும் போதாது. அதைத் தியானித்துச் செபிக்க வேண்டும். தனியாக, குழுவாக, குடும்பமாக இவ்வாறு செபிக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

## விவிலியத்தை ஏன் செபிக்கவேண்டும்?

- விவிலியத்தைச் செபிக்கும்போதுதான் கடவுளுக்கும் நமக்கும் இடையே உறவு வளர்கின்றது.
- உறவு ஆழமாகின்றது.
- இறைவன் நம்மோடு பேசுகின்றார். நாம் அவர் குரலைக் கேட்கின்றோம். நாமும் இறைவனுடன் மனம் திறந்து பேசுகின்றோம்.
- இறைவன் நாம் பேசுவதை கேட்கின்றார். ஆதலால் நாம் ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையை தியானித்துச் செபிக்க வேண்டும்.

நெகேமியா 8: 2 - 6, 8 - 10 இறைவார்த்தைகளை நாம் வாசிக்கும்போது இதன் உண்மை விளங்கும். திருநூல் வல்லுனர் "எஸ்ரா" திருநூலைத் திறந்து வாசித்தபோது மக்கள் எல்லோரும் கைகளை உயர்த்தி ஆமென் என்று பதிலுரைத்தார்கள் (நெகே 8:6). எம்மாவுஸ் நோக்கிப் பயணம் செய்த சீடர் தமக்குள் பேசிக்கொள்ளும்போது "அவர் வழியில் நம்மோடு பேசி மறைநூலை விளக்குகையில் நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்கின்றனர் (லூக்காஸ் 24: 32).

கடவுளுக்கும் நமக்கும் இடையே உரையாடல் நிகழவேண்டுமென்றால் விவிலியத்தை வாசிக்கும்போது இறைவேண்டல் செய்ய வேண்டும் என்பதை மறத்தலாகாது. ஏனெனில் "நாம் இறைவனை நோக்கி வேண்டும்போது அவருடன் பேசுகின்றோம் இறைவார்த்தைகளை வாசிக்கும்போது அவர் பேசுவதைக் கேட்கின்றோம்" என்று 2ம் வத்திக்கான் சங்க ஏடு எடுத்தியம்புகிறது. (சங்க ஏடு இறைவெளிப்பாடு எண் 25)

## திருவிவிலியத்தை எப்படிச் செபிப்பது

திருவிவிலியத்தின் ஒரு அதிகாரம் அல்லது ஒரு பகுதியைத் தெரிந்தெடுத்து வாசிக்கலாம். முக்கிய கருத்தை வார்த்தையை சொற்றொடரை எடுத்தும் தியானிக்கலாம்.

* எமது பணிகள், * பிரச்சனைகள், * சந்தேகங்கள்
* அறைகூவல்கள், *பாவங்கள், * நோய்கள்

இவற்றிற்கு இவ்வாசகம் என்ன பொருள் தருகின்றது? சமுதாய மாற்றத்திற்கு என்ன வழிகாட்டுகின்றது? இப்பகுதியின் ஆழ் கருத்து யாது? என்ன கண்ணோட்டம் தருகிறது? விவிலிய கதாபாத்திரங்கள் என்ன மனநிலையைத் தருகின்றனர்? எனத் தியானிக்கலாம். குறிப்பாக மனதைத் தொட்ட வசனத்தை மீண்டும் மீண்டும் செபித்தல் *(எ + காட்டு தாவீதின் மகனே என்மேல் இரக்கம் வையும்.)* இது மிகவும் ஆழமான சிறிய செபம். பதில் உடனே கிடைக்கின்றது. பார்வையற்ற மனிதனின் குரல் இயேசுவை சென்றடைகின்றது. இயேசு அம்மனிதனுடன் பேசுகின்றார். "நான் உமக்கு என்ன செய்ய வேண்டும்?" மனிதனின் பதில், "நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்" பார்வை கிடைக்கின்றது. (மாற்கு 10:47-52).

## சில விவிலிய செபப் பகுதிகளைச் செபித்தல்

- தொடக்கநூல் 18: 16-33 ஆபிரகாம் சோதோமுக்காகச் செபித்தல். இது மற்றவர்களுக்காக பரிந்துரைத்துச் செபிப்பதாகும்.
  இந்தச் செபத்தை நமதாக்கி நம் நாட்டின் அமைதிக்காக, விடுதலைக்காக, சமாதானத்திற்காகச் செபிக்கலாம்.
- விடுதலைப் பயணம் 15:1-8 மோசே பாடிய விடுதலை வெற்றிப் பாடல். இது புகழ்ச்சிப் பாடல், நன்றிப்பாடலாகும். இறைவன் எமது வாழ்வில் செய்துவந்த எல்லாவிதமான நன்மைகளுக்காக நன்றிகூறிச் செபிக்க சிறந்த எடுத்துக்காட்டு இச்செபமாகும்.
- 1 அரசர் 8:23-53. சாலமோன் மன்னன் ஆலயத்தில் செய்த செபம்.
- தானியேல் 1:29-67 தீச்சூளையில் தூக்கி வீசப்பட்ட மூன்று வாலிபர்கள் துன்பவேளையிலும் இறைபராமரிப்பை எண்ணி புகழ்ந்து பாடிய செபம்.
- லூக்கா 1:46-56 மரியாளின் பாடல்
- லூக்கா 1:68-79 செக்கரியாவின் பாடல்
- லூக்கா 2:14 விண்ணகத் தூதர் பாடல்
- லூக்கா 2:29-32 சிமியோன் பாடல்
- யோவான் 17: இயேசுவின் பிரியாவிடைச் செபம்.

## பவுல் அடியார் தரும் பாடல்கள்

பிலிப்பியர் 2: 6-11 இயேசுவின் மனநிலை.
எபேசியர் 1:3-4 ஆவிக்குரிய ஆசீர் அனைத்தும்
கொலோ 1:15-20 கிறிஸ்துவின் மேன்மை.

திருப்பாடல் நூலில் 150 திருப்பாடல்கள் உண்டு இவை யாவும் இயேசுவில் நிறைவேறுகின்றன. அவற்றையும் தியானித்துச் செபிக்கலாம். *உதாரணம்:* திருப்பாடல் 16: இறைவா (இயேசுவே) என்னைக் காத்தருளும் எனச் செபிக்கவும்.

"செபத்தை நீ நிறுத்திவிட்டால் தண்ணீரிலிருந்து கரையில் எறியப்பட்ட மீனுக்கு ஒப்பாவாய்" என்கிறார் புனித யோவான் கிறிஸ்தோஸ்தொம்.

மீன் வாழ நீர் தேவை. மனிதன் வாழ உறவு தேவை. உறவு நிலைத்திட உரையாடல் அவசியம். எனவே இறை மனித உறவு நிலைத்திட உதவும் உரையாடலே செபமாகும். செபத்திற்குச் சக்தி உண்டு, வல்லமையுண்டு. இதனை எமது அனுபவத்திலும் இறைவார்த்தையிலும் நாம் காணலாம்.

நமது அன்றாட அலுவல்களில் நமக்கு வேண்டியவர்களோடு பேசவேண்டும் என்றால் விரும்பிய நேரமெல்லாம் பேசுகிறோம். ஆனால் செபிப்பதென்றால் நம்மில் பலருக்கு நேரமே கிடைப்பதில்லை.

## எப்போது செபிப்பது?

மாற்கு 1:35. இயேசு விடியற்காலை கருக்கலில் செபிக்கின்றார்.
எசாயா 50:4 விடியற்காலையில் ஆண்டவர் தட்டி எழுப்புகின்றார்.
திருப்பாடல் 90:14 காலைதோறும்.... மகிழ்வோம்.
நீதிமொழி 8:17 அதிகாலையில் வாஞ்சையோடு தேடுவோர் என்னைக் கண்டுபிடிப்பர்.
திருப்பாடல் 88:13 காலையில் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்.
திருப்பாடல் 88:1 பகலில் கதறுகின்றேன்.
திருத்தூதர் பணி 10:8-9 பகல் வேளையில் (பேதுரு செபித்தல்.
திருத்தூதர் பணி 3:1-6 மாலை வேளையில் (பேதுரு, யோவான்)
திருத்தூதர் பணி 10:1-3 மாலை வேளையில் (கொர்னேலியு)
மாற்கு 6:45 மலைமீது இரவு வேளையில் (இயேசு)
புலம்பல் 2:19 இரவு சாமம் (குழந்தையின் உயிருக்காக
திருத்தூதர் பணி 16:25 – நள்ளிரவு (பவுல் - சீலா)
தானியேல் 6:10. மூன்றுவேளை செபித்தார்.

"செபித்தால்தான் உள்ளத் தூய்மை இருக்கும். உள்ளத் தூய்மை இருந்தால்தான் இறைவலிமை பெறமுடியும். இறைவலிமை பெற்றால்தான் சேவை செய்ய முடியும். சேவை செய்தால்தான் மகிழ்ச்சி ஏற்படும். மகிழ்ச்சி இருந்தால்தான் மன அமைதி இருக்கும்" என்கிறார் அன்னை திரேசா.

மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் ஒரு சமயம் தனது வானூர்தியில் பயணம் செய்துகொண்டிருந்தார். அவ்வேளை அவர் வானூர்தியிலுள்ள செப அறையில் செபித்துக் கொண்டிருந்தார். அதே சமயம் வத்திக்கான் அலுவலகத்திலிருந்து அவசரமான தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அழைப்பைப் பெற்ற கர்தினால் திருத்தந்தை அவர்கள் செபித்துக்கொண்டிருக்கிறார் என்று கூறினார். ஆனால் தொலைபேசி மீண்டும் மீண்டும் தொடர்ந்தும் ஒலித்துக்கொண்டே இருந்தது. பொறுமை இழந்த கர்தினால் திருத்தந்தையிடம் சென்று, "மிகவும் அவசரமான செய்தியாம். தாங்கள் உடனே பேசவேண்டுமாம்" என்றார். அதற்குத் திருத்தந்தை கொடுத்த மறுமொழி வியப்பிற்குரியதொன்றாகும். "அவசரமான - மிகவும் அவசரமான செய்தியென்றால் இதற்காக நான் இன்னும் செபிக்க வேண்டும்" என்றாராம். செபத்தின் மட்டில், இறைவனோடு பேசுவதில் - உரையாடுவதில் திருத்தந்தைக்கு எவ்வளவு தாகம் இருந்தது என்பதை இதிலிருந்து அறிய முடிகிறது.

## நாம் செபிக்கும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டியவை

பிலிப் 4:4-6 நன்றி, இறைவேண்டல், மன்றாட்டு, விண்ணப்பம். என எல்லா மனநிலைகளும் நமக்குத் தேவை. 1 தெச 5:16-18 மகிழ்ச்சியாக, இடைவிடாது, எல்லாச் சூழ்நிலையிலும் செபிக்க வேண்டும். (லூக்கா 18: 1- 8) மனந்தளராமல், (திருப்பாடல் 51:17) நொறுங்கிய நெஞ்சத்தோடு, குற்றமுணர்ந்த உள்ளத்தோடு செபிக்க வேண்டும்.

***வல்லமைச் செபத்தின் மூன்று பண்புகள்***

முழங்காலில் இருந்து செபித்தல், நோன்பிருந்து செபித்தல், கைகளை உயர்த்திச் செபித்தல்.

எனவே தனியாகவும், குழுவாகவும், குடும்பமாகவும் செபிப்போம். அன்பியங்களில் இறைவார்த்தை பகிர்ந்து உறவை வளர்ப்போம். செபிக்காதவன் வாழ்வும் கூரையில்லாவீடும் சமம். கூடிச் செபித்தால் கோடி நன்மை. ஒன்றாகச் செபிக்கும் குடும்பம் ஒன்றாக வாழும். ●

# முதிர்ச்சியுள்ள செப வாழ்வு

**கி. அருளப்பு,**
**விடத்தல்தீவு, 7ம் வட்டாரம்.**

மனிதனுடைய வாழ்விலே இறைவனைப் பற்றிய சிந்தனை பிரிக்க முடியாத ஒன்று. ஏனெனில் இறைவனின் அன்பில் நிறைந்து வாழ்பவனே உண்மையான மனிதனாக இருக்க முடியும். "ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சி உறுபவர் அவரது சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திப்பார்" (திருப்பாடல் 1:2).

திருச்சபை நமக்கு கற்றுக்கொடுக்கின்ற ஒருசில பாரம்பரிய செபங்களை, மனப்பாடமாகச் சொல்லிவிட்டால் நாம் செபவாழ்வில் வளர்ச்சியடைகிறோம் எனச் சொல்லிவிட முடியாது. மாறாக நமது அன்றாட அனுபவங்களில் யேசுவின் பிரசன்னத்தைக் கண்டுணர்ந்து அவரோடு வாழ்வதுதான் செப வாழ்வு. உதாரணமாக நாம் ஆலயங்களில் ஒன்றுகூடிச் செபிக்கின்றோம், குடும்பங்களில் செபிக்கின்றோம், தனிப்பட்ட முறையில் செபிக்கின்றோம், அன்பியங்களில் பல உறவுகளோடு சேர்ந்து செபிக்கின்றோம். நாம் என்ன சொல்லுகிறோம் என்று சிறிதும் உணராமலும் தெரியாமலும் செபித்துக்கொண்டிருக்கின்றோம்.

செபத்திலே சொல்லப்படுகின்ற மெய்ப்பொருளை அறியாமலும் தெரியாமலும் செபித்துக்கொண்டிருக்கின்றோம். ஏற்கனவே மனப்பாடம் பண்ணிய செபங்களை வெறும் வார்த்தை வரிகளால் சொல்லிக்கொண்டே செபிக்கின்றோம். நாம் உண்மையாகச் செபிக்காமல் வெறும் மதச்சடங்கிற்காக செபித்துக் - கொண்டிருக்கின்றோம்.

நம் ஆண்டவர் யேசு தம் சீடர்களுக்குக் கற்றுக்கொடுத்த செபத்திலே, எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். இது செபம். இதனுடைய மெய்ப்பொருளை நாம் புரிந்துகொண்டால் எம்முடைய குடும்பத்திலே எம்முடைய பணிவாழ்விலே நமக்கெதிராகக் குற்றம் புரிந்தவர்களை நாம் மன்னித்திருக்கிறோமா? நாம் மற்றவர்களுடைய குறைகுற்றங்களை மன்னித்து மறக்கும் போதுதான் நம்முடைய குறை குற்றங்களை இறைவன் மன்னிக்கின்றார் என்பது செபத்தின் மெய்ப்பொருள். இதை நாம் உணர்ந்து செபிக்க வேண்டும். அப்படி இல்லையெனில் அது வெறும் வார்த்தை வரிகளே.

இதை உணர்த்த இதோ ஓர் உருவகக் கதை. ஒரு விதவைத் தாயொருத்தி தம்முடைய இரண்டு கைக்குழந்தைகளுடன் அன்றாடம் பிச்சை எடுத்து வாழ்வைப் போக்கி வந்தாள். அவள் இறை நம்பிக்கை உள்ள ஓர் புனிதவதி. ஒருநாள் இரவு உணவு அவர்களுக்கு கிடைக்காததால், அப்பிள்ளைகள் தங்களுடைய பசியைப் போக்க அத்தாயைப் பெரிதும் அலட்டிக்கொண்டிருந்தார்கள். அவள் அவர்களைச் சமாதானப்படுத்தி இரவு முழுவதும் இறைவனோடு செபித்துக்கொண்டிருந்தாள்.

மறுநாள் காலையில், பிள்ளைகள் இருவரையும் கூட்டிக்கொண்டு ஓர் ரொட்டிக் கடையை நோக்கிச் சென்றாள். கடைக்காரரிடம் "ஐயா இப்பிள்ளைகளுக்கு இரண்டு ரொட்டி கொடுங்கள். என்னிடம் பணம் இல்லை. ஆனால் உங்களுக்காகவும் உங்கள் தொழில் துறைகளுக்காகவும் நான் இறைவனிடம் மன்றாடுகின்றேன்" என்று சொன்னாள்.

கடைக்காரனோ ஒரு நாத்திகன், இறை நம்பிக்கை இல்லாதவன். இவளுடைய பேச்சைக் கேட்டு அவன் நகைப்போடு சிரித்தான். அத்தோடு அவளை எள்ளி நகையாடி விரும்பத்தகாத கேள்வி ஒன்றைக் கேட்டான். அதாவது "நான் நல்லாய் இருக்கவேண்டும், என் தொழில்கள் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்கின்ற செபத்தை ஓர் துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடு, அது எவ்வளவு நிறை இருக்கின்றதோ அந்தளவு நிறைக்கு நான் ரொட்டி தருகின்றேன்" என்று கிண்டலாகக் கேட்டான். அவளும் அதற்குச் சம்மதித்து ஓர் துண்டுக் காகிதத்தில் தன் செபத்தை எழுதிக் கொடுத்தாள். அதை அவன் ஒரு பக்கத் தராசில் போட்டுவிட்டு, மறுபக்கத் தராசில் ஒரு ரொட்டியைத் தூக்கி வைத்தான். அங்கே ஓர் அதிசயம் காத்திருந்தது.

அதாவது அவளுடைய செபம் தாழ்ந்தும் அவனுடைய ரொட்டி மிதந்தும் இருப்பதை அவன் கண்டான். இதைக் கண்டதும் அவன் அச்சமுற்று பயப்பீதியால் அவளையே உற்று நோக்கிப் பார்த்தான். இவள் ஒரு பில்லி சூனியக்காரியாய் இருப்பாளோ என்று பயந்துபோய் மீண்டும் ஒரு ரொட்டியை அதே தட்டில் வைத்தான். அப்போதும் அது சமநிலைக்கு வரவில்லை. உடனே பயந்துபோய் இரு ரொட்டிகளையும் அவள் கையில் கொடுத்தான். அவள் கடவுளுக்கு நன்றிகூறி கடந்து சென்றாள். அவன் கண்ணிமை வெட்டாமல் அவள் மறையும்வரை அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

பின் ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டு ஏன் இப்படி நடந்தது. அவளுடைய செபம் இவ்வளவு நிறை உள்ளதா? என்று வியந்து தராசின் மேல்நுனியைப் பார்த்தான். அங்கே தராசின் சங்கிலி ஒன்று மேல் சட்டத்திலே தொங்கிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். அத்தாயின் தாழ்மையான செபம் அவனுடைய ஊனக் கண்களை மறைத்தது. இதனால் கடவுள் அவளுக்கு உணவு கிடைக்கச் செய்தார்.

"என்னிடம் மன்றாடு, உனக்கு நான் செவிசாய்ப்பேன். நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருள்களையும், உனக்கு நான் விளக்குவேன். (எரேமியா 33: 3).

செபிப்பதற்காக நாம் இறைபிரசன்னத்துக்கு செல்லும்போது நமது எல்லா அனுபவங்களையும் அவர்முன் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த அனுபவப் பின்னணி நமது தனிப்பட்ட வாழ்வை சோதித்தறியவும் நமக்குத் தேவையானவற்றை தக்கவைத்துக் கொள்ளவும் தேவையற்றவற்றை உதறித்தள்ளவும் ஓர் விழிப்பு நிலையை வழங்கும். ●

# அமரர் மேரி பஸ்ரியன் அடிகளார்

# நெஞ்சைவிட்டு நீங்கா நினைவலைகள்

**அமரர் மேரி பஸ்ரியன் அடிகளாரின் 22வது ஆண்டு நினைவு நாளில் வங்காலையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வின்போது நிகழ்த்தப்பட்ட அஞ்சலி உரையின் சுருக்கம் முழு வடிவம் இது.**

1981இல் மன்னார் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய மறைமாவட்டத்தின் எதிர்காலப் பணித்திட்டங்கள் பற்றி ஆராய்வதற்காக ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் மடுத்திருப்பதியில் ஓர் ஆய்வரங்கு நடாத்தப்பட்டது. அந்த ஆய்வரங்கின் பொதுச் செயலாளராக முதன் முதலில் அருட்தந்தை மேரி பஸ்ரியன் அடிகளாரை நான் சந்தித்தேன்.

வங்காலைக் கிராமத்தின் இளைஞர்கள் சார்பாக கலந்துகொண்ட நான் சமர்ப்பித்த தொகுப்பறிக்கையினால் கவரப்பட்ட அடிகளார், தான் வகித்த இளைஞர் விவகாரப் பொறுப்பினில் என்னையும் செயலாளராக இணைத்து தன்னுடன் இணைந்து செயல்பட வழிவகுத்த அந்த நாட்களை, அவருடன் ஒன்றாக உண்டு, ஒரே சைக்கிளில் பயணித்த நாட்களை எண்ணி கலங்குகின்ற நான், அவரைப் பற்றிய இரங்கல் உரையை ஆற்றுவதற்கு அவர் எம்மைப் பிரிந்து 22 வருடங்களின் பின்னர் கிடைத்த சந்தர்ப்பத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

எத்தனையோ தந்தையர்கள் வந்தனர், இருந்தனர், சென்றனர். ஆனால் எம்மைவிட்டு, எம் ஊரைவிட்டு, எம் இதயங்களை விட்டுச் செல்லாத, செல்லவிரும்பாத ஒரு தந்தையை, அவரது வாழ்க்கைக் கோலங்களை இன்று மீட்டி நிற்கின்றோம்.

ஆம்.. எம் வாழ்வில் இடியோசை என வெடியோசை கேட்ட அந்த நாள்.... எம் இரத்தம் உறைவதை நாம் உணர்ந்த நாள் இந்த நாள்... 22 ஆண்டுகளுக்கு முந்திய அந்த நாள்... மறைமகன் ஒருவன் இறைமகனான அந்த நாள்.... ஆம்.... 1985ம் ஆண்டு தை திங்கள் ஆறாம் நாளை இன்று நினைத்துப் பார்க்கின்றோம்.

யார் இந்த பஸ்ரியன்? ... எமக்கு தெரிந்திருக்கலாம். அநேகருக்கு அவரைப்பற்றி தெரியாதிருக்கலாம். ஆனால் அவரைப்பற்றி எம் எதிர்காலச் சமூதாயத்தினருக்கு எம் குழந்தைச் செல்வங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியது எமது கடப்பாடல்லவா?

ஆம்... இளவாலை என்கின்ற வளமிகு நகரிலே, மாவட்ட விவசாய உயர் அதிகாரியாகப் பணிபுரிந்த திரு. மனுவேற்பிள்ளை அவர்களுக்கும், திருமதி மேரி திரேசா அவர்களுக்கும் இரண்டாவது ஆண் பிள்ளையாக செல்வச் செழிப்பும், கலை வளமும், கல்வி வளமும் நிறைந்த குடும்பத்திலே, அமெரிக்காவில் விஞ்ஞான பட்டதாரியாகி ஆய்வுகூடம் ஒன்றில் முக்கிய பதவி வகிக்கும் திரு. அன்ரன் அவர்களுக்குத் தம்பியாக, இலண்டன் மாநகரில் ஸ்தாபனம் ஒன்றில் காசாளராக விளங்கும் ஆன் பற்றிமா திருமதி ராஜசிங்கம் அவர்களுக்கு அன்பு அண்ணனாக, தென் அமெரிக்க பேரூ நாட்டில் விஞ்ஞானப் பட்டதாரியாக விளங்கும் திரு. ஜோசப் பிலிப் அவர்களுக்கு அண்ணனாக 1948ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் சனிக்கிழமை வவுனியாவில் தாண்டிக்குளம் கிராமத்தில், டாக்டர் தருமலிங்கம் அவர்களால் "அடை மழையோடு வவுனியாவில் ஒரு குறும்புக்காரன் பிறந்துள்ளான்" என்று அறிவிக்கப்பட்டவர்தான் அமரர் மேரி பஸ்ரியன். அப்பப்பாவின் பெயரான வஸ்தியாம் பிள்ளையையும், அம்மப்பாவின் பெயரான பஸ்ரியனையும், அன்னை மரியாளின் தினமான சனிக்கிழமையையும் இணைத்து மேரி பஸ்ரியன் எனத் திருநாமம் சூட்டப்பட்டவர்.

அழகிய தோற்றத்தினால் "பப்பிக் குட்டி" என்றும், கோபம் வந்துவிட்டால் மூசிமூசி அடிக்கும் கோபக்குணத்தினால் "புலிக்குட்டி" என்றும் குருவானதின் பின்னர் அயலவர்களினால் "அம்மக்காவின் சம்மனசு" என்றும், இளவாலை புனித ஹென்றி அரச கல்லூரியின் அதிபர் எல். ஏ. சிங்கராயர் அவர்களினால் "நெப்போலியன்" என்றும், புனித மாட்டினார் குருமட மாணவர்களினால் "பிஸி பஸ்ரியன்" என்றும், உடுவில் மூதாட்டிகளால், "எங்கடை ஆண்டவர்" என்றெல்லாம் நாமம் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டவர்.

மரமேறி கள்ள மாங்காய் பிடுங்குவதிலும், மற்றவர்களைக் கண்டால் இறங்கி ஓடுவதிலும், வகுப்பில் சித்திரப் பாடத்திற்கு பயன்படுத்தும் வர்ணங்களை மற்றவர்களுக்குப் பூசுவதிலும், தன் முகத்தில் பூசிக்கொண்டு வேடிக்கை காட்டுவதிலும், சில வேளைகளில் வர்ணம் கலக்கப் பயன்படுத்திய வர்ணம் கலந்த தண்ணீரை போத்தலோடு தூக்கி மடக்மடக் என்று குடித்துவிட்டு, சிரித்து நின்று பிறரை மகிழ்வித்து தானும் மகிழ்ந்த – சிறு வயதில் மட்டுமன்றி இறக்கும் வரை மற்றவரை மகிழ்வித்த பஸ்ரியனை.....!

ஒருமுறை இரவில் யாழ்ப்பாணத்தில் இருந்து பிரயாணத்தைத் தொடங்கி ஆனையிறவுக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள் தகராறு பண்ண அதனை ஒரு வீட்டில் விட்டுவிட்டு அவ்வழியால் வந்த வாகனம் ஒன்றில் கிளிநொச்சி புனித திரேசம்மாள் ஆலயத்திற்கு வந்து அந்த இரவு வேளையிலும் தனது குறும்புக் குணத்தைக் கைவிடாது அறையின் கதவைப் பலமாகத் தட்டி "யார் இந்த கோவில் சுவாமி வா வெளியால" என்று பலமாகக் கத்தி– உள்ளே இருந்த சுவாமியார் தற்பாதுகாப்பிற்காக கையில் ஒரு பொல்லுடன் வர விழுந்து விழுந்து சிரித்த பஸ்ரியனை....

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும், நண்பர்கள், நண்பர்களான குருக்கள் பஸ்ரியனுடன் தங்குவதில் நிறைவு கொண்டவர்களாக, மானிப்பாய் பங்கிலும், எம் வங்காலைப் பங்கிலும் அவர்களை ஈர்த்து நின்ற வந்தோரை முகம்கோணாமல் பேணும் விருந்தோம்பல் நிறைந்த பஸ்ரியனை .... எம் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்ய கூடிநிற்கின்றோம்.

### தரித்திரத்தின் புத்திரன் மேரி பஸ்ரியன்

வளமான குடும்பத்தில் பிறந்தவர், வசதிமிக்கவர், தன்

**மடு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும்.**
**வங்காலை கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவருமான**
**திரு. ஜோசப் ஆரோக்கியம் குரூஸ்**

பெற்றோரிடம் இருந்தும், சகோதரர்களிடம் இருந்தும் இலட்சம் இலட்சமாகப் பெறும் வாய்ப்பிருந்தவர். ஆயினும் தனது குருப்பட்டமளிப்பிற்கு தான் அணிய வேண்டிய ஆல்ப் (Alb) எனப்படும் வெள்ளை நீள அங்கியைக்கூட தன் உடன் மாணவனாக இருந்து அவருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் குருவாகியிருந்த தனது நண்பரிடம் இரவலாகப் பெற்று அணிந்தவர்.

புதிய அங்கியுடன் காணப்பெறாது, பல தையல்கள் போடப்பட்ட அங்கியுடன், ஒழுங்காக வாரிவிடப்படாத தலையும், தோளில் ஒரு சீலைப் பையுமாக மன்னார் கடைத்தெரு வியாபாரிகளால் குறிப்பாக முஸ்லிம் வியாபாரிகளால் "வெறுங்கால் சுவாமி" என அழைக்கப்பட்ட பாதணி அணியாத மேரி பஸ்ரியின்... ஆடம்பரமற்ற துறவற வாழ்விற்கு ஒரு எடுத்துக்காட்டு!

### எல்லோர் இதயத்திலும் இடம்பிடித்த பஸ்ரியன்

அன்று ஏப்ரல் 25ம் திகதி... அன்றுதான் மேரி பஸ்ரியன் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட நினைவு நாள். மானிப்பாய் அந்தோனியார் கோவிலில் பணியாற்றிய காலம் ... தாயார் மகனின் குருத்துவ நாளை நினைவுபடுத்தச் செல்கின்றாள். மகன் அன்னம்மாள் கோவில் வேலையில் நிற்பதாக கேள்விப்பட்டு அங்கு சென்றபோது மகனைக் காணாது திகைக்கிறாள்.

அரைக் காற்சட்டை, வெள்ளை பெனியன், தலையில் ஒரு தொப்பி. இந்தக் கோலத்தில் சாரத்தின் மேல்நின்று வேலைசெய்து கொண்டிருப்பவர்களுக்கு கயிற்றின் மூலம் வாளியில் சீமேந்து கலவை அனுப்பிக்கொண்டிருக்கும் ஓர் இளைஞன். அவன் சிரித்த பின்னர்தான் அவனை மகன் மேரி பஸ்ரியன் என அடையாளம் காண்கின்றாள் தாய்.

அவ்வாறே மல்வம் கோவில் பங்குமனையின் தள வேலையை அக்கோவிலைச் சேர்ந்த இளைஞர்கள் இரவோடு இரவாக முடிப்பதாக திட்டம்போட்டு இரவு பன்னிரெண்டு மணியைத் தாண்டியதும் உறங்கிப் போகின்றனர். தனது பணிகளுக்காக வெளியே சென்றிருந்த மேரி பஸ்ரியன் இரவு இரண்டு மணிக்கு மீண்டும் வந்து உறங்கிக்கொண்டிருந்த இளைஞர்களைப்பற்றிக் கவலைப்படாமல் தனது அங்கியைக் கழற்றி ஒரு புறம் வைத்து விட்டு காற்சட்டையுடன் மண்வெட்டியை கையில் எடுத்து கொங்கிறிட் கலவையை குழைக்கத் தொடங்குகிறார். கூடநின்ற ஒருவன் தூங்கிக்கொண்டிருந்த இளைஞர்களைத் தட்டியெழுப்பி சுவாமி வேலைசெய்வதைக் காட்டியதும் அவ்வளவு இளைஞர்களும் துடித்தெழுந்து துரிதமாக வேலையில் ஈடுபட்டனர். வேலை முடியும்வரை யாரும் தூங்கவில்லை. பஸ்ரியனும் ஓய்வெடுக்கவில்லை.

### இறைபணிக் கலைஞன் மேரி பஸ்ரியன

திருச்சி புனித சின்னப்பர் குருமடத்தில் பயின்ற காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 22ம் நாள் நடைபெறும் சிறுவர் தினவிழாவில் பஸ்ரியன் பங்குகொண்ட, அவரால் நெறிப்படுத்தப்பட்ட கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து நான்கு வருடங்கள் முதலாம் இடத்தைப் பெற்றன.

1980 நவம்பர் மாதம் யாழ் புனித மாட்டினார் குருமட நூறாவது ஆண்டு நிறைவு விழா. குருமட மாணவர்கள் மட்டும் கலந்துகொண்ட கலைநிகழ்வில் குருக்கள் சிலர் திடீர் நாடகம் ஒன்றைத் தயாரித்து அரங்கேற்றினர். அதில் பஸ்ரியன் முக்கிய பாத்திரம் ஏற்று எந்தவொரு வசனமும் பேசாமல் தனது அபார நடிப்பின் மூலம் பார்வையாளர்களைக் குலுங்கக் குலுங்க சிரிக்கவைத்தார்.


1980ம், 1981ம் ஆண்டுகளில் மல்வம், சுவாமி ஞானப்பிரகாச சனசமூக நிலைய இளைஞர்களைக்கொண்டு அவர் அரங்கேற்றிய திருப்பாடுகளின் காட்சியும் அவரது கலைத் திறமைக்கு எடுத்துக்காட்டு.

1982ம் ஆண்டு எமது வங்காலைப் பங்கில் கிறிஸ்மஸ் இரவில் நடந்த திருப்பலியை வானொலியில் ஒலிபரப்புச்செய்த பெருமை பஸ்ரியனையே சாரும்.

1967ம் ஆண்டில் வெளிக்களப் பயிற்சிக்காக யாழ் புனித மடுத்தினார் குருமடத்திற்கு அனுப்பப்பட்ட மேரி பஸ்ரியன் அங்கு உயர் வகுப்பு படித்துக்கொண்டிருந்த மாணவர்கள் துணையுடன் "ஏழையின் நண்பன்" எனும் கையெழுத்துச் சஞ்சிகையை மாத வெளியீடாக வெளியிட்டார். நாளடைவில் இது கல் அச்சுப் பிரதிகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. குருமட அதிபராக விளங்கிய அருட்திரு ஜே. இ. பஸ்ரியாம்பிள்ளை அவர்களுடன் 1968 – 1969 வரை வாழ்ந்த பஸ்ரியன் சிறைக்கைதிகளோடு உறவாடி அனுதாபத்துடன் அவர்களுக்குத் தொண்டாற்றியதுடன், கிறிஸ்மஸ் போன்ற திருவிழாக்களுக்கு கலை நிகழ்ச்சிகளை தயாரித்துச் சிறைச்சாலையில் அரங்கேற்றினார். இவ்வாறு கலையை பொழுது போக்கிற்காக அன்றி இறைபணிக்காக பயன்படுத்தியவர்.

### தனக்கென்று உள்ளதையே தானம்செய்கின்ற தாரான சிந்தையாளர்

மல்வம் பாடசாலையைக் கட்டுவதற்கு பனைமரங்கள் தேவைப்பட்டபொழுது இளவாலையில் அவரது காணியில் அவருக்கு சொந்தமான பனைமரங்களை மல்வம் சுவாமி ஞானப்பிரகாசியார் சனசமூக நிலையத்திற்கு இலவசமாகக் கொடுத்ததுடன்



தானும் கூடநின்று மரங்களைத் தறித்தும் ஏற்றியும் விட்டவர்.

1984 ஆடி மாதம் எமது பங்கின் திருவிழா சமயத்தில் நடந்த ஒரு சம்பவம். திருவிழாப்பலி முடிந்ததும் எதிர்பார்த்ததிலும் அதிக விருந்தினர்கள் வந்துவிட்ட காரணத்தினால் சாப்பாடு முடிந்துவிட்டது. எனவே பக்கத்தில் இருக்கும் எமது கன்னியர் மடத்திற்கு தனக்குச் சாப்பாடு தயாரித்து அனுப்பும்படி சொல்லி அனுப்பினார். அங்கிருந்து பிட்டும், கறியும் அனுப்பிவைக்கப்பட்டது.

சற்றுக் கழித்து மீண்டும் ஆளனுப்பி கண் பொரியலாக ஐந்து முட்டைகள் பொரித்தனுப்புமாறு கூறுகிறார். அங்கிருந்த சகோதரி அப்படியே செய்து அனுப்பிவிட்டு சுவாமிக்கு ஏன் ஐந்து முட்டைப்பொரியல் என சந்தேகம் எழ தானும் குருமனைக்குப் போய்ப் பார்க்கின்றார்.

தான் அனுப்பி வைத்த பிட்டும், கறியும், ஐந்து முட்டைகளும் யாரோ அகதிகளாக வந்த ஐவருக்குப் பரிமாறப்பட்டிருப்பதையும், அவர்கள் அறியாவண்ணம் மேரி பஸ்ரியன் தனது சாப்பாட்டறைக்குள் காய்ந்த பாண் துண்டொன்றை சாப்பிட்டுக் கொண்டிருப்பதையும் கண்டு, அவரை அன்போடு கடிந்து கொள்கிறார் அந்தச் சகோதரி.

மானிப்பாயில் பணியாற்றியபோது குடும்பத் தலைவனால் கைவிடப்பட்ட தாயின் நான்கு பிள்ளைகளைத் தான் பொறுப்பேற்று மூத்த பிள்ளையை பங்குதந்தை ரி. தேவராஜன் அடிகளிடம் ஒப்படைத்துவிட்டு தாயை மத்திய கிழக்கிற்கு தனது செலவில் உழைப்பதற்கு அனுப்பிவிட்டு இளையவன் அழகை தன்னுடன் வங்காலையில் வைத்திருந்தார். ஒவ்வொரு விடுமுறைக்கும் பிள்ளைகள் நான்கினையும் தன்னோடு அழைத்து ஒன்றுகூட்டி மகிழ்ந்தார். தங்களுக்கு தாயும் தந்தையுமாக திகழ்ந்த அந்தத் தெய்வத்தின் மீது குண்டுபாய்வதைத் தாங்கமுடியாமல்தான் அந்த அழகு என்னும் குருத்து செஞ்சோற்றுக் கடன் தீர்க்க குறுக்கே பாய்ந்து தனது இரத்தத்தையும் வளர்த்த தந்தையின் இரத்தத்தோடு எமது பூமியில் உறைய வைத்தது ..... !

மூளைவளம் குறைந்த சிறுவர்களின் நிலையமான உடுவிலில் உள்ள "ஆர்க்" நிறுவனம் மேரி பஸ்ரியனின் மேற்பார்வையில் கட்டியெழுப்பப்பட்டது. வேறு அலுவலகத்தாலும் ஆர்க் வழியாகப் போகும் சந்தர்ப்பம் கிட்டினால் ஒருமுறை வந்து அந்த சிறுவர்களோடு சற்று நேரம் சிரித்து மகிழாமல், அவர்களை தனது மோட்டார் சைக்கிலில் ஏற்றி சுற்றிச் சுற்றி வந்து வேடிக்கை காட்டாமல் போகமாட்டார் என்கின்றனர் அந்நிலைய அதிபரும் அருட்சகோதரிகளும்.

### இளைஞர்கள் மட்டில் தந்தையாக, நண்பனாக, சகோதரனாக வாழ்ந்தவர் பஸ்ரியன்

மானிப்பாயில் இளைஞர்களுக்கான ஒரு கருத்தரங்கு நடைபெறுகிறது. அவரால் நேசிக்கப்பட்ட ஒரு இளைஞன் காரசாரமாக கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்றான். அது அக்கருத்தரங்கின் நோக்கத்தை முறியடிப்பதாக அமைந்தது. பஸ்ரியன் சமாதானமான முறையில் ஓரிரு தடவைகள் அவனை எச்சரிக்கை செய்கிறார். அவனோ ஏற்றுக்கொள்வதாக இல்லை. கோபம் எல்லைமீறிய நிலையில் அத்தனை பேருக்கும் முன்னால் அவனை அடித்து விடுகிறார். இளைஞன் உடனே கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடுகிறான், அமைதிகாக்கிறான். அந்த இளைஞனை அவமானப்படுத்திய செயலைத் தாங்கிக்கொள்ள முடியதாக பஸ்ரியன் குலுங்கிக்குலுங்கி அழுகிறார். தனக்கு அடிவிழுந்ததால் ஏற்பட்ட தாக்கத்தைவிட சுவாமி அழுவதை அந்த இளைஞனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஓடிச்சென்று அவரிடம் மன்னிப்புக்கேட்கின்றான். அனைவர் முன்னிலையிலும் அவனைக் கட்டியணைத்து முத்தம் இட்டு சமாதானம் செய்கிறார். இதே நிகழ்வு 1985ம் ஆண்டு தை மாதம் 4ம் திகதி மாலை எமது பங்கிலும் நடைபெறுகிறது. தன்னோடு மனஸ்தாபமாய் இருந்த இளைஞர்களை அழைத்து அவர்களிடம் மன்னிப்புக்கோரி சமாதானம் செய்துகொண்டார் அமரர் மேரி பஸ்ரியன்.

### தாழ்மையின் இருப்பிடம் பஸ்ரியன்

1980ம் ஆண்டு பெரியவெள்ளிக் கிழமை மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயம். திருச்சிலுவை முத்தமிடும் சடங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆண்களில் ஒருவர் சற்று மதுபோதையில் வரிசையைக் குழப்பிக்கொண்டு வந்தபோது பஸ்ரியன் அவரைத் தடுக்கின்றார். (தொடர்ச்சி 16ம் பக்கம்)

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2232140, Fax : 023-2232893, E-mail : valvum@sltnet.lk


## முரண்பாடுகளுக்கு மத்தியிலும் உடன்பாடு காணப்பட வேண்டும்

**மௌலவி எஸ். ஏ. அசீம்**

முரண்பாடுகளுக்கு மத்தியிலும் உடன்பாடு காணப்பட வேண்டும் என மன்னார் வாழ்வுதய்த்தினால் 05.02.2007 அன்று நடாத்தப்பட்ட சர்வமத ஒன்றிப்புக் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மௌலவி எஸ். ஏ. அசீம் அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், மன்னார் மாவட்டத்தில் சர்வமத ஒன்றிப்பு நிகழ்வுகளை நடாத்துகின்ற வாழ்வுதயத்தை நான் பாராட்டுகின்றேன். இவ்வாறான செயற்பாடுகள் எமது சமூகத்தை மேலும் வளர்ப்பதற்கும் நல்நோக்கத்தோடு செயற்பட வைப்பதற்குமான பணியாகும் என்றார். கடந்த காலங்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் நடாத்தப்பட்டு வந்துள்ளன. அத்தோடு இன்று எமது நாட்டைப் பொறுத்தவரையில் மனித அவலமும் மனிதனை மனிதன் பிடித்துக் கொலை செய்கின்ற கலாச்சாரமும் நீதியற்ற கைதுகளும் மலிந்து செல்கின்றன. இவ்வாறான ஒரு சூழலில் சமூகங்கள் - மதங்கள் இடையே ஒன்றிப்பை, ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலமே எம்மிடையே பிணக்குகள் ஏற்படாதவாறு பாதுகாக்கலாம். எம் சமூகங்கள் இடையேயும் நல்லுறவை வளர்க்கமுடியும் என்றும் கூறினார்.

மௌலவி அவர்கள் மேலும் கூறுகையில், நமது மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நமது சர்வமத ஒற்றுமையைப் பேணிக்காத்து எம் சமூகங்களுக்கிடையே ஏற்படும் சிறு சிறு பிரச்சினைகளை வளரவிடாமல் பாதுகாத்து, நாம் இம்மாவட்டத்தை அன்பிலும் ஒற்றுமையிலும் வளர்ப்பதற்குப் பாடுபடவேண்டும் என்றார்.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் இந்து சமயத் தலைவர்கள், கிறிஸ்தவ சமயத் தலைவர்கள், இஸ்லாம் மதத்தலைவர்கள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இக்கலந்துரையாடல் நிகழ்வை வாழ்வுதய சமாதானப் பிரிவினர் ஒழுங்குபடுத்தி இருந்தனர். இக்கலந்துரையாடலில் சர்வமத ஒன்றிப்பு தொடர்பான எதிர்காலத் திட்டமிடலும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.




சர்வமத வழிபாட்டில் ஈடுபடும் மதகுருக்கள்

## வாழ்வுதய ஆற்றுப்படுத்தல் பணிகள்

வாழ்வுதயத்தின் ஆற்றுப்படுத்தல் பிரிவானது ஆரம்பிக்கப்பட்டு 9 மாதங்கள் கடந்துள்ளன. எமது சேவையினால் பல மக்கள் உளப்பிரச்சினையிலிருந்து விடுப்பட்டுள்ளார்கள். முக்கியமாக சாந்திபுரம், தோட்டவெளிப் பிரதேசங்களில் 7 ஆற்றுப்படுத்துனர்கள் சேவையாற்றி வருகின்றார்கள். இங்கு கருத்தமர்வுகள் நடைப்பெற்று இளைஞர் யுவதிகளின் உளப்பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

தற்போதைய யுத்த சூழ்நிலையில் பல தடைகள் ஏற்பட்டபோதிலும் அதனைக் கடந்து எமது ஆற்றுப்படுத்துனர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்கள்.

இப்பணியானது சமகால சூழ்நிலையில் மேலும் தேவையானதொன்றாக இருக்கிறது. மனிதம் சிதைந்த மக்களிடையே சென்று, உடல் உளப்பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கின்றார்கள். இப்பணியானது அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.



உளவள ஆற்றுப்படுத்தல் செயற்திட்டம்

## தொழிற்பயிற்சிப் பிரிவின் 2007ம் ஆண்டின் செயற்பாடுகளும் அது தொடர்பான விடயங்களும்


சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் (ILO/IPEC) 2007 ஆம் அண்டில் வாழ்வுதயத்தினால் நடாத்தப்படுகின்ற தொழில் பயிற்சிகளும் அது தொடர்பான விளக்கங்களும். இப்பயிற்சி நெறியானது பின்வரும் மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்றது.

01. குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தினர். 02. பெற்றோரை இழந்த பிள்ளைகள். 03. பாடசாலை கல்வியை இடை நிறுத்தியவர்கள். 04. குடும்பத் தலைவியின் பராமரிப்பில் உள்ள பிள்ளைகள் 05. தடுப்பு முகாமில் இருந்து விடுபட்டவர்கள் 06. வலுவிழந்தவர்கள்.

## பயிற்சி நடைபெறும் இடங்களும் பயிற்சிக் காலமும்

| பயிற்சி | இடம் | காலம் | மா.எண். |
|---|---|---|---|
| தையல் | பேசாலை | 06 மாதங்கள் | 25 |
| தையல் | எருக்கலம்பிட்டி | 06 மாதங்கள் | 30 |
| கணனி | வாழ்வுதயம் | 06 மாதங்கள் | 22 |
| பனை உற்பத்தி | கீளியன்குடியிருப்பு | 06 மாதங்கள் | 21 |
| வீட்டு மின்னிணைப்பு | பெரிய கமம் | 06 மாதங்கள் | 22 |
| வீட்டு மின் உபகரணம் திருத்துதல் | மன்னார் | 06 மாதங்கள் | 15 |
| அச்சகப்பயிற்சி | வாழ்வுதயம் | 04 மாதங்கள் | 06 |
| மொத்தம் | | | 141 |





## உண்மையும் நீதியும் இல்லாவிட்டால் சமாதானம் வராது

**முன்பள்ளி ஆசிரியர்களின் வருடாந்த ஒன்றுகூடலில் மன்னார் ஆயர்**

அண்மையில் 28.01.2007ம் திகதி வாழ்வுதய நிர்வாகத்தின்கீழ் இயங்கும் அனைத்து முன்பள்ளி/ தொண்டர் ஆசிரியர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் மன்னார் மறைக்கல்வி நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே மன்னார் ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயர் அவர்கள் மேலும் கூறுகையில், இன்று எமது நாடு அழிவின் பாதாளத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. உண்மையும் நீதியும் தொலைக்கப்பட்டுவிட்டது. நாளாந்தம் மனிதப் படுகொலைகளும், நீதியற்ற நியாயமற்ற கைதுகளும், அவற்றை மூடிமறைக்கின்ற தலைமைத்துவங்களும் இன்று எமது நாட்டில் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. எனவே சுயநலப்போக்கினாலும், தற்காலிக சுகபோகத்திற்காகவும் அடிமைப்பட்டுக் கிடக்கின்ற எமது நாடு இதில் இருந்து மீளவேண்டும், இரத்தக் கலாச்சாரத்தை வேரோடு அழிக்க வேண்டும் என்றும் கூறினார்.

ஆயர் மேலும் பேசுகையில், இன்றைய இளம் பாலகர்கள் மத்தியில் பணியாற்றும் ஆசிரியர்கள் சிறுபராயத்திலேயே அன்பு, ஒற்றுமை, நீதி, போன்ற நல்ல பண்புகளைப் பாலகரது உள்ளத்தில் வளர்க்க வேண்டும். இவர்கள் நாளைய சமூகத்தில் அன்புச் சமூகங்களாக மாற வேண்டும். இவ்வாறான பணிகளை ஆசிரியர்களாகிய நீங்கள் முன்னெடுக்க வேண்டும். இதுவே சமாதானத்திற்காக நீங்கள் கொடுக்கும் பங்களிப்பாக இருக்கும் என்றார். தொடர்ந்து ஆயர் அவர்கள் அனைத்து வாழ்வுதய முன்பள்ளி - தொண்டர் ஆசிரியர்களையும் வாழ்த்தி, நன்றிகூறி வருடாந்த அன்பளிப்பையும் வழங்கித் தனது உரையினை நிறைவுசெய்தார்.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வு 27/28 - 01 - 2007 ஆகிய இரு தினங்களும் இடம்பெற்றது. முதல்நாள் ஒன்றுகூடலில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளார் கலந்துகொண்டு ஆலோசனைகள், கருத்துக்களை வழங்கினார். இந்த ஒன்றுகூடலில் வாழ்வுதயப் பணியாளர்கள் முன்பள்ளித்தொண்டர் ஆசிரியர்கள் 85ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்த அமர்வில் ஆசிரியர் திரு. யோண் பொஸ்கோ அவர்கள் சமாதானம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துரையினை திறம்பட வழங்கினார்.

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



அலங்காரத்தின் மகளுக்கு இன்னும் திருமணமாகவில்லை எனினும் அவள் கற்பமாகி இருப்பது தெரியவந்தது. அதற்குக் காரணமானவனைக் கண்டறிந்தான் அலங்காரம். அவன் வீடு சென்று துப்பாக்கி முனையில் அவனை நிறுத்தி, "என் மகளின் பெயருக்குக் களங்கம் விளைவித்த உனக்கு என் கையால்தான் சாவு" என்று சொல்லி வெடியைத் தீர்க்க விளைந்தான். "ஐயா… ஆத்திரப்படாதீங்க.. அவசரப்படாதீங்க.." என்று கெஞ்சி மன்றாடியவனாக "இப்பிரச்சினையை பேசித் தீர்க்கலாம் என்றிருக்கிறேன். பெண் குழந்தை பிறந்தால் பத்து இலட்சம் தருவதாக இருக்கிறேன். அதுவே ஆண் குழந்தை எனில் இருபது இலட்சம் கொடுப்பேன்.." என்ற வார்த்தைகளைக் கேட்டதும் அலங்காரம் துப்பாக்கியை மடக்கி சட்டைப்பையில் வைத்துக்கொண்டான்.

இரு கைகளையும் மரியாதையாகத் தூக்கி இறுக்கக் கட்டிக்கொண்டு, "ஒருவேளை கரு கலைந்துவிட்டால் என் மகளுக்கு இன்னுமொரு சந்தர்ப்பம் கொடுப்பீர்களோ சேர்!…" என மிகவும் பவ்வியமாகக் கேட்டான் அலங்காரம். அவன் தன்னை சுதாகரித்துக்கொண்டு பதில் சொல்வதற்கு முன்பதாக, "தெய்வாதீனமாக இரட்டைக் குழந்தைகள் பிறந்துவிட்டால் எனக்குப் பெரும் அதிஸ்ரம்தான்!…" என்று தனக்குள்ளே எண்ணி மகிழ்ந்தான் அலங்காரம்.

காசு, காணி என்றால் சிலர் வாயைப்பிளந்து விடுகின்றார்கள். இன்னும் சிலருக்கு வீணியே வடிந்துவிடுகிறது! இவர்கள் காசுக்காக எதைச் சொல்லவும், எதைச் செய்யவும், ஆயத்தமாக இருப்பார்கள். அதனால்தான் "பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் என்றும், "பணம் பத்தும் செய்யும் என்றும், "பணம் பாதாளம் வரை பாயும்" என்றும் சொல்லி வந்திருக்கிறார்கள்.

"காசேதான் கடவுளப்பா அந்தக் கடவுளுக்கும் அது தெரியுமப்பா.." என்றொரு பழைய பாடல் இருக்கிறது. சில மனிதர்கள் பணத்தை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதை இப்பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. அமெரிக்க நாணயங்களில் "கடவுளில் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்" (In God we trust) எனப் பொறிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கர்களுக்கு காசு உருவத்தில் கடவுள் தோன்றுகிறார்போல!

இன்றைய நாள்களில் காசுக்காகவே பலருடைய மானம் பங்கப்படுத்தப்படுகின்றது, மேலும் பலருடைய வாழ்வு எடுக்கப்படுகின்றது. இன்னும் பலருடைய உயிர்கள் பறிக்கப்படுகின்றன. பண மோகம் பலருடைய கண்களை மறைத்துவிடுகிறது. பணத்தைக்கொண்டு எதையும் சாதிக்கலாம், எப்படியும் வாழலாம் என்று நினைப்பவர்களும் ஏராளம்.

இன்றைய சமுதாயத்தில் பண்பாளர்களா அல்லது பணம் படைத்தவர்களா மிகவும் மதிப்புப் பெறுகிறார்கள் என்றால் உண்மையில் பண பலம் படைத்தவர்கள்தான்.

ஒருமுறை மிகவும் எளிமையான சாதாரண உடையில் கடைக்குப் போயிருந்தேன். அப்போது ஒரு பணக்காரப் புள்ளியும் வந்துவிட்டார். எனக்கு முன்பதாகவே பலர் அந்தக்கடையில் நின்றுகொண்டிருந்தார்கள். எனக்குப் பின்னர்தான் அச்செல்வந்தரே வந்திருந்தார். இருப்பினும் "முதல்ல ஐயாவைக் கவனி…" என்று எங்கள் முகத்தின் முன்பாகவே முதலாளி தொழிலாளிக்கு ஓடர். (Order – கட்டளை) போட்டார்.

அங்கு நின்றவர்களுள் ஒருவர் காசுக்கார ஆட்களைத்தான் கவனிப்பீர்களோ…?" எனக் கேட்க, "அப்பிடி இல்ல, அது நமக்கு வேண்டியவங்க…?" என்று முதலாளி சொல்லி முடிப்பதற்குள், "அப்ப.. நாங்க.." என அந்நபர்களுடைய உரையாடல் இடைநடுவில் நின்றது. இந்த நிலை அரச, அரச சார்பற்ற அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், தொழில் நிலையங்கள், ஏன் வழிபாட்டிடங்கள் எனப் பலதரப்பட்ட இடங்களிலும் நடந்தேறுகின்றது.


எலும்புத்துண்டைக் காட்டினால் நாய்கள் எப்படி உடல் முழுவதையுமே வாலாக வளைத்து ஆட்டிக்கொண்டு நம்மைச் சுற்றிச் சுற்றி வருமோ அதுபோல பணத்தைக் கண்டுவிட்டால் போதும் இவர்கள் வழிபடக்கூட ஆரம்பித்துவிடுகிறார்கள்.

முல்லா நசுருதீன் ஒரு தடவை சத்திரத்தில் தங்க நேர்ந்தது. முல்லா மிகவும் எளிமையான உடையில் காணப்பட்டார். அதனால் அங்கு நின்ற பணியாளர்கள் முல்லாவைக் கணக்கெடுக்கவே இல்லை. பகட்டான, ஆடம்பர உடை உடுத்தி வந்தவர்களைப் பணியாளர்கள் நன்றாகக் கவனித்துக்கொண்டார்கள். காலையில் போகிறபோது சத்திரத்தில் தங்கியதற்குக் கூலியாக நூறு ரூபாய்க்குப் பதில் ஆயிரம் ரூபாயைப் பணியாளரிடம் முல்லா கொடுத்தார். பணியாளனுக்குப் பெரிய ஆச்சரியம். பெரிய பெரிய ஆடை அணிகலன்களோடு வருபவர்களைவிட, எவ்வளவு பரோபகாரியாக, தாராள மனதுள்ளவராக, எளிமையாகத் தோற்றமளிக்கும் இந்த முல்லா இருக்கிறாரே!.." என்று மலைத்துப்போனான். இந்தச் சம்பவம் மற்றப் பணியாளர்களுக்கும் தெரியவந்தது.

இன்னுமொரு தடவை இதே சத்திரத்தில் முல்லா தங்க வேண்டி ஏற்பட்டது. முல்லாவைக் கவனித்துக்கொள்ள பணியாளர்களிடையே இம்முறை போட்டா போட்டி. எனினும் முன்பு கவனித்த பணியாளனுக்கே மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தது. முல்லா இம்முறை பணம் தருவார் என நினைத்து மிகவும் உன்னதமான முறையிலே கவனித்துக்கொண்டான். காலையில் புறப்படும்போது சத்திரக் கூலியான நூறு ரூபாவைப் பணியாளனிடம் கொடுத்து, "இது அன்றைய கவனிப்புக்கு, அது இன்றைய கவனிப்புக்கு!…" என்று கூறிவிட்டுப் போனாராம்.

பெண் பார்க்கும்போதுகூட "நல்ல குணமான பெண் கிடைத்தால் போதும்" என்றுதான் போகிறார்கள். இறுதியில் எங்கு அதிக தொகை கிடைக்கிறதோ அங்கே கூடாரம் அடித்துவிடுகிறார்கள். இங்கு உண்மையில் திருமணம் ரொக்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது. ஒரு "போர்மாலிற்றிக்காக (Formality) சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது எனப் பூசி மெழுகி மினுக்கி விடுகிறார்கள்.

இதனைத்தான் கவியரசு கண்ணதாசன், "பணம் பந்தியிலே குணம் குப்பையிலே இதைப் பார்த்து நடக்காதவர் மனிதரில்லே…" என்று பாடுகிறார்.



பொன்னுக்கும், பொருளுக்குமே முதலிடமும் முன்னுரிமையும் கொடுக்கப்படுகிறது. இரண்டாம் நிலையில்தான் ஏனைய அம்சங்களான ஒருவரின் குணம், கல்வி, ஒழுக்கம், கலைத்திறன் போன்றவை அவதானிக்கப்படுகின்றன.

பணத்தை வைத்துக்கொண்டுதானே சமுதாயத்தில் உயர் மட்டத்தில் செயல்படுகிற அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் மக்களைக் கைக்கூலியாகவும், கைப்பொம்மைகளாகவும் நடத்த முற்படுகிறார்கள். பணம் வருகிறது, பதவி கிடைக்கிறது என்றால் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் குப்பையில் எறிந்துவிட்டு கட்சியை மாற்றிக்கொள்கிறார்கள்.

இதுதான் இன்றைய சமுதாயத்தினுடைய யதார்த்த நிலையாக இருப்பினும் ஆங்காங்கே சிலர் விதிவிலக்காக இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் "பணம் என்னடா பணம் குணம் தானடா நிரந்தரம்.." என்ற உண்மையான வாழ்வுநிலைதான் உயர்ந்து நிற்கிறது என்பதை இன்றைய சந்ததியினருக்கு உணர்த்திக்கொண்டே இருக்கிறார்கள்.

பணத்தின் - செல்வத்தின் தேவையை யாரும் மறுக்க முடியாது. பணப் புழக்கம் இல்லாத காலத்தில் பண்டமாற்று இருந்தது. அதுவும் பணத்தின் இன்னுமொரு வடிவம்தான்! ஆக செல்வம் மனிதனுக்குத் தேவையானது, அவசியமானது. இவ்வுண்மையை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும் என்றுதான் "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை, அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை" என்றார்கள்.

ஆகவேதான், "செல்வம் செருப்பைப் போன்றது. அளவு குறைந்தால் நம்மைப் புண்படுத்துகிறது. அளவுக்கு அதிகமானால் நம்மைத் தடுமாற வைக்கின்றது…" என்று கவிஞர் முருகையா செல்வம் பணத்தினுடைய நடுநிலமையைப் பக்கச்சார்பின்றி கோடிட்டுக் காட்டுகிறார்.

ஆகவே ஒன்று மட்டும் உறுதியாகிறது. "அதிக உடமைகள் இருப்பதனால் ஒருவனுக்கு வாழ்வு வந்துவிடாது" என்ற இயேசுவின் கூற்று உண்மையில் பொன் வாக்குத்தான். ஏனென்றால், எப்படியாவது, எவர் காலைப் பிடித்தாவது, எந்த வழியிலாவது பணம் சேர்க்க வேண்டும், பொருள் தேட வேண்டும் என்று அலைந்து திரிபவர்களுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியை, மன நிறைவை, மனத்திருப்தியை அவர்கள் ஒருபோதும் காணமாட்டார்கள்.

அன்பின் அழைப்பு .. அற்புத அழைப்பு..

## திருக்குடும்ப சபையின் திருமடச்சார்பற்ற குழுவில் இணைய அழைப்பு

தம் திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய இறைவன் பல்வேறு காலங்களில் பல்வேறு அழைப்புக்களை விடுத்துக்கொண்டே இருக்கின்றார்.

2ம் வத்திக்கான் சங்க மறுமலர்ச்சிக் காலத்தில் துறவற சபைகளை அவற்றின் ஊற்றுக்குத் திரும்பி ஆய்ந்தறிய அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வேளையில் போட்டேவின் திருக்குடும்ப சபையின் *திருமடச்சார்பற்ற குழுவைப்* பற்றிய தெளிவு சபைக்கு ஏற்பட்டது. சபையின் நிறுவுனராகிய முத்திப்பேறுபெற்ற தந்தை பியன் பியன்வெனு நோஆய் அவர்களின் ஆரம்பகால சபையின் அமைப்பில் இருந்து இன்றுவரை இந்த திருமடச்சார்பற்ற குழுவானது வாழ்ந்து வளர்ந்துகொண்டு வருகிறது. அப்போஸ்தலிக்க சபையுள்ள சகல நாடுகளிலும் தன் வாழ்வினை இக்குழு கொண்டுள்ளது.

"புளிக்காரம்" போன்று மனிதவதார மறைபொருளின் வாழ்வை இவர்கள் வாழ்கின்றனர். உலகில் வாழ்ந்துகொண்டே இதன் உறுப்பினர்கள் விரதத்துவம், ஏழ்மை, பணிவு ஆகிய மூன்று வாக்குறுதிகளையும் அர்ப்பணிப்பு வாழ்வுக்காய்க் கொடுத்து தம் குடும்பங்களிலேயே தங்கி வாழ்கின்றனர். இவர்களின் வாழ்வு பகிரங்கப்படுத்தப்படுவதில்லை.

இலங்கையில் தென் பகுதியில் இவர்கள் இருவேறு குழுக்களாக உள்ளனர். வருடத்தில் மூன்றுமுறை ஒன்றுகூடி செபம், சபையின் குழுவின் ஏடுகள் படித்தல், ஒழுங்குப் புத்தகம் படித்தல், வாழ்வுப் பகிர்தல் என்பவற்றில் இவர்கள் ஈடுபடுவார்கள். வருடத்தில் ஒரு வாரத்துக்கு தியானம் செய்வார்கள்.

வடபகுதி, மலையகம் கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களில் 10 அர்ப்பணிக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர்.

3 - 6 மாதங்கள் வரை சபை பற்றிய அறிவு வழங்கப்படும். உருவாக்கத்திற்கு அனுமதி கிடைத்தபின் 3 வருடங்கள் உருவாக்க காலமாக அமையும். 1 - 5 வருடங்கள் வருடாந்த அர்ப்பணப் புதுப்பித்தல் நடைபெறும். 5 வருடங்களின் பின் நித்திய அர்ப்பணம் செய்வார்கள். இவை யாவும் பிரத்தியேகமானவையாகவே இருக்கும்.

உறுப்பினர்கள் ஏதோ வகையில் தம்மில் தாமே தங்கி வாழக்கூடிய வருமான நிலையைக் கொண்டிருக்க வேண்டியது முக்கியம். இக்குழுவினருக்கான அழைத்தலை திருக்குடும்ப சபைச் சகோதரிகளே தெரிந்து கொடுக்க வேண்டியவராவர்.

வாழும்போது எதையும் எதிர்பாராது இறைவனில் மட்டும் தங்கி வாழ்ந்து எந்த இடத்திற்கும் சென்று சுதந்திரமாகப் பணிபுரிந்து இறையரசை மலரவைக்க இந்த அழைத்தல் ஓர் சிறந்த சந்தர்ப்பம்.

அழைப்பின் உள்ளுணர்வு தட்டும்பொழுது திருக்குடும்ப சபைக் கன்னியர் ஒருவரை நாடுங்கள், வழிகாட்டுவார்.

வயதெல்லை 25 - 46

## மன்னா விளம்பரப் பலகை

"ஒருவர் உனக்கு எத்தீங்கும் செய்யாதிருக்கும்போது அவரை வீண் வாதத்திற்கு இழுக்காதே"
*வே. மார்த்தாள், நமுனுகுல, பதுளை.*


"கடவுளின் விரல் எழுதிய சிறுகதைதான் ஒவ்வொரு மனிதனின் வாழ்வும்"
*அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.*

"மனிதா! தண்ணீராய் நீ இருந்தால் தவளைதான் உன்னைச் சுற்றி வரும். ஆனால் சூரியனாய் நீ இருப்பாயானால் பூமியே உன்னைச் சுற்றிவரும்."
*ம. கொண்சாலோ, M10, மடுக்கோவில், மடு.*

"திரும்பப்பெற முடியாத விடயங்கள் உச்சரிக்கப்பட்ட சொல், தவறிவிட்ட வாய்ப்பு கடந்துபோன நிமிடம்."
*செ. வித்தியா, மடுக்கோயில், மடு.*

"உடல் ஊனம் கண்டு நகைக்கின்றோம்- எம் உள ஊனம் தனை எண்ண மறுக்கின்றோம். சாமிக்கும் எம் வீட்டில் அறை - ஆயினும் சாத்தான்தான் எம் மன வீட்டில் குடியிருக்கும்." (படித்ததில் சுவைத்தது)
*அ. யூட் தனறாஜ் (மதன்), உயிலங்குளம்வீதி, முதலைகுத்தி.*

"நாம் தேடியது கிடைக்காவிட்டால் நம்மைத் தேடிவருவதை சந்தோசமாக ஏற்றுக்கொள்வோம்."
*ஆ. சுரேகா, ஸ்ரீநகர், பூந்தோட்டம், வவுனியா.*



"பிறர் துன்பத்திற்கு இதயத்தை திற. உன் துன்பம் மறைந்துபோகும்"
*- தே. ஜெர்மா, சாளம்பன்.*

"உலகப் பொருட்கள் எதன்மீதும் ஆசை வைக்காதே, துயரங்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான் என்பதை மறந்துவிடாதே"
ச. அன்ரனீற்றா, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.

"உன் பையை பணத்தால் நிரப்புவதைவிட்டு உன் மனதை நேர்மையால் நிரப்பு"
ஜெ. றொசாந்தன், பிடாரிகுளம், முருங்கன்.

"உடலுக்கு உயிர் எவ்வளவு அவசியமோ அதுபோல ஆத்மாவுக்கு பிராத்தனை அவசியம்"
"எத்தொழிலும் செய்வது இழிவல்ல, சோம்பலே இழிவானது"
*- தமிழன்பன், வங்காலை.*

"தொடர்பும் பழக்கமும் நல்ல நட்பல்ல. இருவரிடையே உள்ள ஒத்த உணர்வே நல்ல நட்புக்கு இலக்கணமாகும்"
*பீ. ஒகஸ்ரீனா, இல.25/1, ராணிமில் வீதி, இறம்பைக்குளம்.*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக் சுவையாய் …… எழுதி அனுப்புங்கள்.

முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி,
மன்னார்.

# மன்னார் மாதோட்ட மண்ணில் கூத்துக் கலை மரபுகள்



திரு. எஸ்.டேவிட், கோட்டக் கல்விப் பணிப்பாளர், முசலி

ஈழத்தமிழர் தம் வாழ்வு யுத்த அனர்த்தங்களால் சிதைக்கப்பட்டுள்ள நிலையிலும் சமூக, பொருளாதார, கலாச்சார அம்சங்களில் நமது இருப்பினைத் தக்க வைக்கவேண்டும் என்ற வைராக்கிய உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் என்றுமில்லாதவாறு உத்வேகம் அடைந்துள்ளமை வெளிப்படை.

இயங்கியல் விதியின்படி நெருக்கடிகள் சூழ்கின்றபோதுதான் மனிதனின் சிந்தனைச் சக்தியும் செயல் திறனும் கூர்மை அடைகின்றது. நாம் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் நமது சிந்தனையை வளம்படுத்த வேண்டும். எமது வாழ்வின் இருப்பினை அடுத்த தலைமுறையினருக்கு வழங்க வேண்டுமாயின் முதலில் நமது மொழி சார்ந்த பண்பாட்டு விழுமியங்களை நாம் பாதுகாக்க வேண்டும்.

தமிழரின் பண்பாட்டுக் கோலங்களில் கலைகள் தனித்துவமானவை. அதிலும் நாடகக்கலை சங்ககாலத்தில் இருந்து வளர்ச்சிகண்டு வந்துள்ளது. எனினும் இந்த வளர்ச்சிக்கான சான்றாதாரங்களை முழுமையாகப் பேணிக்காப்பதில் நம்மவர் தவறிழைத்து விட்டனர். ஈழத்துக் கலை வளர்ச்சியில் நாடகக்கலை தனித்துவ சக்தி வாய்ந்தது. பிரதேசவாரியான நாடக வளர்ச்சியை நோக்கும்போது மன்னார் மாவட்டத்தின் நாடகக்கலையானது "கூத்து" வடிவத்தை நீண்ட காலமாகக்கொண்டது.

பொதுவாக நோக்கும்போது தமிழினத்தின் நாடகக்கலையின் மூலவேர் "கூத்து" வடிவத்தையே கொண்டது என்பது ஆய்வாளரின் கருத்தாகும். அதனால்தான் "கூத்து" என்பது நாடகம் என்ற கருத்தினைக்கொண்டது. தமிழரின் புகழ் பூத்த கூத்து நாடக வடிவானது மன்னார் மாவட்ட மக்களால் காலங்காலமாக பயில் நிலையில் பேணப்பட்டு வருகின்றது.

நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டதும், கடல்வளமும், பயிர் வளமும் சிறக்கும் மன்னார் மாதோட்ட மாநிலமானது கிழக்கே ஆலங்குளத்தையும், மேற்கே பாக்கு நீரிணையையும், தெற்கே மோதரகம் ஆற்றையும், வடக்கே வெள்ளாங்குளத்தையும் எல்லைகளாகக் கொண்ட 957½ சதுர மைல் பரந்த விஸ்தீரணமுடைய நிலப்பரப்பாகும். பல நூற்றாண்டு காலமாக தமது பாரம்பரிய சமுதாய ஒழுங்கமைப்புக்களுடன் வாழ்ந்து வரும் மன்னார் தமிழ் பேசும் மக்கள் கூத்து வடிவிலான நாடகக்கலையை தமது வாழ்வில் பிரிக்க முடியாத அம்சமாகப் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

16ம் நூற்றாலன்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியரான போர்த்துக்கேயரின் வருகையோடு இலங்கையில் கத்தோலிக்க – கிறிஸ்தவ மதம் பரவலடைந்துள்ளது. கத்தோலிக்க மதம் பரப்புதலின் செல்வாக்குக்குட்பட்ட முதன்மைப் பிரதேசமாக மன்னார்ப் பிரதேசமே விளங்கியது. கத்தோலிக்கக் குருக்கள் மக்களை மதமாற்றம் செய்வதற்கான சிறந்த "பிரச்சார ஊடகமாக" இங்கு ஏற்கனவே பயில் நிலையிலிருந்த கூத்து நாடக வடிவங்களையே தேர்ந்தெடுத்தனர். அந்த அளவுக்கு கூத்துக்கலை மக்களின் வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்திருந்தது.

இதனால் கத்தோலிக்க குருக்கள் கலை இலக்கியங்களில், அன்று சிறந்து விளங்கிய புலவர்களை இனங்கண்டு அவர்களை அணுகிக் கிறிஸ்தவ மதக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கதைக்கருக்களைக் கொண்ட கூத்து நாடகங்களை எழுதுவித்து அவற்றைப் பக்திபூர்வமான கலை நிகழ்வுகளாக அரங்கேற்றினர்.

இத்தகைய கூத்து நாடகங்கள் புனிதர்களின் தியாக வாழ்வைப் பிரதிபலித்தமையால் மக்கள் இக்கூத்துக்களைப் பக்திபூர்வ நிகழ்வாகக் கருதினர்.

இரண்டு மூன்று இரவுகள் ஆடி நடிக்கக்கூடிய கூத்துக்களை 'நாடகம்' என்றும், ஓர் இரவில் நடிக்கும் கூத்தினை "வாசாப்பு" என்றும் வழங்கினர். "வாசாப்பு" என்பது 'வசனமும் பாவும்' கலந்த நாடக வடிவமாக விளங்கி காலகதியில் "வாசாப்பு" என மருவியதாக கூத்தியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாடகம், வாசாப்பு, போன்ற கூத்து வடிவங்களுடன் வனவாசாப்பு, சபா, டிறாமா, பாசுக்கை போன்ற புதிய நாடக வடிவங்களும் கிறிஸ்தவப் பரப்புதலின் பயனாக தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டன.

மற்றொரு பரிமாணமாக *உடக்குப்பாஸ்* அமைந்தது. இன்றும் உடக்குப்பாஸ் எனப்படும் பாவைக்கூத்து பேசாலையில் பயில் நிலையில் உள்ளது. மன்னார் பெருநிலப்பரப்பில் உள்ள பறப்பாங்கண்டல் பெரியகோவில் இலங்கையிலேயே பாஸ்கு நாடகம் நடிக்கப்படும் பிரபல்ய புனித ஆலயமாக அன்று விளங்கியதற்-கான வரலாற்று ஆதாரங்கள் உண்டு.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கிய தகவல் என்னவெனில் கிறிஸ்தவ மரபு நாடக வருகையினால் இலங்கையின் நாடக வரலாற்றில் புதிய 'திருப்பு முனை' ஏற்பட்டது என்பதுதான். நாடகவடிவம், பாத்திரப்படைப்பு, கதைக்கரு, அரங்க வடிவம், ஒப்பனை போன்ற பல அம்சங்களில் புதிய மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்மாற்றங்கள் ஈழத் தமிழரின் பிற்கால நாடக முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தன.

நாடக வடிவங்கள் கிறிஸ்தவ மதக்கருத்துக்களை பிரதிபலித்தாலும் நாடகத்தின் பா வடிவங்கள் ஏற்கனவே வழக்கில் இருந்து வந்த பாவடிவங்களைக் கொண்டுதான் நாடகங்கள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக ஒரு கிறிஸ்தவ கூத்து நாடகத்தினை முழுமையாக ஆழ்ந்து நோக்கும்போது வெண்பா, கவி, விருத்தம், சிந்து, வர்ணம், தாழிசை, கட்டளைக் கலித்துறை, தோடையம், இன்னிசை போன்ற பல்வேறு பாவடிவங்களைக் கொண்டதாக இருப்பதை அறியலாம். இப்பாவடிவங்கள் யாவும் நமது தமிழ் மொழியின் இலக்கண வரம்புக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய காலப்பகுதியில் கத்தோலிக்க குருக்களால் கூத்து நாடகங்களை உருவாக்கி அரங்கேற்றுவதற்கான ஊக்குவிப்பு வழங்கப்பட்டதால் மன்னாரில் பரவலாக வாழ்ந்த பல புலவர்கள் ஒவ்வொருவரும் பல நாடகங்கள் எழுதினர். எமது பொதுவான கணிப்பீட்டின்படி 1957ம் ஆண்டு வெள்ளப்பெருக்கில் அழிந்தவை போக ஏறத்தாழ 150 நாடக ஏடுகள் இன்றும் பல கிராமங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை அறியமுடிகின்றது.

மன்னார் மாதோட்ட மண்ணில் 16ம் நூற்றாண்டுக்கு முன்பு நாடகக் கலை எந்த நிலையில் இருந்தது என்பதற்கான சான்றாதாரங்கள் அவ்வளவாக இல்லை. 16ம் நூற்றாண்டில்தான் மாதோட்ட அரங்கக் கலையினை தடங்களைக் காண முடிகின்றது என அமரர் புலவர் பெஞ்சமின் செல்வம் அவர்கள் தனது ஆய்வின் மூலம் நிறுவியுள்ளார். மன்னார் மாவட்டத்தில் வளர்ச்சியடைந்த கிறிஸ்தவ நாடக மரபின் தந்தையாக அமரர் லோறன்ஸ் புலவர் இனம்காணப்பட்டுள்ளார். இவரது காலப்பகுதி கி. பி. 16ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 17ம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலமாகும்.

அவரால் இயற்றப்பட்டதெனக் கருதப்படும் வெண்பா வடிவிலான காப்புக் கவியானது மிகவும் பக்தி பூர்வமானதும் பிரபல்யமானதுமாகும்.

அமரர் லோறன்ஸ் புலவர் அவர்கள் பாடிய இந்த முதன்மையான காப்புக்கவியானது மன்னார் மாநில கிறிஸ்தவ நாடக மரபின் தேசிய கீதமாகவும், நாடக நிகழ்வின் ஆரம்பத்துக்கு முன்பு பாடப்படும் புகழ்மிக்க வெண்பாவாகவும் விளங்குகின்றது.

வெண்பாவிலான அவர் பாடிய வல்ல சிலுவை காப்புக்கவி இவ்வாறு அமைகின்றது:

*வல்ல சிலுவை மரத்தைப் புயத்தேந்தி*
*சொல்லரிய வாதைத்துயரோடு – கல்வாரி*
*மேட்டுக்கு மேல் நடந்த தேவபரனே – எமது*
*பாட்டுக்கு முன் நிற்பதாம்*

அமரர் லோறன்ஸ் புலவர் அவர்களிடம் இலக்கண இலக்கியம் கற்ற பல மாணவர்களே பிற்கால கிறிஸ்தவ கூத்து நாடகங்களை உருவாக்கியும், மேடையேற்றியும் கூத்து நாடக மரபை வளப்படுத்தினர். லோறன்ஸ் புலவர் அவர்களின் முதன்மை மாணவர்கள் வரிசையில்

- தென்பாங்கில் என்றிக் எம்பிரதோர் நாடகம் பாடிய குருகுல நாட்டுத் தேவர்
- கோது கப்பித்தான் நாடகம் பாடிய சந்தியோகுப் புலவர்
- மரிகிருதாள் நாடகம் பாடிய வெள்ளைப் புலவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களை அடியொற்றி பிற்காலத்தில் ஏராளமான கிறிஸ்தவ, இஸ்லாமியப் புலவர்கள் பல நாடகங்களை எழுதினார்கள். இப்புலவர்கள் அனைவரும் பரஸ்பரம், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதக்கொள்கைகளை தெளிவுற அறிந்திருந்தார்கள் என்பதை மன்னார் புலவர்களின் வரலாற்றைத் தொகுத்தளித்த அமரர் புலவர் பெஞ்சமின் செல்வம் அவர்கள் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மக்கள் கிராமியக் கலையான கூத்து நாடகங்களை அரும்பெரும் கலைப் பொக்கிசமாகக் கருதினர். ஒவ்வொரு ஊருக்கும் உகப்பான ஒவ்வொரு நாடகம் உண்டு. இவை வயல் அறுவடை முடிந்த ஓய்வு காலங்கள், ஆலய உற்சவ காலங்கள் போன்ற வேளைகளில் அநேகமாக நடிக்கப்படுகின்றன. ஊர் ஒற்றுமைக்காகவும், செழிப்பான வாழ்வுக்காகவும், பஞ்சம், பசி, பிணி நீங்கி செல்வமும் நல்வாழ்வும் பெறுவதற்காகவும் இறைவனின் கருணையை நாடி மிகவும் பக்திபூர்வ நிகழ்வாக நாடகத்தை அரங்கேற்றி முடிப்பர்.

ஒரு நாடக அரங்கேற்றத்துக்காகச் செய்யப்படும் ஆரம்ப நிகழ்வுக்கும் இறுதி நிகழ்வுக்கும் இடையே உறுதியான ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்படும். இச்சம்பிரதாய மரபுகளைப் பின்வருமாறு சுருக்கமாகப் பட்டியலிடலாம்.

- நாடகக் கூட்டம்
- நிர்வாகக் குழுத் தெரிதல்
- பாத்திரப் பகிர்வு
- ஏடு திறத்தல்
- "றியசல்" என்ற ஆங்கிலச் சொல்லின் திரிபான "ஏசார்" எனப்படும் நாடகப் பயிற்சி ஒத்திகைகள்.
- "கெச்சை கட்டுதல்" எனப்படும் காற்சலங்கை கட்டும் நிகழ்ச்சி.
- கூத்து அரங்கினை அமைக்கும் முதன்மை நிகழ்வான கன்னிக் கால் நாட்டுதல்.
- கூத்து பந்தல் அமைத்தல்
- வெள்ளை கட்டுதல்.
- வாழைக் குற்றியில் தேங்காய் எண்ணெய் ஏற்றுதல்.
- கூத்து தொடங்கும்முன் அரங்கின் முகப்பில் வார் வளைதல்.
- அரங்கக்காவல் - அண்ணாவியார் அரங்கிற்கு மந்திரம் ஓதி காவல் காத்தல்.
- கூத்து அண்ணாவியார் களரி கட்டுதல்.
- கிராம சேவகர் கட்டளை சொல்லுதல்.
- ஏட்டு அண்ணாவியார் ஏடு திறத்தலும் காப்புக் கவி பாடுதலும்.
- நடிகரைக் கௌரவித்தல் (கூத்தின் முடிவில்)
- மங்களம் பாடுதல்.
- ஆலயம் செல்லுதல்.
- கூத்து முடிந்து நடிகர்களின் வீடுகளுக்குச் செல்லுதல்.
- கூத்து முடிந்தும் 8 தினங்கள் ஒளிப்பந்தம் வைத்து இளைஞர்கள் பந்தலைக் காவல் காத்தல்.
- (ஊர் மக்கள் எல்லாம் ஒன்றுகூடி) பந்தல் விருந்து சமைத்து உண்ணுதல்

என்றவாறாக கூத்து அரங்கேற்றம் சம்பந்தமான சடங்கு சம்பிரதாயங்கள் நீண்ட பட்டியல் கொண்டது.

மன்னார் நாட்டுக் கூத்து அரங்கின் இச்சம்பிரதாயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடக அரங்கேற்றத்தின்போதும் நுட்பமாகவும், கருத்தூன்றியும் ஊர்ப் பெரியவர்களால் கடைப்பிடிக்கப்படும்.

அரங்க நிகழ்விற்கான ஏற்பாடுகளில் பெரியவர்களின் கருத்துக்களை இளைஞர்கள் பெரிதும் மதிப்பர்.

## கூத்துக் கலையின் இன்றைய அவல நிலை


மன்னாரில் கூத்துக் கலை இன்று உறக்க நிலையில் உள்ளது. மிக மோசமான யுத்தம் நடைபெற்ற காலங்களில், வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலைமையிலும் பரவலாக ஆங்காங்கே பல கிராமங்களில் கூத்து நாடகங்கள் துணிச்சலுடன் அரங்கேற்றப்பட்டன. ஆனால் ஓரளவு அமைதி நிலவிய 4 வருட காலப்பகுதிக்குள் வசதி வாய்ப்புக்கள் சாதகமாகி உள்ள நிலையில் எத்தனை கூத்து நாடகங்கள் அரங்கேறின என எண்ணிப் பார்க்கும்போது ஏமாற்றமாக உள்ளது (இன்று நிலைமை கலக்கமடைந்துள்ளது).

இப்போதெல்லாம் மக்களின் அனைத்து வயதுப்பிரிவினரும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குள் 'அடக்கம்' செய்யப்பட்டுள்ள நிலையிலேயே உள்ளனர்.

ஆலய உற்சவ காலங்களிலும், நெல் அறுவடை முடிந்த பின்னரும் ஆங்காங்கே ஏட்டிக்குப் போட்டிபோல பரவலாக பல கிராமங்களில் கூத்து நாடகங்களை ஒற்றுமையாக, பக்திபூர்வமாக அரங்கேற்றும் முயற்சிகள் இன்று பெரும்பாலும் கைவிடப்பட்டுள்ளன.

கூத்துக் கலைகளின் வரன்முறைகளையும், இராக தாளங்களையும், சம்பிரதாய மரபுகளையும் நன்கு அறிந்த பல மூத்த கலைஞர்கள் முதுமை அடைந்து விட்டனர். இந்நிலையில் இளைய கலைஞர்கள் மன்னாரின் பாரம்பரியக் கூத்துக்கலையை அரங்கேற்ற முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு இன்றைய காலத்தின் கட்டளையாக உள்ளது.

நமது பாரம்பரியக் கலைகளை உயிர்ப்புடன் அரங்கேற்றுவதனூடாக, தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் 'தவம்' கிடக்கும் அனைத்து வயதுப் பிரிவினரையும் விழிப்படையச் செய்வதன் மூலம் நமது கலைப் பாரம்பரியத்தை கன்னிமை தவறாமல் பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.



வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகுதமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டீன் ஜோசப்

தொடர் - 2

## இறைவாக்கினர்களா? பூசாரிகளா?

அருட்பணியாளர் ஒருவர் என்னிடம் தனது ஆதங்கங்களைக் கொட்டித் தீர்த்துக்கொண்டிருந்தார். 'வழிபாட்டுப் பணிகள் மட்டுமே செய்து சலிப்படைந்து விட்டதாகச்' சொன்னார். "நான் ஓர் இறைவாக்கினராக வாழ அடியெடுத்து வைத்தேன். இன்று வெறும் பூசாரியாகவே வாழ்கின்றேன்" என்பது அவரின் வருத்தம்.

வழிபாடு என்பது பூசாரித்தனமா? மானிட விடுதலைக்காக உழைக்கின்ற பலருக்கு இப்படியொரு எண்ணம் பதிந்து கிடக்கிறது. நிர்ணயிக்கப்பட்ட வழிபாட்டுப் பாடங்கள், எது நடந்தாலும் சரி அனிச்சைச் செயல்போல் அவற்றை நிறைவேற்றுகின்ற தொண்டர்கள், எது நடந்தாலும் சரி வழிபாட்டிற்கு மட்டும் தவறக்கூடாது - வழிபாடு செய்துவிட்டால் அந்த நாள் நல்லதாக இருக்கும் என்று நினைக்கும் பக்தர்கள் போன்றோரின் செயற்கையான செயற்பாடுகள் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கலாம்.

## இறைவாக்கினர் செயல் (Prophetic Action)

கிறிஸ்தவ வழிபாடு என்பது இயேசுவின் இன்றைய இறைவாக்குச் செயல். வழக்கமாக இறைவாக்கினர் போதிப்பதோடு நின்று விடுவதில்லை. சில அடையாளச் செயல்கள் வழியாக தங்கள் போதனைகளை மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிக்கின்றனர். எடுத்துக்காட்டாக எரேமியா மண்கலத்தை உடைத்த நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ளலாம் (எரே 19:1-13). குயவனின் மண்கலத்தை எரேமியா உடைத்து இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் ஒட்ட வைக்க முடியாத அளவிற்கு சிதைக்கப்படுவார்கள் என்பதை அடையாள முறையில் காட்டுகிறார்.

இயேசுவின் பந்தியமர்தல் இது போன்று இறைவாக்கு அடையாளச் செயலே! வரி தண்டுபவரோடும், பாவிகளோடும் சேர்ந்து உண்டு இறையாட்சியின் இயல்பை அடையாள முறையில் காட்டுகிறார் இயேசு.

இத்தகையச் செயல்களைப் போன்ற கிறிஸ்தவ வழிபாடு ஓர் அடையாளச் செயல். இன்று இறைவன் செயல்படுகிறார் என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமல்லாமல் விவிலிய இறைவனின் வித்தியாசமான செயல்பாடுகளை உணரச்செய்கின்ற விசித்திரமான காவியம் வழிபாடு.

தென் அமெரிக்க நாடுகளில் வழிபாட்டை சமூக மாற்றத்தின் ஒப்பற்ற கருவியாகப் பயன்படுத்தி வெற்றியும் கண்டிருக்கின்றனர். பேராயர் அஸ்கார் ரோமேரோ போன்றவர்கள் நற்கருணைக் கொண்டாட்டங்களில் மிகப்பெரிய இறைவாக்குப்பணி நடத்தியிருக்கின்றனர்.

## ஆதித்திருச்சபையில் உருவான அருட்செயல்

இந்த வழிபாடு உருப்பெற்றதே ஆதித்திருச்சபையில்தான். பல்வேறு இன்னல்களுக்கு உள்ளான ஆதிக்கிறிஸ்தவர்கள், தங்கள் வாழ்வின் இலக்கை உறுதிப்படுத்திக்கொள்ள, சிதறிப் போகாமல் இணைந்து செயல்பட வழிபாடு என்ற இந்த அரிய செயல்ப்பாட்டைக் கண்டுபிடித்தனர்.

மறைவான இடங்களில் ஒன்றுகூடி தங்களது நம்பிக்கையை அறிக்கையிட்டு, அப்பம் பிடுதல் என்ற அடையாளச் செயல் மூலம் வலிமையும் வாழ்வும் பெற்றனர். இந்த நற்கருணைக் கொண்டாட்டங்கள் வேதசாட்சிகளின் கல்லறைகளில் நடைபெற்றன என்பது இவர்களின் வீர வரலாற்றைத் தூண்டிவிட்ட மற்றொரு அடையாளச் செயல்.

விடுதலை வேள்வியில் தங்களையே பணயம் வைத்து ஈடுபடும் கிறிஸ்தவர்களுக்கே இந்த வழிபாட்டின் தேவைகள் புரிகின்றது. வீரமான வாழ்வுதேடிப் புறப்படும் நேரத்தில்தான் - நற்செய்திகளின் மதிப்பீடுகளுக்காகப் போராடும் ஒரு காலகட்டத்தில்தான் - வழிபாடு பொன்னொளியாகச் சுடர்கிறது. எங்கு வாழ்க்கையில் தேக்கநிலை ஏற்படுகிறதோ அங்கு வழிபாட்டிலும் தேக்கநிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆயிரம்தான் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தாலும் போராடும் வாழ்விலேதான் திருவழிபாடு புதுமையும் பொலிவும் பெறுகின்றது.

## சாதியத்திற்கு எதிரான போராட்டம்

இன்று கிறிஸ்தவம் சாதியத் தீயில் வெந்துகொண்டிருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தச் சாதியச் சதிராட்டத்திற்கு எதிராகப் போராடவேண்டியது கிறிஸ்தவர்கள் அனைவரின் பொறுப்பு.

சாதியத்திற்கு எதிராகப் போராடத் துணிந்துவிட்ட திருச்சபையின் திருவழிபாடு தனிப்பெரும் பங்காற்றுகிறது. சாதியத்திற்கு எதிராகக் கிறிஸ்தவர்களை ஒன்றுசேர்த்து ஓருடலாக மாற்றும் ஒப்பற்ற பணியைத் திருவழிபாடு செய்ய முடியும்.

அன்று கொரிந்து நகரில் சாதியம் போன்ற ஒரு பிளவு ஏற்பட்ட போது 'இயேசுவின் உடலைப் பாதிக்கப்பட்டவரில் அடையாளம் கண்டுகொள்ளுங்கள்' என்று பவுல் அடியார் அறைகூவல் விட்டார் (1 கொரி 11:27) அந்த நிகழ்வு போன்று, சாதியப் படிநிலையால் பாதிக்கப்பட்டவரை அடையாளம் கண்டுகொள்கின்ற, அவர்களது மாண்பைப் போற்றுகின்ற, அவர்களை மனிதர்களாக மாற்றுகின்ற, இழந்துபோன மனிதத்தன்மையை மீட்டெடுக்க அவர்களை பக்குவப்படுத்துகின்ற இடமாக வழிபாடு மாறமுடியும்.

## பெண்மையை வளரச் செய்யும் பேரியக்கம்

இன்று திருச்சபையில் பெண்களின் சக்தி மிகப்பெரியது. வழிபாட்டிற்கு வருகின்றவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களின் வாழ்வை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்கும் பெரிய பொறுப்பு வழிபாட்டிற்கு உண்டு. ஆணாதிக்க அமைப்பு முறைக்கு எதிராக, பெண்களின் உடலையும் மனத்தையும் அசிங்கப்படுத்தும் தொடர்பு ஊடகங்களின் படையெடுப்புக்கு எதிராக, பெண்களை வல்லமைமிக்க இறையாட்சியின் சாட்சிகளாக மாற்றுகின்ற ஒரு பணியை வழிபாடு செய்யமுடியும்.

பெண்களைத் தன்மானத்தோடு ஒன்றுசேர்க்கும் களமாகவும், விழிப்புணர்வுதரும் அடையாளச் செயலாகவும் வழிபாட்டை அமைத்துக்கொள்வதில் என்ன தடை இருக்கிறது?

## வழிபாட்டில் அரசியலா?

வழிபாட்டில் ஒரு சிலர் அரசியல் பேசுகின்றனர். விடுதலை! விடுதலை! என்று வாய் கிழியக் கத்துகின்றனர். இவர்களை நினைத்தாலே அருவருப்புத்தான் வருகிறது என எத்தனையோ இறைமக்கள் குறைபட்டுக்கொள்வது உண்மைதான். விடுதலைப் போராட்டத்தை வாழ்வில் துவங்கி வைக்காத ஒரு பணியாளர் வழிபாட்டில் மட்டும் புரட்சி பேசுவது மக்களை வெறுப்படையச் செய்கின்றது.

மனித வாழ்வின் விடுதலை எத்தகையது என்பதைக் கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் மக்களுக்கு உணர்த்திவிட்டு அதன் அடிப்படையில், வாழ்க்கையில் தீமைகளுக்கு எதிரான போராட்டத்தில் மனிதர்களை ஈடுபடுத்தும் நேரங்களில் இத்தகைய அரசியல்பூர்வமான சூளுரைகள், அடையாளச் செயல்கள் மக்களை விழிக்க வைக்கும். இல்லையேல் அருவருப்பையும், ஏன் எதிர்ப்பையும்தான் உண்டாக்கும்.

## மக்கள் எங்கு செல்கிறார்கள்?

இன்றைய கிறிஸ்தவ மக்கள் அருங்கொடை இயக்கங்களையும், பக்தி இயக்கங்களையும் மிக எளிதாக ஏற்றுக்கொள்கின்றனர். காரணம், அவற்றின் செயற்பாடுகள் உள்ளத்தைத் தொடுகின்றன. தனி மனித ஆன்மீகமாக வளர்ந்துவிட்ட அவற்றின் வழிபாட்டு முறைகள் மனதில் காயங்களை ஆற்றுகின்றன.

எத்தனையோ மனிதர்கள் மனம்திருந்தி வாழ்வதற்கு, வாழ்க்கையில் மாற்றுப்பாதைகள் தேடிக்கொள்வதற்கு அவை உதவுகின்றன.

போட்டா அருங்கொடை இல்லங்களிலும், உபவாசச் செபக்கூட்டங்களிலும் மக்களுக்கு இருக்கின்ற ஆர்வம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது. இந்தத் தனிமனித நல்வாழ்வு வழிபாடுகளை ஏன் சமுதாய மாற்ற வழிபாடுகளாக, சமுதாய நல்வாழ்வு வழிபாடுகளாக மாற்ற முடியாது?

இந்தப் பணியைச் செய்யவே கிறிஸ்தவ வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது. நம் கையில் இருக்கும் மாபெரும் செல்வத்தைப் புரிந்துகொள்ளாமல் குரங்கின் கையில் பூமாலை போன்று அலைந்து கொண்டிருக்கின்றோம்.

நமது வழிபாட்டு முறை தனிமனித விடுதலையையும் சமூக விடுதலையையும் இணைந்து நடத்தும் செயல்முறை. நடத்திக்காட்டத் துணிகின்ற அருட்பணியாளர்களும், இறைமக்களும் இல்லாததுதான் இன்று திருச்சபையில் இருக்கின்ற பெரிய குறை.

திருச்சபைக்கு நெருக்கடி ஏற்படும் நேரங்களில் மட்டும் அருட்பணியாளர்கள் பலர் வழிபாட்டைச் சிறப்பாகப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். நமது நிறுவனங்களுக்கும், உரிமைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் நேரங்களில் வழிபாட்டுத் தளங்கள் போராட்டத்தின் அடையாளங்களாகச் செயல்பட்டு உள்ளன. இதே வேகத்தைச் சமுதாயத்தின் பிற அநீதிகளுக்கு எதிரான போராட்டமாக ஏன் மாற்ற முடியாது?

## அனைத்தும் விடுதலையின் அடையாளங்களே!

சமுதாயத்தில் உள்ள அநீதிகளை எதிர்த்துப் போராட, நீதிக்காக உயிரைத்தரத் துணிந்த சமுதாயத்தில் வழிபாடு என்பது இறைவாக்குச் செயலாக அமையும். வழிபாட்டின் அத்தனை அடையாளங்களும் விடுதலையை நோக்கி அழைத்துச் செல்லும் அடையாளங்களே. அப்பம் என்பது சமத்துவத்தின் அடையாளம். பல்வேறு கோதுமை மணிகள் இணைந்து 'அப்பம்' ஆவது போல, சிதறிக் கிடக்கும் 'பல்வேறு கிறிஸ்தவர்களை இறையாட்சியில் ஒன்று சேர்த்தருளும்' என்பது ஆதிக்கிறிஸ்தவர்களின் நூலான டிடாக்கேயின் (கி.பி.110) மன்றாட்டு.

'அப்பம் பிட்கப்படுதல்' என்பது மக்களின் விடுதலை வாழ்வுக்காக பிட்கப்படும் தியாக உள்ளங்களை, அவர்களில் பிரசன்னமாக இருக்கும் இயேசுவின் சக்தியைக் குறிக்கின்றது. வாழ்க்கையில் தியாகம் செய்ய பங்கேற்பாளர்களைப் பக்குவப்படுத்துகின்றது.

விடுதலை வேள்வியில் தன்னையே கரைத்துக்கொள்ளும் பணியாளர்களின் நம்பிக்கை முரசாக, பிரகடனமாக வழிபாடு என்ற அடையாளச் செயல்ப்பாடு நிகழ்கிறது. இயேசு தன் பணிவாழ்வின் துவக்கமாகத்தான் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அங்கு நிகழ்ந்ததெல்லாம் எளிமையான, பாரம்பரியப் பின்னணியில் அமைந்த திருமுழுக்குச் சடங்குதான். அதைப் புதிய அனுபவமாக, புரட்சிகரமான வாழ்வின் பூபாளமாக நிகழ்த்திக் காட்டினார் இயேசு. வழிபாட்டை வாழ்வின் முதல் அடியாக அமைத்துக்கொண்ட பெருமை இயேசுவுக்கு உரியது.

நாசரேத்தூர் தொழுகைக்கூடத்தில் இயேசு நடத்திய வழிபாடும் இத்தகைய அனுபவங்களில் ஒன்றுதான். வழக்கமாக பலரும் செய்வதுபோன்று இறைவாக்கினர் ஏடுகளிலிருந்து வாசித்து விளக்கம் சொல்லுகிறார். ஆனால், அதுவே அவரது பணிபற்றிய புதிய பிரகடனமாக, வெற்றி முரசாக, வீர சபதமாக மாறுகிறது. 'இன்று இந்த மறைநூல் வாக்கு நிறைவேறியது' என்று சொல்லுகின்ற நேரத்தில் வழிபாட்டின் இறைவாக்குத் தன்மையை நடைமுறைப்படுத்திவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

இயேசுவின் இறுதிப் பாஸ்கா உணவுகூட இத்தகைய இறைவாக்குச் செயலே. சாதாரணமாக, யூதர்கள் செய்யும் சடங்கையே எடுத்துக்கொண்டு தனது மரணத்தின் அர்த்தங்களை உணர்ந்து ஆழமான அடையாளமாக, தனது மரணத்திற்கு கையளிக்க உறுதிதரும் உந்துசக்தியாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்.

## விடுதலையின் நிகழ்வு

இத்தகைய பின்னணியில் வழிபாட்டை நோக்குகின்ற நேரத்தில் ஒவ்வொரு வழிபாடும் 'விடுதலையின் நிகழ்வு' என்ற உண்மை வெளிப்படுகிறது. ஒவ்வொரு வழிபாடும் திரும்பக் கிடைக்காத வித்தியாசமான அனுபவ நிகழ்வு.

திருமண வழிபாட்டை ஒரு சடங்காக மட்டும் தம்பதிகள் பார்ப்பதில்லை. புதிய வாழ்வின் துவக்கமாக, நிகழ்வாகப் பார்க்கின்றார்கள். சடங்குகள் பழமையானவையாக இருக்கலாம். பங்கேற்பவர்கள் புதியவர்கள், காலம் புதியது, பங்கேற்கும் மனநிலைகள் புதியவை, இது போன்றுதான் ஒவ்வொரு வழிபாடும் குறிப்பிட்ட காலகட்டத்தில், குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழலில், குறிப்பிட்ட மக்களுக்கு நிகழ்கின்ற வாழ்க்கை நிகழ்வே வழிபாடு.

வழிபாட்டை பூசாரித்தனம், தேவையில்லாத பாரம்பரியச் செயல், விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்கும் சமய பாசிசம் என்று எண்ணுபவர்கள் தவறு செய்கிறார்கள். விடுதலையின் ஊற்றைத் தவறவிடுகிறார்கள்.

இன்று கிறிஸ்தவர்களை, இணைத்துச் செயல்படும் குழுவாக, விடுதலை வீரர்களாக மாற்ற வேண்டுமெனில் வழிபாடு என்ற தளத்தைச் சிறப்பாக பயன்படுத்தியே ஆகவேண்டும். வழிபாட்டு அடையாளங்கள் மறு வாசிப்புச் செய்யப்பட வேண்டும். வாழ்வுக்கான முடிவுகளின் முன்னோட்டமாக, முயற்சிகளின் தூண்டுதலாக, ஈடுபாட்டின் இலக்கணமாக அமையும் வழிபாட்டை இதுவரை பயன்டுத்தத் தவறியது நமது அறியாமையே!

# அருட்பணியாளர் ஜிம்பிறவுண் அடிகளாரின் நினைவுகளில் ...!

## நினைவுகளை இரைமீட்டுகின்றார் அருட்பணியாளர் சுரேந்திரன் றெவல்

2006 ஆவணி 22ம் திகதி! அது ஒரு செவ்வாய்க்கிழமை. காலை 10.30 மணியிருக்கும். எமது மன்னார் ஆயர் இல்லத் தொலைபேசி ஒலிக்கிறது. தொலைபேசியைத் தூக்கியபோது மறு முனையில் ஒரு சோகமான - நெஞ்சை உருக்கும் செய்தியுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு கத்தோலிக்க குருவானவர் காத்திருக்கிறார். சோகச்செய்தி தொலைபேசியூடாக என் நெஞ்சைப் பிளக்கிறது. "அல்லைப்பிட்டிக்கு ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப்போன ஜிம்பிறவுணைக் காணவில்லையாம், ஆயருக்கும் இதைச் சொல்லி விடுங்கள்." இந்தச் செய்தியோடு அதிர்ந்து போன நான் என்ன செய்வதென்று தெரியாது திகைத்துப் போய் யாழ்ப்பாணத்தில் உள்ள எனது குரு நண்பர்களோடு தொலைபேசியில் தொடர்புகொண்டபோது அதே சோகம்தான் அங்கும் காத்திருந்தது. ஜிம்பிறவுணின் பழைய நினைவுகள் மனத்திரையில் ஓடுகிறது.... ஐயோ என்ன நடந்ததோ? என்ன செய்தார்களோ? இப்போது எங்கே ஜிம்பிறவுண் என்ற கேள்விகள் நெஞ்சத்தைப் பிளந்துகொண்டிருந்தன.

ஜிம்பிறவுணைக் "கடைசியாக" நான் சந்தித்த முகம் என் மனக் கண்ணுக்குள்ளே வந்துகொண்டிருந்தது. நான் ஜிம்பிறவுணைக் "கடைசியாகக்" கண்டது ஆவணி 10ம் திகதி 2006ல் புனித செபஸ்தியார் பேராலய சாப்பாட்டு அறையில்தான்.

பேராலயத்தில் நடந்த ஒரு குருப்பட்ட நிகழ்வுக்காக வந்த எம் பாசமிகு ஜிம்பிறவுண் ஆவணி 10ம் திகதி யாழ் செல்வதற்காக காலையில் புறப்படுகின்றார். பேராலயத்தில் இருந்து பிரியமுன் அப்போது அங்கு வந்திருந்த எம் குரு நண்பர் அருட்தந்தை சத்தியராஜ்யையும் என்னையும் கட்டித்தழுவிய ஜிம்பிறவுணின் மோட்டார் சைக்கிள் புறப்படுகின்றது. அதுதான் ஜிம்பிறவுணைக் கடைசியாக" கண்ட நாள்.

அப்போது நான் மன்னார் பேராலய உதவிப் பங்குத்தந்தையாக இருந்தேன். 09. 08. 2006 அன்று நானும் "ஜிம்பிறவுணும் இன்னும் எமக்கு அறிமுகமான இரண்டு சகோதரிகளோடு எனது அலுவலகத்தில் கதைத்துக் கொண்டிருந்தபோது நாங்கள் ஜிம்பிறவுணை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டது, "மன்னாருக்கு வந்த நீங்கள் இன்னும் சில நாட்கள் நின்று ஆவணி மடுத் திருவிழாவையும்



முடித்துக்கொண்டு போகலாம்" என்றுதான். ஆனால் ஜிம்பிறவுன் சொன்ன பதில் "நான் இப்போது பங்குத்தந்தை, எனது ஆலயத் திருவிழாக் கொடியேற்றம் இருக்கு நான் கட்டாயம் போக வேண்டும்". அலுவலகத்தில் இருந்து பிரியும்போது ஜிம்பிறவுண் இந்தச் சகோதரிகளுக்குச் சொன்ன வார்த்தைகள் இன்னும் நெஞ்சைப் பிளக்கின்றது. "அடுத்தமுறை நாங்கள் இருப்போமோ நீங்கள் இருப்பீர்களோ தெரியாது. எதற்கும் போய் வருகின்றேன்".

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 37

சொல்லின் செல்வர் அமுது

## அகதிகள் வெள்ளம் கருணையின் கடல்

வங்காளதேசம் பாக்கிஸ்தானில் இருந்து பிரிந்து சுதந்திர நாடாய் இருக்க விரும்பியது.

மேற்குப் பாக்கிஸ்தானில் இருந்து வந்த படையினர், கிழக்குப் பாக்கிஸ்தான் என்று அழைக்கப்பெற்று வந்த வங்காளதேச மக்களைப் பழிவாங்கினர். சுதந்திரம் கேட்க முன்னின்றவர்களையும் அவர்களின் தொண்டர்களையும் கொடுமைகளின் உச்சிக்கு கொண்டுசென்று, அவர்களின் உயிரைத் தேடித் தேடி உடலை வருத்தினர். கேட்டால் இதய் நரம்புகள் தெறிக்கும் அளவுக்கு பயங்கரமான செய்திகள் நடைபெற்றன.

அவை ஈழநாட்டில் கடந்த 13 வருடங்களாக இவ்வாறு நடைபெறும் சோகமான கண்ணீர்க் கதைகளைப்போல் இரத்தம் பிரண்டவை. பாக்கிஸ்தான் படைகளின் பயங்கரமான தாக்குதல்களிலிருந்து தப்பி ஓடி இந்திய எல்லையில் அகதிகளாகக் கால் வைத்தவர்கள் ஒரு கோடி.

கடந்த 1995 கார்த்திகையில் யாழ்ப்பாணத்திலிருந்து சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புக்குப் பயந்து உடுத்த உடையோடு மழையிலும் கடலிலும் நனைந்து இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கிளிநொச்சிக்கு வந்த வரலாற்றை இது நினைவூட்டும்.

கல்கத்தாவின் வாசற்படிகளில் அவலக்குரலோடு அகதிகள் வந்து சேர்ந்தனர். கைவிடப்பட்டவர்களாலும், வீடு இல்லாதவர்களாலும் ஏலவே பாரம் தாங்காமல் முதுகு நெளிந்த கல்கத்தா மேலும் சுமையைத் தாங்க முடியுமா? விரைந்து பணியாற்ற வேண்டிய வேளை இதுவென உணர்ந்த அன்னை திரேசா வெளிநாடுகளைச் சேர்ந்த 15 கன்னியர்களை இங்கே அழைத்தார். அவசரமான இந்தத் தேவைக்கு இந்திய அரசும் ஆவன செய்தது.

கல்கத்தாவின் டம்டம் விமான நிலையத்துக்கு அண்மையில் பசுஞ்சோலை (Green Park) என்ற நடுநிலையத்தில் இருந்து அவர்கள் பணி தொடர்ந்தது. அகதிக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுதலே முதல் பொறுப்பாயிற்று. அந்த மனிதக் குருத்துக்களை வாடவிடலாமா? துன்பப்படும் குழந்தை குட்டிகளின் எண்ணுக்கணக்கோ பெருந்தொகை. அதற்குப் பல ஆயிரம் கைகளின் ஆதரவு அவசியம் என உணர்ந்தார் அன்னை.

அனைத்துலக நாடுகளுக்கும் உதவி புரியுமாறு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோள் சிறுநூல் வடிவமாய் அச்சிடப்பெற்று, எல்லா நாடுகளுக்கும் பறந்து சென்றது. பாக்கிஸ்தான் மக்கள், இந்திய மக்கள், வேறு எங்கெங்கோ வாழ்ந்தாலும் அங்கு வாழும் மக்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். எல்லாம் அதே கையால்தான் படைக்கப் பெற்றவர்கள். இன்று கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள் இறைவனின் குடும்பத்தில் ஒரு பகுதியினர்.

இது இந்தியாவுக்குரிய சிக்கல் அன்று. இது உலகப் பிரச்சனை. பல இலட்சம் பிஞ்சுகள் பட்டினியாலும் சத்துக் குறைவான உணவுகளாலும் வருந்துகின்றார்கள். உணவோடும் புரதச் சத்துடனும் இவர்களை உலகம் எதிர்கொள்ளாவிட்டால் இந்த இளஞ்சந்ததியைக் காணக்கிடையாது. இந்த மரணத்திற்கு உலகமே விடைகூற வேண்டிவரும். இது துண்டுப் பிரசுரத்தில் கண்டது. காதுக்குப் பூட்டுப்போட்டு மூடியிருந்த உலகம் இதற்கு விடையளித்தது. உணவுப் பொருட்கள் நிரம்பிய கப்பல்களும், விமானங்களும் கூவிக்கொண்டு வந்தன. தேவையான வேறுபொருட்கள், மருந்து வகைகள், லொறிகள், கூடாரங்கள் வந்து குவிந்தன. உதவி புரியவெனப் பலர் வந்து சேர்ந்தனர். வீடுகட்டும் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டிருந்த உப்புவாவிப் பட்டணம் (Salt Lake City) எனும் இடத்தில் அகதிகள் நிரம்பி வழிந்தனர். அவ்விடத்தையே அன்னையவர்களும் சகோதரிமாரும் தெரிந்துகொண்டபோது பணியின் தென்றல் அங்கே வீசியது. காலின் தோலும் விரல்களும் நடையால்த் தேய்ந்து, சோர்வுற்ற நூற்றுக்கணக்கான குடும்பங்கள், வெறுமையான சாக்கடைக் குழாய்களுக்குள் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்தபடி பருவக்காற்று மழைக்கு ஒதுங்கினர். பட்டகாலிலே படும் என்பது முதுமொழி. வாந்திபேதி, வயிற்றுளைவு, அம்மை, பொக்குளிப்பான் என்பன பெலவீனமாகி மெலிந்தவர்களின் உயிர்களை இலகுவில் காவிச் சென்றன. நான் ஒரு பிள்ளையைத் தூக்கியபோது அதன் பாரம் சருகு போலிருந்தது என்றார் கன்னியர் ஒருவர். ஐக்கிய அமெரிக்காவின் மேற்சபை உறுப்பினரான எட்வேர்ட் கென்னடி அவர்கள் அவ்வேளை அன்னை திரேசாவை வந்து சந்தித்தார். அங்கு நடைபெறும் அருந்தொண்டுகளைக் கண்டு கண் கலங்கினார். "குழந்தைகள் எலும்புந் தோலுந்தெரிய தொங்கிக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் தலையை நிமிர்த்த அவர்களுக்கு சக்தியில்லை. பாதங்களும் கால்களும் வீங்கிய பிள்ளைகள் தாய்மார்களின் கைகளைத் தோளில் அணைத்தவாறு கிடக்கின்றனர். சத்துள்ள உணவுக் குறைவால் பாலர்களின் கண்கள் குருடாகப் போகின்றன. சிலருடைய தோற்புரைகள் புண்ணாகிவிட்டன. மருந்துகளில்லாவிடில் மிகப்பலர் இவ்வாறு இடர்பட வேண்டிவரும். இவர்கள் எப்போது சுகம் பெறப்போகின்றனர்? என்ற ஏக்கம் பெற்றாரின் கண்களில் குடிகொண்டிருக்கிறது. எல்லாவற்றிலும் மேலாக நேற்றிரவு மரணித்த பிள்ளையொன்றின் உடலைக் கண்டபோது உண்மையில் என் ஆன்மாவே நெருப்பாய் எரிந்தது" என்று கென்னடி எழுதினார்.



அன்னை திரேசா தனது இரு கைகளில் எலும்பும் தோலுமான ஒரு பிள்ளையைத் தூக்கி அரவணைக்கும் நிழற்படமொன்றில் அவரின் ஆன்ம துயரம் முகத்தில் எழுதப்பட்டிருந்தது. துன்பப்படும் அகதிகளோடு கண்ணுறங்காமல் பணிசெய்துவந்த அன்னை திரேசா சோர்ந்து களைப்படைந்துவிட்டார். தனது தோளிலே அகதிகள் இருப்பதாயுணர்ந்து சேவை செய்தார். இதனால் வேறுபல ஈடுபாடுகளைத் தவிர்க்க வேண்டியதாயிற்று.

ஆண்டின் இறுதிப் பகுதியில் மீளவும் பணிபுரியக்கூடிய உடல்நலம் பெற்றார். 1971ஆம் ஆண்டு அன்னை திரேசாவின் வாழ்வுப் பாதையில் நினைவுகூரவேண்டிய காலமாக பூங்குழல் ஊதுகிறது. துறவிக்குரிய தரித்திரம், கற்பு, அமைச்சல் எனும் வாக்குத்தத்தங்களை எடுத்து 40 ஆண்டுகளாகின்றன. அன்புப்பணியாளர் சபையை அமைத்து 20 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.

உலகப் பரப்பில் சூழ்ந்துள்ள மக்கள் அன்புப் பணியாளர் சேவையின் தகுதியைக்கண்டு வியந்து அன்னையாரை இரண்டு முறை பரிசளித்துப் பாராட்டினர். பாப்பரசர் ஆறாம் சின்னப்பர் இவ்வாண்டு தைத்திங்கள் ஆறாம் நாள் "23ம் அருளப்பர் பாப்பரசரின் சமாதானத்துக்கான பரிசை" உரோமாபுரியில் அன்னைக்கு அளித்துக் கௌரவித்தார். எட்டு மாதங்களின் பின்னர் செனற்றர் எட்வேட் கென்னடி அவர்கள் வொஷிங்டனில் இன்னொரு பரிசை அளித்து மகிமைப்படுத்தினார். அவர் அண்மையில் கல்கத்தாவுக்கு வந்து அன்னையின் சேவையை நேரில் கண்டு திரும்பியவர் என்பது நாம் நினைவுகூரத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ஜோன் கென்னடியும் அவர் சகோதரர் செனட் சபை உறுப்பினர் றொபேட் கென்னடியும் கொலை செய்யப்பட்ட பின்னர் எஞ்சிய சகோதரர் எட்வெட் கென்னடி அவர்களே. அமெரிக்க மனநோயாளர் ஆராய்ச்சிக்கு உதவும் நிதி ஏற்பாட்டு நிறுவனத்தின் தலைவர் இவரே! இந்தத் துறையில் பணிபுரியும் அன்னை திரேசா அவர்களைத் தேர்ந்து அவருக்கே பரிசை அளித்தார். கையில் ஒரு குழந்தையை அரவணைத்து "பாருங்கள்! இந்தக் குழந்தைக்கு இன்னும் உயிர் இருக்கிறது!" என்று சொல்லி மகிழ்ச்சி பொங்கப் புன்னகை பூக்கும் திரைப்படமும் அங்கே காட்டப் பெற்றது.

அன்னை அவர்களுக்கு 15,000 டொலர் பணமும், வைரக்கற்கள் போல் வெட்டு வேலைப்பாடமைந்த பூக்குவளை ஒன்றும் அன்பாக அளித்தனர். நியூயோர்க் பட்டிணத்தில் பணிபுரியும் கன்னியர்களின் சிற்றாலயத்தின் மகுடத்தில் வைக்கப்பெற்ற மணியானது பூக்குவளை. (கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்குத் தெரியுமா?
### மறையறிவுப் பகுதி இல.45

போட்டிக்கான வினாக்கள் டிசம்பர் மாத மன்னாவிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. நேரடியாகவே கேள்விகளுக்கு வருவோம்.

1. மன்னார் மறைமாவட்டத்தின் சமூகத்தொடர்பு அருட்பணி மையம், மன்னார் பெற்றா புனித சூசையப்பர் வீதியில், டிசம்பர் மாதம் 6ம் நாள் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இதன் இயக்குனர் யார்?
2. கிறிஸ்துவின் பிறப்பு யாருக்கு வெறும் வரலாற்று நிகழ்வாக மட்டும் மாறுகின்றது?
3. 2007ம் ஆண்டிலிருந்து க.பொ.த. உயர்தர பரீட்சைக்குப் புதியதொரு பாடம், பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அது கிறீஸ்தவ மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அப்பாடம் எது?
4. உலக ஆயர் மாமன்றக் கூட்டம் 2008ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் திகதி நடாத்தப்பெற திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அழைப்பு விடுத்துள்ளார். இம்மாமன்றத்தின் விவாதத்திற்கான தொனிப்பொருள் என்ன?
5. இந்தியாவின் தமிழக அரசு சிறுபான்மை ஆணையத்தின் தலைவராக ஒரு குருவானவரைக் கடந்த நவம்பர் மாதம் 20ந் திகதி நியமித்துள்ளது. அவர் யார்?
6. 2006ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பேராசிரியர் முகமது யூனுஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் சுய உதவிக் குழுக்களின் தந்தை என்றும் அழைக்கப் படுகின்றார்? இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
7. திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் நான்காவது அப்போஸ்தொலிக்க திருப்பயணம் எப்போது எந்த நாட்டிற்கு மேற்கொள்ளப்பட்டது?
8. "தென்றல் காற்று சிணுங்கிச் சிரிக்க<br>ரோஜாப் பூவில் பனித்துளி தவழ<br>நடுங்கும் குளிரில் கன்னம் சிவக்க<br>பாலகன் பிறந்தான் பாடுங்கள் கீதம்"<br>இது யாருடைய வரிகள்?
9. இயேசுவின் வாழ்க்கை பற்றி முதலில் எழுதப்பட்ட நற்செய்தி நூல் எது?
10. புனித ஜோண் பொஸ்கோ சலேசிய குருத்துவ சபையின் ஸ்தாபகர். இவரின் தாய் திருமதி மாக்கிரேட் ஒக்கியேனா இவருக்குச் சமீபத்தில் திருத்தந்தையால் முத்திப்பேறு பெற்ற பட்டம் அருளப்பட்டது. அது எப்போது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 43 இற்கான கேள்விகளுக்கு 24 பேர் விடை அளித்திருந்தனர்.

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

பீ. பெனில்டஸ், வேதசாட்சிகோவிலடி, தோட்டவெளி.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. றொ. கவிதா, முத்தரிப்புத்துறை.
2. எவ். ஏ. ஷிபோறின், தரம்- 09, புனித. சவே. பெண். கல்லூரி.
3. ஏ. கான்சியூ நிறோஜினி, ஆண்டார் செட்டிவெளி, நானாட்டான்.
4. ரி. ஜெலிந்திரா, கன்னாட்டி, அடம்பன்.
5. ஆ. லக்ஸனா, தரம் - 12, ஏ.07 மடுக்கோவில், மடு.
6. ம.பென்யமின், தரம்-7, மன். கருங்கண்டல் ம.வி. காத்தான்குளம்.
7. க. எமிலின், எழுத்தூர், மன்னார்.
8. பொ.கிறிஸ்ரபெல், தரம் -11, மன்/புனித லூசியா.ம.வி.
9. அஜித்ரா பிரான்சிஸ், 4ம்குறுக்குத்தெரு, சின்னக்கடை, மன்.
10. செ. இன்வென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.

## அமரர் மேரி பஸ்ரியன் அடிகளார்..... 11ம் பக்கத் தொடர்ச்சி

போதையில் நின்ற அவர் சுவாமியை ஆலயத்திற்குள்ளே வைத்தே அவமரியாதையாகப் பேசிவிட்டுச் சென்றுவிடுகிறார். சுவாமியை அவர் ஏசியதால் அங்கிருந்த மக்களுக்கு சரியான கவலை. ஆனால் பஸ்ரியன் அதனைப் பொருட்படுத்தவில்லை.

அவரது கடமைகளைச் சரிவரச் செய்துவிட்டு மறுநாள் அந்தக் குறிப்பிட்ட நபரின் வீடு தேடிச் சென்று, அவரோடு சமாதானம் செய்துகொண்டார். மட்டுமன்றி அந்த நபர் தனது தவறை உணரவைத்தார். அடுத்த ஆண்டு (1981) பெரிய வியாழன் அன்று தன்னை ஆலயத்தினுள் அவமதித்த அந்த நபரின் கால்களை கால் கழுவும் சடங்கின்போது கழுவி முத்தமிட்டார்.

ஆம்... அமரராகி 22 ஆண்டுகள் கழிந்த பின்னரும் ஆண்டுதோறும் ஏன் நாம் அமரர் பஸ்ரியனுக்கு அஞ்சலி செலுத்துகின்றோம் என்பதற்கு இதைப்போன்று காரணங்களினை ஏராளமாகக் கூறிக்கொண்டே போகலாம்.

எம் பங்கில் அவர் செய்த சேவைகள் - இன்று எமக்கு வாழ்வளிக்கும் "வங்காலைப்பாடு" அவரால் பெற்றுத் தரப்பட்டது எடுத்துக்காட்டு. இவற்றிற்கெல்லாம் மேலாக "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எவரிடமும் இல்லை" என்ற இறைவார்த்தையை வாழ்ந்து எம்மையெல்லாம் வாழவைத்த உத்தமன் அவர்.

நீதியின்பால் பசி தாகம் கொண்டு விளங்கியவர்.

17.01.1985 அன்று பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி அவர்கள் கூறியதுபோல தென்னிந்தியாவிற்கு அவர் தப்பியோடியிருக்கலாம். அப்படி அவர் தப்பியோடியிருந்தால் இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தும் எம்மில் பலருக்கு எப்பொழுதோ அஞ்சலி நடைபெற்றிருக்கும்.

தன்னுயிரைக் காக்க தன் மந்தையைக் காட்டிக்கொடுக்காத நல்லாயன் மேரி பஸ்ரியன். அதனால்தான் 22 ஆண்டுகள் அல்ல இன்னும் காலாகாலத்திற்கும் இம்மண் அவரை மகிமைப்படுத்திக் கொண்டேயிருக்கும்.

நீதிமானாக விளங்கிய அவரைப்பற்றி கலிபோர்ணிய மாநில சென் பிரான்சிஸ்கோ நகரப் பேராயர் மாஷ்ஷேர்னி அவர்கள் தனது அஞ்சலியில் குறிப்பிடும்போது, "His zeal for justice for all people cut acroos religious lines, focused especially on refugees, and flourished in his beloved Parish at Vankalai" "எல்லா மக்களுக்கும் நீதி செலுத்தப்பட வேண்டும் என்ற அவருக்கிருந்த தணியாத தாகம் சமய எல்லைகளைக் கடந்து, அகதிகள் மட்டில் சென்று, அவர் நேசித்த வங்காலைப் பங்கில் செழித்துப் பரவியது" என்கிறார். ஆம்... அவரால் செழிப்படைந்த வங்காலையில் அவர் என்றுமே செழிப்புடன் விளங்குவார்.

"Be independent. Do not be dependent on others unnecessarily" "சுயமாக செயற்படு... அவசியமின்றி அடுத்தவர்களில் தங்கி வாழாதே" என்று அடிக்கடி கூறிய மேரி பஸ்ரியன் அவர்கள் இவ்வுலகில் வாழும்போது தீபமாக வாழ்ந்தவர். அத்தீபம் குன்றின் மேலிட்ட தீபமாய் ஒளிர்ந்து மற்றவர்களுக்கு ஒளிகொடுத்துக்கொண்டிருந்தது. அத்தீபத்தை எமது அறைவீட்டில் அணைக்க முயன்றார்கள். அதற்கு நாங்களே சாட்சிகள். ஆனால் அது அணையவில்லை, மாறாக ஆயிரமாயிரம் இளைஞர்களுக்கு ஒளிகொடுத்து நிற்கிறது.

எடுத்துக்காட்டாக அமரர் மேரி பஸ்ரியனால் திருமுழுக்குப் பெற்ற எம்மண்ணின் மைந்தன் 24வயது இளைஞன் அமரர் றெறன்ஸ் பேணாட் அவர்கள். "நான் இறந்த பின்னர் எனது அவயவங்கள் எவற்றையெல்லாம் எடுக்கமுடியுமோ அவற்றையெல்லாம் எடுத்து தவிப்பவர்களுக்குத் தானம் செய்யுங்கள்" என்று தனது இளமைப் பருவத்திலேயே அமெரிக்க அரசாங்கத்திற்கு உயில் எழுதிவைத்து, விபத்தொன்றில் தான் இறந்த பின் இன்று ஆறு ஜீவன்களுக்கு உயிர்கொடுத்து நிற்கின்றான் என்றால் அமரர் மேரி பஸ்ரியனின் ஒளி எம் மண்ணின் மைந்தர்களில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது என்பதில் ஐயமில்லைத்தானே?

**வாழ்க அமரர் பஸ்ரியன்! வாழ்க அவர் தியாகம்!**
**அமைதி பெறுக அவருடன் இறந்த ஆன்மாக்கள்!**

# தேசிய மட்ட மறையாசிரியர் தேர்வு முடிவுகள்

## மன்னார் மறைமாவட்டத்தில் சித்தியடைந்தோர் விபரம்

வி.சி - விசேடசித்தி
தி.சி - திறமைச்சித்தி
சா.சி - சாதாரணசித்தி

சித்தியடையாதவர்களின் விபரம் இங்கே குறிப்பிடப்படவில்லை. அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ளவும். - இயக்குனர்.

### மறையாசிரியர் தேர்வு – 1, 2006

| சுட்டெண் | பெயர் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| 2006004 | சூசையப்பு றொசானி வாஸ் | தாழ்வுபாடு | தி.சி |
| 2006005 | அன்ரனி யேசுராணி பீரிஸ் | தாழ்வுபாடு | தி.சி |
| 2006006 | சந்தியாகு மேரி சசிகலா பெரேரா | தாழ்வுபாடு | தி.சி. |
| 2006007 | மரியதாஸ் மேரிஜோஸ்லற்றா குருஸ் | தாழ்வுபாடு | சா.சி |
| 2006008 | அ. மேரியன் கிசேலா டயஸ் | தாழ்வுபாடு | சா.சி. |
| 2006013 | யோ. லாசரஸ் வெஜின் லக்சிலா | மன்னார் | தி.சி |
| 2006014 | ஞா. மே.வெலன்ஸ்ரா பெனாண்டோ | மன்னார் | வி.சி |
| 2006015 | அந்தோனி மேரி யூஜினியா றோச் | பள்ளிமுனை | தி.சி |
| 2006017 | சேவியர் மரிய கொறற்றி பிகிறாடோ | பள்ளிமுனை | சா.சி |
| 2006018 | செ. மேரி எவலின்ஸ்ரா றோச் | பள்ளிமுனை | தி.சி. |
| 2006019 | தேவதாசன் மேரி பெலின் றோச் | பள்ளிமுனை | சா.சி |
| 2006021 | ஜே. மே. இமாக்குலேற் பிகிறாடோ | பள்ளிமுனை | தி.சி |
| 2006023 | செபஸ்ரியான் அமல் திரேசா | பள்ளிமுனை | தி.சி |
| 2006025 | பிரான்சீஸ் டொறின் | உயிலங்குளம் | தி.சி |
| 2006029 | சிந்தாத்துரை ஆன் மேரி யூலியற் | வஞ்சியன்குளம் | சா.சி |
| 2006030 | சூ. யூக்கரிஸ்ரா வினோதினி | நானாட்டான் | தி.சி |
| 2006032 | அ. டிலிசியா பிரியதர்சினி | அளவக்கை | தி.சி |
| 2006033 | பிலிப்நேரிஸ் மேரி ஜேயாளினி | அளவக்கை | தி.சி |
| 2006036 | நீ. பிறிஜிற் நிறோஜா | கற்கிடந்தகுளம் | வி.சி |
| 2006038 | ஜெகநாதன் அந்தோனி யஸ்ரின் | கற்கிடந்தகுளம் | தி.சி |
| 2006042 | அல்பிறட் சகாயசீலன் | தேவன்பிட்டி | தி.சி |
| 2006044 | யூலியஸ் அருள் றஜ்சினி | தேவன்பிட்டி | சா.சி |
| 2006045 | செபஸ்தீன் அருள்மேரி | தேவன்பிட்டி | தி.சி. |
| 2006048 | பிரேமதாசா சுதர்சினி | விடத்தல்தீவு | சா.சி |
| 2006057 | தேவராஜா மொறிற்றா | பம்பைமடு | தி.சி |
| 2006064 | செபஸ்ரியான் வேர்ஜினி றோச் | கோமரசன்குளம் | வி.சி |
| 2006065 | சுப்ரமணியம் அகல்யா | கோமரசன்குளம் | சா.சி |
| 2006067 | அருளானந்தம் ஷிறோமி | கோமரசன்குளம் | வி.சி |
| 2006068 | வரதன் பியூட்டி குயின் | கோமரசன்குளம் | சா.சி |

### மறையாசிரியர் தேர்வு – 3, 2006

| சுட்டெண் | பெயர் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| 20631155 | திருமதி. கி. கிறிசாந்தினி லியோன் | தலைமன்னார் | சித்தி |
| 20631156 | திருமதி.நி.மே.டென்சி பெணாண்டோ | தலைமன்னார் | சித்தி |
| 20631157 | சி. ஆரோக்கிய ஜென்சி குரூஸ் | தலைமன்னார் | சித்தி |
| 20631158 | கீ. லூட்ஸ் அன்னமேரி கூஞ்ஞ | தலைமன்னார் | சித்தி |
| 20631160 | அல்பேட் வில்டா மேரி சிராய்வா | பேசாலை | சித்தி |
| 20631161 | திரு. அ.றெமிஜியஸ் சிறாய்வா | பேசாலை | சித்தி |
| 20631163 | இம்மானுவேல் டக்ஷினி | மன்னார் | சித்தி |
| 20631165 | ஜே. வியூறிதா லூயிஸ் | மன்னார் | சித்தி |
| 20631168 | அன்ரனி மியூறின் டயானா | மன்னார் | சித்தி |
| 20631169 | அன்ரனிப்பிள்ளை பமிலா தர்சினி | மன்னார் | சித்தி |
| 20631170 | ராஜசிங்கம் பபியோலா | மன்னார் | சித்தி |
| 20631172 | றெஜிஸ் மேரி எட்வீசியா றோச் | பள்ளிமுனை | சித்தி |
| 20631174 | கிறிஸ்ரிநாதன் அன்ரனற் யாழினி | உயிலங்குளம் | சித்தி |
| 20631175 | செபஸ்தியாம்பிள்ளை அனிஷா | உயிலங்குளம் | சித்தி |
| 20631176 | சாமுவேல் றெஜினோல்டா | உயிலங்குளம் | சித்தி |
| 20631178 | வ. ஜெஸ்மின் ராஜேஸ் | உயிலங்குளம் | சித்தி |
| 20631179 | யோசேப்பு சந்தியாகோ மரியா | வஞ்சியன்குளம் | சித்தி |
| 20631180 | சீமான் டொறின் ஷிபா | வஞ்சியன்குளம் | சித்தி |
| 20631181 | அந்தோனிமுத்து சுபாஜினி | வஞ்சியன்குளம் | சித்தி |
| 20631184 | மனுவேல் மேசி யசிந்தா | வஞ்சியன்குளம் | சித்தி |
| 20631185 | திருஞானதீபன் அன்ரனிற்றா | வஞ்சியன்குளம் | சித்தி |
| 20631187 | செ. விஜய லலிதா | அளவக்கை | சித்தி |
| 20631188 | பிலிப்நேரிஸ் நிருசா | அளவக்கை | சித்தி |
| 20631190 | அருளப்பு ஷறோமி | கற்கிடந்தகுளம் | சித்தி |
| 20631192 | கிறிஸ்ரோப்பர் சகாயரானி | அரிப்பு | சித்தி |
| 20631194 | இன்னாசிமுத்து றீற்றா | தேவன்பிட்டி | சித்தி |
| 20631195 | அந்திரேஸ் இனற் றொசானி | அடம்பன் | சித்தி |
| 20631196 | முருகேஸ் தனமோகன் | அடம்பன் | சித்தி |
| 20631199 | சிமியோன் மேரி காஞ்சனா | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20631200 | ச.சாமிநாதன் அருந்ததி | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20631201 | சலமோன் சதா லோஜினி | ஆட்காட்டிவெளி | சித்தி |
| 20631202 | அருட்சகோ.செ.இ.மரிஸ்ரெலா றோச் | மடு | சித்தி |
| 20631204 | அருட்சகோதரி. சு. கிருபதர்சினி | பண்டிவிரிச்சான் | சித்தி |
| 20631206 | அல்பிறட் அமல்ராஜ் | செட்டிகுளம் | சித்தி |
| 20631207 | பத்மநாதன் கிறிஸ்ரின் பிறேமினி | செட்டிகுளம் | சித்தி |
| 20631212 | மரியாம்பிள்ளை இமல்டா வதனி | வவுனியா | சித்தி |
| 20631213 | கீதபொன்கலன் சந்திரவதனா | வவுனியா | சித்தி |
| 20631215 | அற்புததாசன் வினித்தா | வவுனியா | சித்தி |
| 20631216 | சீமோன் மெடோனா | வவுனியா | சித்தி |

### மறையாசிரியர் தேர்வு – 2, 2006

| சுட்டெண் | பெயர் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| 20621191 | ஜே.இமாக்குலேட் லியோன் | தலைமன்னார் | சா.சி |
| 20621192 | திருமதி. செ.லுமினா கூஞ்ஞ | தலைமன்னார் | தி.சி |
| 20621194 | விக்ரர் வினோதினி பீரிஸ் | பேசாலை | வி.சி |
| 20621195 | கிறிஸ்ரீன் டெனோறின் குரூஸ் | பேசாலை | தி.சி |
| 20621196 | சலமோன் டார்வின் குரூஸ் | பேசாலை | வி.சி |
| 20621201 | செ. மேரி ஜென்சி குரூஸ் | தாழ்வுபாடு | வி.சி |
| 20621203 | தியாகராஜா தவபாலன் | மன்னார் | தி.சி |
| 20621204 | அ. அன்னை ஜோசப் | மன்னார் | சா.சி |
| 20621206 | பிரான்சீஸ் றேக்கா | மன்னார் | வி.சி |
| 20621207 | ஞானசேகரம் சோனியா | மன்னார் | தி.சி |
| 20621208 | வெற்றிவேல் சசிகலா | மன்னார் | வி.சி |
| 20621212 | சூசைதாசன் மேரி பஸ்ரியன் | மன்னார் | சா.சி |
| 20621215 | அந்தோனி தேவ மனோகரி | மன்னார் | வி.சி |
| 20621216 | சந்தியோகு மேரி றோஸ் | மன்னார் | தி.சி |
| 20621217 | யேசுதாசன் மேரி லக்ஷி பெரேரா | பள்ளிமுனை | வி.சி |
| 20621218 | தே. யூ.கொண்செப்ரா பிகிறாடோ | பள்ளிமுனை | தி.சி |
| 20621219 | ச.ஸ்ரெலா பிறேமினா பிகிறாடோ | பள்ளிமுனை | வி.சி |
| 20621220 | மெ. ஜே. தஸ்நேவிஸ் விதானகே | பள்ளிமுனை | தி.சி |
| 20621222 | திருமதி. ஜோ.ஸ். மேரி திரேசிற்றா | பள்ளிமுனை | வி.சி |
| 20621223 | கில்லறி பஸ்ரினா குரூஸ் | வங்காலை | வி.சி |
| 20621224 | லீயோ கரோலின் தாரணி வாஸ் | வங்காலை | தி.சி |
| 20621226 | ஞானப்பிரகாசம் ஜெயகலா | உயிலங்குளம் | தி.சி |
| 20621227 | யோகநாதன் ஜெய சுகந்தன் | உயிலங்குளம் | சா.சி |
| 20621229 | அதிரியாம்பிள்ளை ஸிறோமி | உயிலங்குளம் | தி.சி |
| 20621232 | ச. க. அன்னம்மா கொடுதோர் | உயிலங்குளம் | தி.சி |
| 20621233 | செபஸ்ரியான் றொஜாந்தன் | உயிலங்குளம் | சா.சி |
| 20621234 | சந்தியோகு சிறின்ரன் | உயிலங்குளம் | சா.சி |
| 20621235 | ஜெகநாதன் வசந்த கோகிலா | உயிலங்குளம் | சா.சி |
| 20621236 | தேவதாசன் றுபீனா | வஞ்சியன்குளம் | தி.சி |
| 20621237 | மாதடிமை மேரி பிரான்சிஸ்கா | வஞ்சியன்குளம் | தி.சி |
| 20621238 | அருளப்பு சகாயராணி | வஞ்சியன்குளம் | தி.சி |
| 20621239 | அருளப்பு சகாயமேரி | வஞ்சியன்குளம் | தி.சி |
| 20621243 | செபமாலை பிரிய தர்சினி | வஞ்சியங்குளம் | சா.சி |
| 20621244 | செ. மேரி வெனிற்றா | அளவக்கை | தி.சி |
| 20621246 | வி. ஜெனற் பிரசன்னா றோஸ் | அளவக்கை | தி.சி |
| 20621248 | மிக்கேல் பிலிப் ஆன் சுஷாந்தினி | முருங்கன் | தி.சி |
| 20621249 | திருனாவுக்கரசு கலைவாணி | முருங்கன் | சா.சி |
| 20621250 | நேசராசா மெரின் ஜஸ்மிலா | முருங்கன் | சா.சி |
| 20621253 | சிந்தாத்துரை மேரி எமல்டா | கற்கிடந்தகுளம் | தி.சி |
| 20621254 | கெ. கொயின் இமல்டா | கற்கிடந்தகுளம் | தி.சி |
| 20621255 | பேரின்பராசா அனற் டயானா | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 20621256 | அந்தோனி விமல்டா | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 20621257 | மரியநாயகம் மரிய கொலின் | கற்கிடந்தகுளம் | சா.சி |
| 20621258 | அல்பிறட் கிறிசுதா குரூஸ் | அரிப்பு | சா.சி |
| 20621259 | ம. மேரி யூக்கலிஸ்ரா குரூஸ் | அரிப்பு | தி.சி |
| 20621261 | திருமதி. ச. புஸ்பமலர் | தேவன்பிட்டி | சா.சி |
| 20621263 | சுதேஸ் மேரி கியூஜின் | விடத்தல்தீவு | தி.சி |
| 20621264 | அமிர்தநாதன் இதயமலர் | விடத்தல்தீவு | சா.சி |
| 20621266 | யோசேப்பு றஜேந்தினி | அடம்பன் | வி.சி |
| 20621267 | சந்தியோகு சுதாஜினி | அடம்பன் | சா.சி |
| 20621269 | சல்வதோர் ஜெனிற்றா | அடம்பன் | தி.சி |
| 20621270 | பத்திநாதன் பெனடிற்றா | அடம்பன் | சா.சி |
| 20621271 | யேக்கப் டிலிஷா டயானா | ஆட்காட்டிவெளி | வி.சி |
| 20621272 | எட்மன் மனோராஜா கிளமென்ரா | ஆட்காட்டிவெளி | சா.சி |
| 20621273 | யோ. இஸ்சபெல் அனிற்றா | ஆட்காட்டிவெளி | தி.சி |
| 20621274 | ஸ்ரனிஸ்லாஸ் ஸ்ரெலா மேரி | ஆட்காட்டிவெளி | வி.சி |
| 20621278 | மரியந்தோனி கிறிஸ்ரினா சில்வா | பண்டிவிரிச்சான் | தி.சி |
| 20621279 | ம. ஆன் சிந்துஜா சில்வா | பண்டிவிரிச்சான் | தி.சி |
| 20621281 | சுப்பையா சித்திரா | பண்டிவிரிச்சான் | வி.சி |
| 20621288 | கிறிசாந்து பிறீடா ஆன் ஜெயசீலி | செட்டிகுளம் | சா.சி |
| 20621289 | லாசரஸ் எலிசபேத் கிளேபீபீ | செட்டிகுளம் | சா.சி |
| 20621290 | ஏகாம்பரம் கவிதாஞ்சலி | செட்டிகுளம் | சா.சி |
| 20621293 | மரியநாயகம் அன்சில்லா றஜனி | பம்பைமடு | சா.சி |
| 20621297 | செபஸ்ரியான்பிள்ளை சுதாஜினி | பம்பைமடு | சா.சி |
| 20621298 | வே.கிறிஸ்ரியனா லியோகாடியா | பம்பைமடு | தி.சி |
| 20621299 | சேனாதிராசா ஹேமா | பம்பைமடு | சா.சி |
| 20621300 | அருட்செல்வி. பாமினி பெனடிக்ற் | பம்பைமடு | தி.சி |
| 20621301 | சேவியர் றொக்சி | கோமரசன்குளம் | சா.சி |
| 20621302 | லாசறஸ் நிறஞ்சலா | கோமரசன்குளம் | தி.சி |
| 20621303 | அ. அருள் நிஷாந்தினி | கோமரசன்குளம் | தி.சி |
| 20221304 | தேவேந்திரன் லீமா றம்யா | வவுனியா | சா.சி |
| | அருட்சகோ.எல்சி யோண் பொஸ்கோ | வவுனியா | சாசி |

2006ல் மறையாசிரியர் தேர்வு 3ன் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுடைய பெறுபேறுகள் மேலே தரப்பட்டுள்ளன. இவர்களுக்கு இத்தேர்வின் அடுத்த நிலையான ஆய்வுக்கட்டுரை எழுதுவதற்கான விபரம் அடங்கிய கடிதங்கள் விரைவில் தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் அனுப்பிவைக்கப்படும்.

மறையாசிரியர் தேர்வில் பங்கேற்ற அனைவருக்கும் மற்றும் சித்திபெற்றோருக்கும் எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றோம். மறையாசிரியர்களே, இத்தேர்வானது உங்கள் பணி வாழ்வை இன்னும் ஆழப்படுத்துவதாகவும், செழுமைப்படுத்துவதாகவும் அமைய வேண்டுமென ஆசிக்கின்றோம்.

### சிறந்த அதிபருக்கான விருதைப் பெறும்

# அருட்சகோதரி சிசிலியா



மன்/ சென் மேரிஸ் பெண்கள் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிசிலியா (தி. கு) அவர்கள் மன்னார் மாவட்டத்தின் 2006ம் ஆண்டிற்கான சிறந்த அதிபராக மன்னார் கல்வி வலயத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் இதற்கான விருதை 06.10.2006 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வின்போது ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியிடமிருந்து பெற்றுக்கொண்டார். இவர் இத்தகைய விருதைப்பெற்றதை எண்ணிப் பேசாலைச் சமூகம் பேருவகை கொள்கின்றது.

அருட்சகோதரி சிசிலியா சென். மேரிஸ் பெண்கள் பாடசாலையைப் பொறுப்பேற்ற வேளை அது. 7ம் வகுப்புவரை மாணவரைக்கொண்டிருந்த ஒரு சிறிய பாடசாலையாகவே இப்பாடசாலை இருந்தது. ஆனால் இவர் பொறுப்பேற்ற ஓரிரு வருடங்களிலேயே படிப்படியாக ஒவ்வொரு வகுப்பாக ஆரம்பித்து இன்று உயர்தரம் வரை இயங்குகின்றது என்றால் அதற்குக் காரணம் இவரது விடாமுயற்சியும், நிர்வாகத்திறனுமே ஆகும்.

இற்றைக்கு 11 ஆண்டுகளின் முன்னர் இவர் தனது கல்வி நிர்வாகத்தை ஒரு சிறிய கட்டடத்திலேயே ஆரம்பித்தார். ஆனால் இவரது அயராத முயற்சியும், கல்வி அதிகாரிகளினதும், பாடசாலைச் சமூகம் மற்றும் ஊர் மக்களது ஒத்துழைப்பும் இணைந்து மாடிக்கட்டடங்கள், சிறந்த வெளியரங்கு, பாடசாலைச் சுற்றுமதில் ஆகியவை எழக் காரணிகளாய் அமைந்தன.

மற்றும் பற்பல கல்விச்சாதனைகளும் இப்பாடசாலையில் இடம்பெற்றுள்ளன. 5ம் ஆண்டு புலமைப்பரிசில், O/L, A/L பரீட்சைகளில் மாணவிகள் பெற்றுவரும் பெறுபேறுகள், மற்றும் விளையாட்டு, பாடல், நாடகம், மறையறிவுப் போட்டிகள் போன்றவற்றில் மாணவிகள் காட்டி நிற்கும் திறமைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். வெறும் சாதனைகளை மட்டும் வைத்துக் கல்வி வளர்ச்சியைக் கணிப்பது இவரது கொள்கையல்ல, மாறாகப் பாடசாலைச் சமூகத்தின் முழு ஆளுமை வளர்ச்சியையும் இவர் எப்போதும் கருத்திற்கொண்டு செயற்படுபவர்.

அருட்சகோதரி அவர்களைப் பேசாலைச் சமூகத்தின் விடிவெள்ளி என்று கூறலாம். அன்புடனும் பண்புடனும் இறை பக்தியுடனும், சீரிய கல்வியை மாணவச் செல்வங்களுக்கு ஊட்டிவரும் எம் அன்னை, எளிமையான வாழ்வாலும், பண்பான வார்த்தைகளாலும், எமது உள்ளத்தைத் தொட்ட தியாக தீபம். எமது பாடசாலைச் சமூகத்தின் ஆணிவேர்; தலைநிமிர்ந்த எம் பள்ளியின் கிரீடம்.

பள்ளி மாணவர்களையும், ஆசிரியர்களையும் தம் உயிராக நினைக்கும் அதிபர் அவர்கள் எம் தாய்க்கு நிகரானவர். கருணையும், கண்டிப்பும் கொண்ட எம் அதிபர் பல வார்த்தைகளினால் அல்ல, மாறாக ஒரு பார்வையினால் மாணவர்களைத் திருத்தும் திறன்தான் என்ன?

இவர் பாடசாலை நிர்வாகத்தை நடத்தும் திறன், விரைவாகத் தீர்மானங்களை எடுக்கும் விவேகம், நேரக்கிரமமாகக் கடமையாற்றும் பழக்கம் - இவை மட்டுமன்று, கல்விக் கூடத்தையே "நம்பிக்கையானதொரு குடும்பமாக" மதித்து, வேலைகளைப் பகிர்ந்தளித்து, ஆசிரியர் மாணவர் மத்தியில் வளர்த்துக்கொண்டுவரும் "பரஸ்பரத் தொடர்புகள்" அவரது நிர்வாகச் சிறப்பம்சங்களாகும்.

இவர் பேசுவதில் சிக்கனம் உள்ளவர். செயல்புரிவதில் துரிதமானவர். எவர் மனதையும் புண்படுத்தாதவர். எவரும் எவ்வேளையிலும் அதாவது பாடசாலை வேளையில் அலுவலகத்திலும், ஏனைய நேரங்களில் மடம் அன்றேல் ஆலய வளவிலும் சந்தித்து எதனைப் பற்றியும், எவ்வித தயக்கமுமின்றி உரையாட முடியும்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்ற எவ்வித பாகுபாடும் காட்டாதவர். ஒரு சிறுபிள்ளைகூட எவ்வித பயமுமின்றி அவருடன் உரையாடும். ஆம், இவர் ஓர் எளிமையான, இனிமையான நிர்வாகி.

பேசாலைச் சமூகத்திற்கு இவர் ஆற்றிவரும் சேவை அளப்பரியது. இன்று எம் அதிபர் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி எம் பேசாலைச் சமூகத்தின் வெற்றி. எம் இனிய அதிபரால் நாம் பெருமை பெறுகின்றோம்.

எம் அதிபர் அவர்கள் நிறைந்த சுகபெலத்துடன் தன் சேவைக்காலம் முழுவதும் எம் பங்கில் சேவையாற்ற வல்ல தேவனை வேண்டி நிற்கின்றோம்.

*பாடசாலைச் சமூகம், பேசாலை*

# பெரியப்பா பதில்கள்




**கேள்வி : இன்றைய குழந்தைகள் பெற்றோர்களை மதிக்கின்றார்கள் இல்லையே?** - *மரிய செபஸ்ரி, அடம்பன்*

பதில் : பெற்றோர்கள் தங்களுக்குச் சிறந்த நண்பர்களாக இருக்க வேண்டும் என்றுதான் இன்றைய குழந்தைகள் எதிர்பார்க்கின்றார்கள். இப்போதெல்லாம் முரண்டு பிடிப்பது பெற்றோர்கள்தான்.

**கேள்வி : நான் ஒரு பெண்ணை மனதார நேசிக்கிறேன். ஆனால் என் காதலை எப்படி வெளிப்படுத்துவதென்று தெரியவில்லை. அவர்கள் வீட்டில் என்மேல் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள் பெரியப்பாவின் ஆலோசனை தேவை?** - *முகிலன், முருங்கன்..*

பதில் : மன்னிக்கவும், காதல் விஷயத்திலெல்லாம் .நான் ஆலோசனை கொடுப்பதில்லை. அப்படியே நான் ஆலோசனை கொடுக்கப்போய், அதனால் உங்களுக்கு தர்ம அடி ஏதாவது விழுந்தால் யார் பொறுப்பேற்பது? எனவே மன்னிக்கவும்.

**கேள்வி : பெரியப்பா, உலக அழகிப் போட்டி முதலில் எப்போது ஆரம்பித்தது?** - *அழகன், உயிலங்குளம்.*

பதில் : உலகில் முதல் இரண்டு பெண்கள் தோன்றியவுடன்!

**கேள்வி : 'இலவசம்' 'இனாம்' என்றால் என் நண்பன் தலை கால் தெரியாமல் ஓடுகின்றான். ஆனால் எனக்கோ ஓசி என்றால் ஏனோ பிடிப்பதில்லை?**

- *செபஸ்தியான் மரியவளன், மன்னார்.*

பதில் : நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் 'இலவசம்' என்று உலகில் எதுவுமே கிடையாது. அது ஒரு மாயை, பொய், ஏமாற்றுவேலை! There is no free lunch in the world - இது அமெரிக்கப் பொன்மொழி.

புதிய வான் (Van) ஒன்றைக் கொள்வனவு செய்யச் சென்ற என் நண்பர்கள் ஐந்து பேர் தாங்கள் வான் வாங்கச் சென்ற இடத்தில் அந்தக் கொம்பனி முதலாளி 'இலவசமாக' ஐந்து நட்சத்திர விடுதியில் (Hotel) மதிய உணவு தந்ததாக சந்தோஷமாகக் கூறினார்கள். நான் சொன்னேன், "நீங்கள் உங்கள் வாகனத்திற்குக் கொடுத்த காசில் உங்கள் சாப்பாட்டிற்குரிய காசையும் கொடுத்துவிட்டீர்கள்" என்று - எல்லா 'இலவச'ங்களும் இப்படித்தான்.

**கேள்வி : இன்றளவும் உங்களுக்கு பிடிபடாத விஷயம் ஏதாவது உண்டா?** - *தெய்வீந்திரன், பேசாலை.*

பதில் : பள்ளியிலும் கல்லூரியிலும் ஆசிரியர் எந்தக் கேள்வி கேட்டாலும் திருதிருவென்று விழித்துவிட்டு, இப்போது வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் - கொண்டிருக்கிறேனே .... அதுதான்!

**கே : பெரியப்பா, தத்துவ முத்துக்கள் சிலவற்றை எடுத்துவிடுங்கள்?** - *தாமரையான், வவுனியா.*

ப : "கடவுள்மேல் நம்பிக்கை வையுங்கள் உங்கள் எல்லாக் கனவுகளும் நனவாகும்."

"உங்களுக்கு சாவே இல்லை என்கிற எண்ணத்தை நெஞ்சில்



ஏற்றிக்கொள்ளுங்கள். நாளையே சாகப் போகிறீர்கள் என்பதாய் வாழுங்கள்" இப்படிச் சொல்வது ஏதோ முனிவர்களோ, ரிஷிகளோ அல்ல. வண்ண வண்ண உடைகளில், சின்னச் சின்ன மயில்களாக - ஒயிலாக நடந்துவரும் அழகிப் போட்டியில் பங்கெடுத்தவர்கள் உதிர்த்த தத்துவங்கள் இவை!

**கேள்வி : இன்று நமது வீடுகளில் முதியவர்களின் நிலை எப்படி இருக்கின்றது பெரியப்பா?**

- *ஈழவளன், தலைமன்னார்.*

பதில் : "திண்ணையில் வசித்த தாத்தா
வீட்டுக்குள் வந்தார்
புகைப்படமாக".

என்ற கவிதையைப் போன்று உள்ளது.

**கேள்வி : பெரியப்பா, சிறையில் வாழும் கைதிகளைப் பற்றி நினைத்து அடிக்கடி கவலைப்படுவேன்... நீங்கள்?**

- *தேசாபிமானி, உயிலங்குளம்.*

பதில்: உண்மைதான்..... நாம் கடந்து செல்லும் வழியில் ஒரு சிறைச்சாலை இருந்தால், என்ன உணர்கிறோம்? பல சமயங்களில் நாம் அதை ஒரு கட்டடமாக நினைத்துக் கடந்து விடுகின்றோம். ஆனால் அந்தக் கட்டடத்திற்குள் எத்தனை விதமான குற்றவாளிகள் ...... எத்தனை விதமான உணர்வுகள் ......... அந்த மனிதனின் உண்மைக் கதைகள்......... இப்படியெல்லாம் நானும் சிந்திப்பதுண்டு.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 5ம் ஆண்டு நினைவு

மலர்வு 23 - 05 - 1995



உதிர்வு 27 - 02 - 2002

**இ. வெ. ஜாண்சன்**
**(அச்சங்குளம், நானாட்டான்)**

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாதய்யா எம் துயரம்.
அன்னை நான் உன்னை எண்ணி
ஆறாத்துயரம் கொண்டேன்.
ஆண்டவர் சித்தமென்று
மனஅமைதி கொண்ட நாம்
நீ நிலைவாழ்வு பெற்றிட
வேண்டுகின்றோம் இறைவனை.

**இவரின் பிரிவால் துயருறும்,**
**அப்பா, அம்மா, அண்ணாமார்,**
**உற்றார், உறவினர்.**

## 20ம் ஆண்டு நினைவு

மலர்வு 16 - 06 - 1963



உதிர்வு 04 - 02 - 1987

**பேதிரு அன்ரன் சேவியர்**
**(முருங்கன் பிட்டி, முருங்கன்)**

நீதிக்காகக் குரல் கொடுக்கப் புறப்பட்ட
உனது இலட்சியப் பயணம்
பாதியில் முடிந்தது. அன்றொருநாள்
அலை கடலுக்கு அப்பாலிருந்து
காற்றில் கலந்து வந்த உனது
பிரிவுத்துயரம் தோய்ந்த செய்தியை
நாங்கள் கேட்டு பத்தொன்பது
வருடங்கள் உருண்டோடிவிட்டன.
ஆனாலும் - அன்பின் உருவே! நீ
"நீதியின் சூரியனின் வெளிச்சத்தில்
நித்திய மகிமை பெற்றிருப்பாய்" - என
நாங்கள் ஆறுதல் அடைகின்றோம்.

**என்றும் உனது நினைவில் வாழும்,**
**அன்புப் பெற்றோர், சகோதரர்கள்,**
**உறவினர், நண்பர்கள்.**

## 1ம் ஆண்டு நினைவு



**ரோசாயில் மரியதாஸ் மரியதாஸ் அந்தோனியம்மா**
**(பள்ளிமுனை, மன்னார்)**

மலர்வு: 1933.06.04
உதிர்வு: 2005.12.16


மலர்வு: 1940.03.28
உதிர்வு: 2006.02.25

*பெற்று வளர்த்து பெருவாழ்வு வாழ வைத்த பெற்றோரே!*
*யேசுவின் இல்லத்தில் இளைப்பாறும் நீங்கள் எமக்காய் மன்றாடுவீர்.*
*என்றும் மறவாது உங்கள் நினைவுகளை இதயங்களில் தாங்கியிருப்போம .*

*இவர்களின் பிரிவால் துயருறும்,*
அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நீங்காத நினைவுகள்

மலர்வு 04 - 08 - 1901
உதிர்வு 01 - 05 - 1994



மலர்வு
உதிர்வு 27 - 02 - 1996

**ம. இராசையா லெம்பேட் - சாராள் சோசை (வங்காலை)**

இராசையா லெம்பேட் என்ற பெயரில் ஐயா, இராச - ஐயாவாக வாழ்ந்த காலங்களை நாம் மறக்க முடியாது. வங்காலையின் பத்திமா கெபி உங்கள் வரலாறு சொல்லும். ஆலயப் பரிபாலன சபை உறுப்பினராக, கிராம சேவை புரியும் சமூகத் தொண்டனாக, பக்திச் சபைகளின் பங்காளராக, சிறந்த விவசாயியாக, கடல்வளம் கரைவளம் நிறைந்த செல்வச் சீமானாக, மாதாவின் பக்தனாக விசுவாசத்தின் வித்தாக, இருமலர்களை திருச்சபைக்கு அர்ப்பணித்த ஐயா, உங்கள் நினைவுகளில் என்றும் வாழுகின்றோம்.

அம்மா, அன்பான அம்மா, அழகான அம்மா, பண்பும் பாசமும் தியாகமும் எல்லாம் உங்கள் மக்களுக்காய் வாழ்ந்து காட்டினீர்களே, உங்களின் 11வது ஆண்டு நிறைவில் நினைவுகூரும் உம் மக்களுக்காய் வேண்டிடுவீர்.

*திருமதி ம. அன்னம்மா குரூஸ் குடும்பத்தினர் (இளைப்பாறிய ஆசிரியை), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். அருட்சகோதரி இனிக்கா (திருச்சிலுவைக் கன்னியர்), அருட்சகோதரி - அமரர் யூவ்றேசியா (திருக்குடும்ப கன்னியர்)*

## 6ம் ஆண்டு நினைவு

மலர்வு 23 - 09 - 1965



உதிர்வு 21 - 02 - 2001

**திருமதி. நேசன் நேசமலர்**
**(வங்காலை - 8)**

அன்புத் தீபமாய் சுடர்விட்டாய். எம் வாழ்வுதனில் ஆசைக் கிளியாய் பேசி மகிழ்ந்தாய். அந்நாட்களில் இசைக் குயிலாய் கானம் இசைத்தாய். இனிதாக ஈன்றவர் சொற்படி எளிதாக வாழ்ந்தாய். இகமதில் உம்மையும் எம்மையும் பிரித்தவர் யார்தானோ?

வீணையம்மா நீ எனக்கு. மீட்டும் விரல் நான் உமக்கு. துய்யதொரு இசை அரசியை உலகிற்கு உவந்தளித்து இல்லறப் பயணத்தை இனிதே நிறைவு செய்து இறைவனின் திருப்பாதம் இணைந்து விட்டீரோ? *பிரிவால் துயருறும்*

*கணவன்: நேசன் பீரிஸ், மகள் ஆன் கிஷானி பீரிஸ், வங்காலை - 8.*

## 6ம் ஆண்டு நினைவு

மலர்வு 19 - 04 - 1917



உதிர்வு 05 - 02 - 2001

**செ. அந்தோனி பீரிஸ்**
**(சங்கிஸ்தாம் - வங்காலை)**

கள்ளம் இல்லா இதயம்கொண்டு காசினியில் வாழ்ந்தீர்கள். எல்லாம் இறை செயலென இனிதே உரைத்தீர்கள். வெள்ளமாக இசை எழுப்பி ஆண்டவனைத் துதித்தீர்கள். வல்லபரன் வான் சிறக்க வாஞ்சையுடன் அழைத்திட்டார்.

இல்லறமாம் நல்லறத்தை சிரமேற் கொண்டீர்கள். பழுதில்லா பாசத்துடன் எம்மை நீங்கள் வளர்த்தீர்கள். கண்ணியமாக வாழக் கற்றுத் தந்தீர்கள் கலைவேந்தனாய் வாழ்ந்து சென்றீர்கள்.

*பிரிவால் துயருறும்,*
*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,*
*அருட்சகோதரி செபமாலை*
*(இரட்சகர் சபை) வங்காலை 8.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 58

## 2 அரசர்கள் - அதிகாரம் 13 - 25

உங்கள் விடைகளை 10. 03. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | 02 | ✡ | | | | 03 |
| | | ✡ | | | | 04 | | | ✡ | |
| | | | 05 | | | | | | 06 | |
| | | ✡ | | | 07 | | | | | |
| | 08 | | | 09 | | | | ✡ | | |
| | 10 | | | | | | | 11 | | |
| | | | 12 | | | | 13 | | | |
| 14 | | | | | 15 | 16 | | | 17 | ✡ |
| | 18 | | | | | | | | | |
| | 19 | | | ✡ | | | | ✡ | | |
| 20 | | | | | 21 | | | | | 22 |

### இடமிருந்து வலம்

1. எசேக்கியா தூதரின் கையிலிருந்த மடலை வாங்கி வாசித்தபின் கோவிலினுள் சென்று ஆண்டவர் திருமுன் மடலை ...................... வைத்தார்.
4. ஆனால் யோவாசு ஆண்டவரின் .................ப் பார்வையை நாட ஆண்டவரும் அவனுக்குச் செவிசாய்த்தார்.
7. ஒசேயா அவனுக்கு அடிபணிந்து ...................... செலுத்தி வந்தான்.
8. அவன் மூன்றுமுறை ....................விட்டு நிறுத்தினான். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
9. எனவே எனது உரிமைச்சொத்தில் எஞ்சியிருப்போரைக் ...................... அவர்களின் பகைவரிடம் ஒப்படைப்பேன்.
10. ஆகாசு தன் மூதாதையரோடு ........................ கொண்டு தாவீதின் நகரில் அடக்கம்செய்யப்பட்டான்.
18: ஆண்டவரின் வார்த்தையாக நீர் கூறியது நல்..................
19. இவ்வுடன்படிக்கை நூலில் எழுதப்பட்டுள்ளதுபோல் உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் ................ கொண்டாடுங்கள்.
20. நீ அவர்களுடைய ...................... மேடுகளையும், பலிப்பீடங்களையும் அழிக்கவில்லையா?

### மேலிருந்து கீழ்

01) இவ்வாண்டு தானாக..................... நீ உண்பாய்.
02) ஏனெனில் மனாசே அவர்களை வழிதவறி.................ச் செய்தான்.
03) அவனுடைய அன்றாடத் ................. அவன் வாழ்நாள் முழுவதும் மன்னனால் அவனுக்கு ஒவ்வொரு நாளும் செலவுப்படி வழங்கப்பட்டு வந்தது.
05) ஆனால் லெபனோனின் விலங்கு ஒன்று அவ்வழியே .................. நெருஞ்சிச் செடியை மிதித்துப்போட்டதாம்.
06) பெற்றோரின் பாவத்துக்காகப் .................. கொல்லப்படலாகாது.
09) அசீரிய மன்னன் அதற்கு இணங்கி தமஸ்குவைக் ................ அதன் குடிமக்களைக் கீருக்கு நாடு கடத்தினான்.
11) போர் வீரர் அனைவரும் அரசபூங்காவின் இரு மதில்களுக்கு இடையே அமைந்த வாயில் ................. அராபாவை நோக்கி இரவில் ஓடினர்.
13) பாபிலோனிய மன்னன் செதேக்கியாவின் புதல்வர்களை அவனது கண்முன்னே ....................
16) அவன் மூதாதையருடன் தாவீதின் .................அடக்கம் செய்யப்பட்டான்.
17) எலிசா அவனை நோக்கி .................யும் அம்புகளையும் எடுத்துக்கொள் என்றார்.

### வலமிருந்து இடம்

03) வானளாவிய கேதுரு மரங்களையும் அங்கு நின்ற உயர்ந்த................ மரங்களையும் வெட்டினேன்.
05) ஏனெனில் அவர்தம் வாழ்நாள்களில் அமைதியும், பாதுகாப்பும் இருந்தால் .................... என்று எண்ணிக்கொண்டிருந்தார்.
06) எனவே அவன் ....................எலிசாவின் கல்லறையில் போட்டுவிட்டு ஓடினான்.
11) உங்கள் தீய...................விட்டுத் திரும்புங்கள்.
12) நாட்டில் ................ .மக்களைத்தவிர எவரையும் விட்டு வைக்கவில்லை.
13) அதாவது ................. சினம் இன்னும் தணியவில்லை.
15) அப்பொழுது அரசன் ஆகாசு சக்கரத்தாங்கிகளைப் பிரித்துக் கொப்பறைகளை அவற்றினின்று..................னான். (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
21) ஏனெனில் இஸ்ராயேல் மக்கள் அன்றுவரை அதற்குத்..............காட்டி வந்தனர்.
22) தங்கள் புதல்வர்ளையும், புதல்வியரையும் .................. பலியிட்டனர்.

### கீழிருந்து மேல்

05) அதற்கு எசேக்கியா "நிழல் பத்துப்பாகை முன்னோக்கிப்..............எளிது" என்றான்.
08) அப்பலிபீடங்களின்மேல் மனித .....................களைச் சுட்டெரித்தபின் அவர் ஜெருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்.
09) மேலும் உன்னையும், இந்நகரையும் அசீரிய மன்னனின்................விடுவிப்பேன்.
14) எனவே ஆண்டவரின் சினம் நமக்கெதிராகச் ..................விட்டெரிகிறது.
18) அவர்கள் சமாரியாவை உரிமையாகக்கொண்டு அதன் நகரங்களில் ...................... வந்தனர்.
20) மேலும் காவல் மாடம் முதல் அரண்சூழ் கோட்டைவரை எல்லா நகர்களிலும் தங்களுக்குத் ....................மேடுகளை அமைத்துக்கொண்டனர்.
21) ஒருவன் உள்ளும் புறமும் தட்டினைத் துடைத்துத்............ யாக்குவதுபோல் நானும் ஜெருசலேமைத் துடைத்துத் தூய்மை - யாக்குவேன்.
22) அவரது காலத்தில் எகிப்து நாட்டின் மன்னன் ..................... என்ற பார்வோன் அசீரிய அரசனை நோக்கிச் செல்கையில் யூப்பிரத்தீசு ஆற்றை வந்தடைந்தான்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 57ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**


## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400

வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)


## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 56ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*

அ. கஜேந்தினி,
15/10 ஈச்சமோட்டை,
கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்

*இரண்டாம் பரிசு*

அ. யோகவதனி,
வெளிக்குளம்,
வவுனியா.

*மூன்றாம் பரிசு*

திருமதி. யசிந்தா ஜோண்,
எழுத்தூர், மன்னார்.

| | |
|---|---|
| விடைகளை எழுதி அனுப்பியவர்கள் | 105 பேர். |
| சரியான விடைகளை எழுதியோர் | 101 பேர். |

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.56ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அ. அமல ஊஸ்வினி குரூஸ், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
2. திருமதி. வசந்தி சத்திய சீலன், எழுத்தூர், மன்னார்.
3. திருமதி பூபதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
4. கமலா கிறிஸ்தோப்பர், சின்னக்கடை, மன்னார்.
5. திரு. ஜோ.ம. லெசில் றொஜர், இல.9/32, பூங்காவீதி, வவுனியா.
6. திருமதி. வசந்தி பேரின்பநாயகம், ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.
7. தே. மேரி லிற்வின் றோச், மன்/புனித லூசியா ம.வி, பள்ளிமுனை.
8. செ. அனுபா, யு. 06, மடுக்கோவில், மடு.
9. ஜெ. கமலேஸ்ரீனா, சென். மேரிஸ் கொஸ்ரல், திருகோணமலை.
10. றெ. யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை.
11. லா. கிறேஸ் ஜொஸ்பின், யுனிட் 5 (29), வாரிக்குட்டியூர், வவுனியா.
12. செ. மேரி அக்னோ டயஸ், எமில் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
13. பி. ஜெ. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
14. அ. நியூலன் குரூஸ், 100 வீட்டுத்திட்டம், வங்காலை.
15. எஸ். எஸ். காஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
16. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
17. க. பொலின், எழுத்தூர், மன்னார்.
18. ஜெ. சுபா குரூஸ், தரம் 11 ஏ, 4ம் வட்டாரம், பேசாலை.
19. செ. யோதினி, இல. ஏ. 06, மடுக்கோயில், மடு.
20. சூ. மெஜலா, தரம் - 09, சவேரியார் புரம், சிலாவத்துறை.
21. நற்குணம் தர்சிக்கா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
22. ஆர். றூபி, சுண்டிக்குளி, முருங்கன்.
23. ஆர். அருண்பிரசாத் லெம்பேட், 100 வீட்டுத்திட்டம், வங்காலை.
24. ந. ஜெகப்பிரியன், புதுக்கமம், உயிலங்குளம்.
25. என். சி. ஜெக ஜீவன் றோச், புனித லூசியா ம.வி., பள்ளிமுனை.
26. சில்வேஸ்ரர் பற்றிசியா, பிரான்ஸ்.
27. பி. துசிதா விமலினி, திருக்குடும்பகன்னியர் மடம், மன்னார்.
28. ம. லடிஸ் மேரி, குமானாயங்குளம், ஆண்டாங்குளம்.
29. அ. பிருந்தா வீர்ஜினி டயஸ், 100 வீட்டுத்திட்டம், வங்காலை.
30. யோ. சுவா, மாதிரிக்கிராமம், வங்காலை.
31. ப. கம்சிகா, திருக்குடும்ப கன்னியர் மடம், பெரிய பண்டிவிரிச்சான்.
32. ம. கெவின் அன்ஸ்கர், பொன்தீவுகண்டல், முருங்கன்.
33. ம. ஆன் கிஷோ சக்சி, புனித மரியாள் விடுதி, திருகோணமலை.
34. ம. லியோணி, மாவிலங்கேணி, முருங்கன்.
35. செ. சிறோமி, 8ம் வட்டாரம், பேசாலை.
36. ம. சாவினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
37. ச. நிவேதனா, சாளம்பன், ஆண்டாங்குளம்.
38. அ. வில்மட் நிவேதன்(தீபன்), நறுவிலிக்குளம், (திருகுபுரி), வங்காலை.
39. ச. ஜெனற் அனுஷியா, மன்/ ஆண்டாங்குளம், றோ.க.த.க. வித்.
40. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
41. எஸ். கீதா, நறுவிலிக்குளம், (திருகுபுரி), வங்காலை.
42. யே. மயூரினி பெனான்டோ, 9ம் வட்டாரம், வங்காலை.
43. சீ. சுதர்சினி, தரம் - 13, மருதமடு, முருங்கன்.
44. அ. ஜெனித்தா, திருக்குடும்பகன்னியர்மடம், இறம்பைக்குளம்.
45. ஆ. மேரி, வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி, மன்னார்.
46. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
47. அ. கரோலின் கீர்த்திக்கா, 70 பேராலயவீதி, திருகோணமலை.
48. எஸ். சத்தியப் பிரியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
49. பி. றெமூந்துப்பிள்ளை, கங்காணிதீவு, நானாட்டான்.
50. லீ. டெய்சி, புனித செபஸ்ரியார் கோவில்வீதி, பெற்றா, மன்னார்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 17 - 12 - 1936



உதிர்வு 31 - 01 - 2006

**திரேசம்மா அருள்ராசா (பூவம்மா)**
**(நாவாந்துறை, யாழ்ப்பாணம்)**

சிறுவயதிலேயே எமது தந்தையை இழந்தோமே நீயே தாயாய் தந்தையாய் எம்மைப் பேணி வளர்த்து அன்பையும் அறிவையும் ஊட்டி சமூகத்திலேயே சிறந்த பிரஜையாக்கினாய். உமது இடைவிடா செபத்தினால் எமது குடும்பங்களிலே இறை அழைத்தல்களை பெருகச் செய்தாய். நீ எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆகிவிட்டது. பூப்போன்ற மென்மை உள்ளம் கொண்ட அம்மா பூமியில் உன் பிரிவால் நாம் படும் துயர் அறிவாயா? இரக்கத்தின் தந்தையே, உமது அடியாளாகிய எம் தாயை உமது வான்வீட்டில் சேர்த்தருளும். *பிரிவால் துயருறும்: பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 4ம் மாத நினைவு

மலர்வு 08 - 01 - 1961



உதிர்வு 21 - 10 - 2006

**திரு. சந்தியா ஜெகநாதன் (ராசா)**
**(சிறுத்தோப்பு, பேசாலை)**

அன்னை பிள்ளை சொந்தமெல்லாம்
சின்ன உலகாசை என்று
விண்ணுலகைத் தேடியல்லோ
விட்டு விட்டுச் சென்றுவிட்டீர்
விண்ணரசுத் தேவனவர்
வேண்டி உனைக் கையணைப்பார்
வெந்து மனம் வாடும்
உந்தன் வாஞ்சைச் சொந்தங்களும்
நொந்து இறை வேந்தனிடம் பாதமதில் தானணைக்க
சொந்தக் கண்ணீர் அத்தனையும்
கொட்டிக்கரம் ஏந்துகிறோம். *பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*


## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2232377


## நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக இனிமேல் ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர்ப் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.


இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம்.

# மன்னா

## மன்னார் மறைமாவட்ட யூபிலி நினைவுகள்

வெள்ளிவிழா மலர் | வெள்ளிவிழா நினைவு ஒலிநாடா








மறைமாவட்ட வெள்ளி விழா மலரின் விலை ரூபா 200, ஒலிநாடாவின் விலை 150, இவற்றை மன்னார் வளனகத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## அருட்தந்தை தேவராஜா அடிகளாரின் பொன்விழா சிறப்பு மலர் வவுனியாவில் வெளியீடு




அருட்பணி செ. அன்புராசாவின் முயற்சியில்

வவுனியா அமதிகள் கலைத்தொடர்பகத்தின் வெளியீடாக

## வெளிவருகிறது

## ஒலிநாடாக்கள் (Cassettes) ஒலிப்பேழைகள் (CD) வடிவங்களில்

பாரம்பரிய தவக்கால திருப்பாக்கள்


பாரம்பரிய தவக்கால திருப்பண்கள்

வியாகுல பிரசங்கங்கள் – 09










இந்த ஒலி நாடாக்கள் மற்றும் ஒலிப்பேழைகளை மன்னார் வளனகத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இதைவிட கொழும்பு 13, சென். அன்ரனிஸ் மாவத்தை இல.142இல் அமைந்துள்ள றன்ஸ்கா கடையிலும், திருகோணமலை மறைக்கல்வி நிலையத்திலும், மட்டக்களப்பு மறைக்கல்வி நிலையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் எமது மறைக்கல்வி நிலையத்தோடு தொடர்புகொண்டு இவற்றிற்குரிய பணத்தையும், தபால் செலவையும் அனுப்பினால் தபால் மூலம் இவற்றை அனுப்பி வைப்போம்.

**விலை விபரம்**

வியாகுல பிரசங்கம் - ஒலிநாடா (ஒவ்வொன்றும்) ரூபா 100
பாரம்பரிய தவக்கால திருப்பண்கள், திருப்பாக்கள் - ஒலிநாடா ரூபா 125
பாரம்பரிய தவக்கால திருப்பண்கள், திருப்பாக்கள் ஒலிப்பேழை - ரூபா 150

## புலமைப் பரிசில்பரீட்சை முடிவுகள்



ஜே. ஆன் சாளினி
173 புள்ளிகள்
1ம் இடம்



எல். அருள்ஷீபா
172 புள்ளிகள்
2ம் இடம்



ஏ. மிஷேல் றாஷ்மி
172 புள்ளிகள்
2ம் இடம்

கடந்த 2006ம் ஆண்டு நடைபெற்ற 5ம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் மன்/புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த 15 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். இதில் மாவட்ட நிலையில் 1ம், 2ம், 4ம், 6ம், 7ம் இடங்களையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைக் கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் யாவரும் வாழ்த்துவதோடு, இவர்களை ஊக்குவித்த ஆசிரியர்கள், பெற்றோருக்கும் நன்றிகள் கூறுகின்றார்கள். இவர்களை மன்னா பத்திரிகையும் வாழ்த்துகின்றது.

## மரண அறிவித்தல்

### அருட்தந்தை ச. சாமிநாதன் சோசை



**தோற்றம் 03.08.1926**
**அருட்சகோதரராக 08.09.1947**
**அருட்தந்தையாக 06.12.1982**
**மறைவு 06.02.2007**

வங்காலையை பிறப்பிடமாகவும், கொழும்பு மறைமாவட்டத்தில் அருட்பணி ஆற்றியவருமாகிய அருட்தந்தை சல்வதோர் சாமிநாதன் சோசை அவர்கள் கடந்த 06.02.2007 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் காலம்சென்ற சல்வதோர் சோசை, அன்னம்மாள் கூஞ்ஞ ஆகியோரின் மூத்த மகனும், என்றி பிலோமினாள் சோசை, காலம் சென்ற அன்று சோசை (ஓய்வு பெற்ற அதிபர்), அருட்சகோதரி மேரி அலிஸ் (தி.கு.க), மற்றும் பங்கிராஸ் சோசை (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இவர் கொழும்பு மறைமாவட்டத்தில் அருட்சகோதரராக 35 ஆண்டுகளும், அருட்தந்தையாக 25 ஆண்டுகளும் இறைபணி ஆற்றியுள்ளார். அருட்தந்தையின் இறுதி யாத்திரை நிகழ்வுகள் கடந்த 07.02.2007, புதன் கிழமை அன்று கொழும்பு பொறளை பேராயர் இல்லத்தில் அமைந்துள்ள சிற்றாலயத்தில் பேராயர் தலைமையில் நடைபெற்றது. இரங்கல் திருப்பலியின் பின்னர் கனத்தை சேமக்காலையில் இவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தொலைபேசி இல: 060-2230657 | தகவல் குடும்பத்தினர், வட்டாரம் 10, வங்காலை

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பில் நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது